Y 4
N29
67843

சாமிகளின் அடிமைகள்.

(மிஸ். காதரைன் மேயோ எழுதியது)

4- OCT 1929
MADRAS

திரிபுரம் ஆ. நடராஜன் அவர்கள்

மொழி பெயர்த்தது.

திராவிடன் பதிப்பக வெளியீடு

சென்னை.

1929

[1-8-0

சாமிகளின் அடிமைகள்.

(மிஸ். காதரைன் மேயோ எழுதியது)

OFFICE OF THE
4 - OCT 1929
MADRAS

திரிசிரபுரம் ஆ. நடராஜன் அவர்கள்

மொழி பெயர்த்தது.

திராவிடன் பதிப்பக வெளியீடு

சென்னை.

விலை] 1929 [1-8-0

காஞ்சிபுரம்
குமரன் அச்சு நிலையத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

67843

1929

நூன் முகம்.

இந்நூல், மொழி பெயர்ப்பு நூலாதலின், ஆக்கியோர் கருத்து, முன்னுரையாகவே பனுவல் செய்யப்பட்டுள்ளதைக் கண்டு கொள்ளுதல் சிறப்பாம். ஆயின் மொழி பெயர்த்தமை எற்றுக்கு எனின்; நம் நாடு அறிவிற்கு ஒவ்வாத பல மூடப் பழக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மிகுந்த சமூகத் தீமைகளைத் தன்னுட் பொதிந்து கிடந்து அடிமை நாடாய் அல்லற்படுகின்ற நிலைமையை, இந்நூல் வாயிலாய் இதனைப் படிப்போர்க்கு உள்ளத்தில் உணர்ச்சியை விளைக்கும் பொருட்டே என்று கூறுகின்றேன்.

பிற நாடுகளில் இத்தகைய தீமைகள் இலையா? இவைகளைப் பிற நாட்டினர் நமக்கு அறிவுறுத்த எழுந்தமை என்னை என்பாரும் உளர். யார் அறிவுறுத்தத் தலைப்பட்டாலும், தலைப்பட்டார் நோக்கங் காணாது கூற்றைக்கொண்டு சீர்தூக்கிப் பார்த்துப் பண்படைதலே நேரிய செயலென்றும் நாம் நன்கறிதல் வேண்டும்; பிற நாடுகளில் தீமைகள் செறிந்துள்ளன என்பது உண்மையே; ஆயினும், இவ்வுண்மையால் நம் நாட்டுத் தீமைகளின் உண்மை பொய்ப்படுவதன்றே!

எனவே அகநாடு புறநாடு என்னும் வேற்றுமையைக் கடந்து, பொறுமையுடன், அறிவுடன், அன்புடன் இந்நூலைப் படித்து, இதிற் கூறப்பட்டுள்ள தீமைகள் உண்மையிலேயே நம் நாட்டில் உள்ளனவா என்றும், உள்ளனவாயின் அவற்றை நாம் அகற்றும் முறை எப்படி என்றும்,

ஊன்றிச் சிந்தித்து ஒரு முடிவை எய்தி பிறநாடுகளிலும் நம் நாடு மேம்படத் திகழும் வகையில் நாம் உழைக்க ஒருப்பட வேண்டும் என்பது என் துணிபு.

நிற்க, மொழி பெயர்ப்பு, கடிதில் நிறைவேற்றப் பெற்றமையாலும், செந்தமிழ்ப் பதங்களை வழக்க நடையில் ஆங்கில மொழி நடைக்கொப்ப எடுத்தாளுதல் எளிதன்றாகலானும், மொழி பெயர்ப்பில் உள்ள குற்றங்களை அன்பர்கள் பொருட்படுத்தாமல் இருக்குமாறு வேண்டுகின்றேன்.

திரிசிரபுரம் ஆ. நடராஜன்.

கன்னி மேயோ எழுதிய

சாமிகளின் அடிமைகள்

OFFICE OF THE ... 4 OCT 1929 MADRAS

இஃது மேனாட்டாருக்கு

(முன்னுரை.)

சாளர வாயிற்கப்பால், மெத்தெனச் செழித்து, பச்சை நிறம் உயிர் கொண்டது என்று கூறுமாறு விளங்கும் ஆங்கில நாட்டுப் பசும்புல் தரை. பசும் புல் தரைக்கு அப்பால், சூரிய வெப்பத்திற்கு இலக்காய்த் தகதகவெனத் தங்கம்போல் ஒளிதரும் மஞ்சள் அலரி மலர்கள் பூத்த, செடிகள் நெருங்கிய பரந்த நிலம். இந்நிலத்திற்கப்பால் வயிரம் பாய்ந்த "பீச்சு" மரங்கள். மரங்களிடை, பாழடைந்த புதர்களடைந்த பாசம் பூத்த ஓர் ரோமானிய சாலை. மேலே, வானத்தில் வெள்ளிப் பாயல்களைக் கொண்ட மரக்கலங்கள் போன்று உலவும் மேகங்கள்.

அறைக்குள், எது பற்றியோ, எளிதில் உணரக்கூடிய ஆநந்தம்; இவ்வறையில் வசித்த பல தலைமுறைகள் ஒரு மனதுடன் வாழ்ந்து, தங்கள் எண்ணங்களால் இவ்வறையை வாழ்க்கைக்கு ஓர் துறைமுகமாகச் செய்தனர் போலும். இவ்வறையில் சூரிய ஒளியும் தென்றற் காற்றும் குடிகொண்டிருந்தன. அமைதியும் குடிகொண்டிருந்தது.

சுவர்களும், மாவேலைகளும் வெள்ளையடிக்கப் பெற்றிருந்தன. சுவர்களின் புறமாய் சட்டிகளில் உள்ள "காண்டர்பரிமணி"கள் (ஒருவகை ஊதாப் பூச்செடி) வெள்ளை வண்ணத்தில் ஊதாக் கொடிகள் ஓடியதுபோல் காணப் பெற்றன. ஒரு தாழ்ந்த நாற்காலியில் இவ்வீட்டுக்கு உரியவர் அமர்ந்திருந்தார். ஆண்மையாலும், உற்சாகத்தாலும், நற்குணத்தாலும் இவர் முகம் சிவந்து பிரகாசித்தது. தலைமயிர் கொக்கென நரைத்திருந்தது. புஷ்பங்களின் நிறத்தோடு ஒத்த ஊதா அங்கி ஒன்றைத் தரித்திருந்தார். அவர் இரு பக்கங்களிலும் இரண்டு ஜர்மானிய வேட்டை நாய்கள் இருந்தன. பாதங்களின் அருகாமையில், அயர் லாந்து தேசத்து "டெரியர்" நாய்க்குட்டிகள் பல ஒரு குப்பலாய்க் கிடந்தன.

"இவைகள்தாம் எனது தீண்டப்படாதவர்கள்" என்று புன்னகையுடன் மொழிந்து, தன் பக்கங்களிலிருந்த நாய்களின் தோள்கள்மீது தனது இரு கரங்களையும் வைத்தார். அந்தப் பெரிய நாய்களும் தங்கள் தலைகளால் இவர் கழுத்தை அணைத்தன.

இவர்தான் சென்னைப் பட்டினத்தில், 23 ஆண்டுகள் வரையில் கிறிஸ்தவ குருவாக உழைத்து வந்த மிகுந்தும் போற்றற்குரிய ஹென்றி உவைட் ஹெட் என்பவர். தனது பதவியினின்றும் விலகி விட்டவர் என்றாலும், இன்றும் இவர் பொதுவாக இந்தியர்களுக்கும், சிறப்பாக தீண்டப்படாத பலகோடி மக்கட்கும் ஊக்கத்துடன் உழைத்து வருபவர்.

நாங்கள் "இந்தியத் தாய்" என்னும் நூலைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். அது பொழுது, இவர் முன்

ஒரு முறை லண்டன்மாநகரில் ஒரு பொதுக் கூட்டத்தில் என்னூலைப் பற்றிக் கூறிய மொழிகளையே மீண்டும் என்பால் கூறினார்.

"தாங்கள் கூறியவற்றை நான் பிரசாரம் புரியுமாறு, அவைகளை எனக்கு தயவுசெய்து எழுதித் தருவீர்களா?" என்றேன். இந்நூலின் முற்பகுதியில், அவர் என் வேண்டுகோளுக்கு இணங்கி எழுதியளித்த பின் வரும் நிருபத்தை நான் எடுத்தாள்வது மிகவும் நலம் என்று கருதுகின்றேன்.

சல்ஹாம் நிலயம்,
பாங்குபோர்ன்,
ஜூன் 2, 1928.

அருமைக் கன்னி மேயோவுக்கு,

உன் நூல் (இந்தியத் தாய்) என் மனதில் எத்தகைய உணர்ச்சியை விளைத்தது என்று கூறுகின்றேன். அது புதிதான ஒன்றையும் எனக்குக் கற்பிக்கவில்லை. ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் வரைக்கும் இந்தியாவில் ஏற்பட்ட எனது அநுபவத்தின் பயனாய், நீ கூறும் சமூகக் கெடுதல்களையும், நடவடிக்கைக் கெடுதல்களையும் நானறிவேன். இவைகளிற் பலவற்றைப்பற்றி இந்தியாவில் அறுபது எழுபது ஆண்டுகளாகப் பேசிவருகின்றார்கள்; ஆற்றலுடைய இந்திய, ஐரோப்பிய சமூக சீர்திருத்த உழைப்பினர்கள் எல்லாம், இவைகட்குப் பரிகாரம் தேடிப் பார்த்திருக்கின்றார்கள். முற்றிலும் பயன்படவில்லை.

ஆனால் "இந்தியத் தாய்" எனக்கு ஓர் சமாதானத்தை விளைத்தது. இந்நூலைக்கண்டதும் இந்தியர்களை, அவர்கள் கொடிய இரக்கமற்ற கெடுதல்களை உணரும்படிக்கு, நான்

அதிகமாகப் பிரயாசை எடுத்து விழிப்பூட்டி யிருக்கலாமன்றோ, என்ற ஓர் எண்ணமும் எனக்கு உதித்தது.

நீ கூறும் கெடுதல்கள், இந்து மதத்தில் வேரூன்றிவிட்டன. கிறிஸ்துவப் பிரசாரமே எனது தொழிலாகையால், நான் என் கடமைக்கு ஏற்ப, பழங்களைப் பறித்து எறிவதிலும், வேரையே வெட்டி வீழ்த்திவிடுவதே மேன்மை எனக் கருதிவந்தேன். என் கருத்துப் பிசகாகவும் இருக்கலாம். கடவுளை அடையும்படிக்கு ஆணை வரும் முன்னரேயே, தவறை நினைத்து வருந்துதல் வேண்டுமென செயின்டு ஜான் பாப்டிஸ்டு கூவியழைத்தனரன்றோ?

உன் நூலில் ஒரு சிறிய குற்றம் உளது. நீ கூறும் கெடுதல்கள் யாவையும் இந்து மதத்தில் சம்பந்தப்பட்டுள்ளவையென்று நீ கூறியிருப்பினும், இதனை நீ வற்புறுத்திப் போகவில்லை.

தீமைகள் எல்லாம் மதத்தால் அநுமதிக்கப் பெற்றவை என்று இந்தியர்கள் கருதுவதனாற்றான் சமூக சீர்திருத்தம் புரிய முன்வந்த அரிய வீரமான முயற்சிகள் எல்லாம் வீணாயின.

விபசாரத்தை எடுத்துக்கொள்வோம். மேனாட்டார்கள் இயற்கையாகவே இந்தியர்களைப் பார்க்கிலும் தூய்மை உடையவர்கள் என்று நான் கருதவில்லை. ஆனால், நமது மதம் நேர்மைக்கும் தூய்மைக்கும் நிற்கின்றது. இங்கிலாந்தில் உள்ள கிறிஸ்துவக் கோயில்களாகிய செயின்ட் பால் கோயிலிலும் வெஸ்டுமினிஸ்டர் கோயிலிலும், பன்னூறு ஆண்டுகளாக கோவில்குருக்களின் உபயோகத்திற்கும் ஆராதனை புரிய வருபவர்களின் உபயோகத்திற்கும், விபசாரி

களை அமைத்திருப்போமாயின் நம் நிலைமை எவ்வாறு இருக்கும் என்று சிந்தனை செய். இந்நிலைமையில் சீர் திருத்தம் புரிய முன் வருபவர்கள் என்ன பலனை விளைக்கக்கூடும்?

கடவுளுக்கு விவாகம் செய்யப்பெற்ற சிறுமிகளும் மாதர்களும், பன்னூறு ஆண்டுகளாக தேவதாசிகள் என்னும் பெயருடன் தென்னிந்தியாவில் உள்ள கோயில்களில் இருக்கின்றார்கள். நீ இதைப்பற்றி ஒரு அங்கத்தில் வரைந்திருக்கின்றாய். உன்கூற்று முற்றிலும் வருந்தத்தக்க உண்மையே. விபசாரத்தை மத சம்மதத்தின்பேரில் தொழிலாகக் கொள்ளுவதன்றி இது வேறு என்னை?

உன்னூலைப் படித்தவர்கள் பலர் என்னைப்பார்த்து "யாது செய்வது?" "இதற்கு ஒரு பரிகாரமும் இல்லையா?" என்கின்றார்கள். உன்னூல் ஒன்றுமே முடியாது என்று கூறுவது போன்ற ஒரு உணர்ச்சியை விளைவிக்கின்றது. நான் இதனை ஒப்புக்கொள்ளவில்லை. எழுபது ஆண்டுகளாக, கிறிஸ்துவ மார்க்கமானது லட்சக்கணக்கான தீண்டப்படாத மக்களைக் கடை நிலையிலிருந்தும் அடிமைத் தன்மையிலிருந்தும் மேலேற்றி, அவர்கள் வாழ்வை மங்கள நல் வாழ்வாகச் செய்து வருகின்றது. இச்செய்கையே நீ கூறும் கையறு நிலையில் உள்ள இருளில் பிரகாசிக்கும் ஒளியாகும். தீண்டப்படாதார்கட்கு நன்மை இழைத்து வந்த, வருகின்ற கிறிஸ்து எல்லோருக்கும் நன்மை இழைப்பார். இந்தியர் கடைத்தேறும் மார்க்கம் ஒன்றே; இம்மார்க்கம் கிறிஸ்து கூறிய ஆத்ம சக்தியும், அன்புமாகும்.

உண்மை உள்ள,
ஹென்ரி உவைட் ஹெட்,
பிஷப்.

நான் இவர் கூறுவதை ஒப்புகின்றேன்; மேலும், கருமமே கண்ணாயின, பயன் கருதாத, தான் கூறும் மொழியில் அசையாத நம்பிக்கையைக் கொண்ட, கிறிஸ்தவர்களின் பிரசாரத்தால் இந்தியாவில் தீண்டப்படாத மக்கள் மட்டும் அல்ல, ஏனைய வகுப்பார்களும் கிறிஸ்து மதத்தைத் தழுவுவார்கள் என்று நான் கூறுவேன். இவர் கூறுவதை ஒப்புக்கொண்டே, நான் இதுபோது, 'இந்தியத் தாய்' இல் கூறிய ஒரு விஷயத்தைப் பன்மடங்கு வலியுறுத்திக் கூறுவேன்:—

பிரிட்டிஷ் இந்திய வாசிகளில் பெரும்பான்மையான மக்கள் இந்துக்கள். பெரும்பான்மையான இந்துக்களில் பெரும்பான்மையோர் வைதிகக் கொள்கைகளை உடையவர்கள். இப்பொழுது கையாளப்பெற்றுவரும் வைதிக இந்து மதத்தின் சம்பந்தமோ, கொள்கைகளோ தாம் இந்து சமூகத்தின் மகா பாதகமான தீமைகளாகும்.

இந்து இந்தியாவின் கடை நிலைமையை விளக்கிக் காண்பிக்கும் தீமையும், கொடுமையும், தவறும், நமது (மேனாடு) நாட்டிலும் காணலாம். ஆனால் இவைகளை நமது கிறிஸ்துவ மதம் அநுமதிக்கவில்லை. நாமாவது, நம் தலைவர்களாவது, நமது அரசாங்கமாவது இவைகளைப் போற்றியதும், அணைத்ததும், மறுத்ததும், சாட்டுகள் கூறி ஆதரித்ததும் இல்லை.

புகழ் சிறந்த சர். சுரேந்திரநாத் பானர்ஜி எனும் இந்து, நான்கு ஆண்டுகட்கு முன்னம் கூறியதாவது:—

“இந்தியாவின் சமூக விஷயம் மிகவும் அசாதநியமான சிக்கலான நிலைமையில் உள்ளது என்பதை மறைத்துக் கூறுவதிற் பயனில்லை. இந்துக்களின் சமூக விஷயங்கள், ஒன்று

தவறாமல் எல்லாமும், மதக் கொள்கையுடன் பின்னி நிற்கின்றன. ஆதலால் சமூக சீர்திருத்தம் புரிய முன் வருபவர்கள் பகுத்தறிவையும் நிலைமையையும் ஆயுதமாகக்கொண்டு, பகுதி தெய்வீகமானவை என்று கருதப்பெற்று வரும் இவைகளை (சமூகக் கெடுதல்களை) எதிர்த்துப் போராடி வெற்றி பெறக் கூடவில்லை.”

இவ்விஷயத்தைப்பற்றி அறிய விரும்புபவர்கள், இந்தியா சட்டசபையில் பாலிய விவாகத்தைப்பற்றி நிகழ்ந்த நடவடிக்கைகளை ஆராய்ந்தறிதல் நலம். இந்துக்கள் பாலிய விவாகத்தினால் தங்கள் சமூகம் நாளுக்கு நாள் அழிபடுகின்றது என்றும், பலம் குன்றுகின்றது என்றும் ஒரு புறம் கூறினார்கள். ஆனால் உடனே மறுபுறம் பாலிய விவாக நீக்கத்தால், வைதிகக் கொள்கைகளை தீவிரமாக மாற்றுவதால், இந்து மதம் முற்றிலும், சற்று குறைவாயும் பாதிக்கப்படும் என்றும் உரைத்தார்கள்.

பதினெட்டு மாதங்களாக தமது சமூகத்தின் முக்கியமான தீமைகளில் இந்தியாவில் உள்ள கற்றறிந்தவர்கள் மனம் ஈடுபட்டுள்ளது. இந்நிலைமை பெரும்பாலும் அமெரிக்கர்களும் மேனாட்டாரும் இந்து சமூகத்தை ஊன்றி நோக்குதலின் பயனும் என்பதையும் மறுக்க முடியாது.

இந்திய தேசியத் தலைவர்கள், தங்கள் சமூகத்தின் பழக்க வழக்கங்களை மேனாட்டார் கூர்ந்து பார்க்கின்றார்கள் என்றுணர்ந்து, அமிதமான வழிகளில் இறங்கி, மேனாட்டாரின் கவனத்தைத் திருப்ப முயற்சி செய்து வருவதும் உண்மைதான். இத்தகைய சூழல்களால்தான் இளமை தங்கிய மேனாட்டார் இந்தியர்களின் பண்டைய நாகரீகத்தைப் புகழ மறுக்கின்றார்கள் என்பதையும் அவர்கள் அறி

வார்கள். ஆனால், இந்தியாவில் சமூக சீர்திருத்தமே ஒரே கொள்கையாகக் கடைப்பிடித்து, சுயநலம் பாராமல் உழைக்கும் சமூக சீர்திருத்த உழைப்பினர்களும் இருக்கின்றார்கள். இவர்களுக்கு, சரித்திரத்தில் இதுவரையில் கேட்டறியாதவாறு உதவியும் ஊக்கமும் அளிப்பது, மேனாட்டார் இவர்கள் சமூக நிலையைப்பற்றி எழுதுவதும் உரைப்பதும் என்று இவர்கள் நன்கறிவார்கள்.

ஆதலின், இந்துக்களின் சமூக சூழல்களைப்பற்றி எடுத்துரைக்குங்கால், இச்செயலுக்கு மாறுபாட்டையோ, தாழ்வையோ, தடையையோ விளைப்பவர்கள், இந்துக்களின் முன்னேற்றத்திற்குத் தடையாய் நிற்கும் பகைவர்களுடன் ஒற்றுமைப் படுகின்றனர் என்று மொழிதல் கூடும்.

புணர்ச்சியை உட்கொண்ட சிசு விவாகங்களும், பெண்களை மிருகங்களாகப் புரியும் விஷயங்களும்; விதவைகளை விதவைகளாகவே இறுதிவரைக்கும் வாழப்புரியும் நிர்ப்பந்தங்களும் கொடுமைகளும்; கோயில் விபசாரமும், தீண்டாமையும், மிருக இம்சையும், இந்து மத சட்டங்களாக இருக்கும் வரையில், இவர்கள் செய்கைகட்கு எத்தகைய உயர்வான நோக்கங்களை ஆதாரமாக எடுத்துக் கூறியபோதிலும் கூட, இச்சமூகம் நாளுக்குநாள் அழிந்துபோகும் கதியைத்தான் அடைந்து வருகின்றது என்பது திண்ணம்.

இந்நூலில் கூறப்படும் பன்னிரண்டு கட்டுரைகளும் கதைகள் போல வரையப் பெற்றிருப்பினும் கதைகள் அல்ல; அவைகள் உண்மை வாழ்க்கையிலிருந்தும் எடுத்தாளப்பெற்ற நிகழ்ச்சிகள். கட்டுரைகளிற் கண்டுள்ள ஒவ்வொரு விஷயமும் இப்பொழுது வாழ்ந்துவரும் பலர் அளித்த நேர்முகமான, கைமாறாத, உண்மையான சான்று

கும். இவைகள் இன்றைய விஷயங்கள்; பண்டைக் காலத்து விஷயங்களல்ல. ஒவ்வொரு நிகழ்ச்சியும் இந்துக்கள் இந்தியாவில் உள்ள ஆயிரக்கணக்கான சம்பவங்களுக்கு உதாரணமாய் நிற்கும் தன்மையை உடையது. கட்டுரைகளின் அமைப்பு, இலக்கிய இலக்கண வரையறைக்கு உட்படாது, நிகழ்ச்சிகள் எழுந்தவண்ணமே காணப்படும். இக்கட்டுரைகள் "இந்தியத் தாய்" இல் கூறியுள்ள விஷயங்களை மீண்டும் எடுத்துரைத்து, இந்துமதத்தின் அழிவிற்கு ஆதாரமாய்க் காணப்படும் அரசியல் தொடர்பு இல்லாத, சமூக, மத, தீமைகளை வற்புறுத்திக் கூறும் பொருட்டே வரையப் பெற்றன.

பன்னிரண்டு கட்டுரைகளுள், பெண்களின் நிலைமையைப்பற்றி கூறுபவை, எல்லா இந்துக் குடும்பங்களின் பொது இலக்கணம் அன்று. இத்தகைய தீமைகள் இல்லாத, முன்னேற்றமுடைய அறிவுஉள்ள பல குடும்பங்கள் இந்தியாவில் இருக்கின்றன. ஆனால், இவைகள் இந்து சமூகத்தில் உள்ள உயரிய, தாழ்ந்த, செல்வ மிக்க, எளிய, பெரும்பான்மையான குடும்பங்களில் காணப்படும் நிலைமையை எடுத்துக் காண்பிக்கின்றன. சில விஷயங்கள், சில பகுதிகளில் மட்டுமே காணப்படுவனவாயினும், அல்லது சில வகுப்புகளில் மட்டுமே கையாளப்படுவனவாயினும், இவைகள் அசையாத அடிப்படையாய் உள்ள அறிவீனம், கொடுமை, இரங்காமை, துன்பம் முதலியவைகளை நன்கறிவுறுத்துவனவாம். அண்மையில், ஒரு இந்து நூலாசிரியர் கூறிய வண்ணம், தான் இருள் புறத்தையே காண்பித்துள்ளேன். என் கருத்து மனிதரை முகஸ்துதி கூறுவது அல்ல; சமூகத் தீமைகளை அவர்கள் உணர்ந்துகொள்ளுமாறு கற்பிப்பதே ஆதலின்.

உண்மையான பல விஷயங்களைக் கூறி, என் நூலை பிறர்க்கு இனிமைபயக்கத்தக்கதாகவும், கற்பனை அழகுபடைத்ததாகவும் வெளியிட முடியும். ஆனால், எண்ணிறந்த நூலாசிரியர்கள் மனதிற்கு இன்பம் விளைக்கத்தக்க இத்துறையில் ஏற்கனவே இறங்கி, அநேக நூல்களை வெளியிட்டுள்ளனர்; இந்து மதத்தின் உயரிய நோக்கங்களின் நுண்ணிய அழகை விளக்கிப் போகும் நூல்கள் பல் வகைகளிலும் பல உள. ஆதலின் என்னிரண்டாம் நூலாகிய இந்நூல், அதன் பரிதாபகரமான கொடுமைகளை விளக்கிக் காண்பிப்பதற்கு இடம் பெறின், இது மிகையாகுமா?

முதலாவது அத்தியாயம்.

[இக்கட்டுரை உண்மையாய் நிகழ்ந்த ஓர் சம்பவத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளது. முன்னும் பின்னும் எடுத்துக் காண்பிக்கப்படும் மேற்கோள்களைக் கொண்டு இது தொகுக்கப் பெற்றதன்று. மேற்கோள்கள் இந்தியாவில் தங்கள் சமூகத் தீமைகளை அறிந்த இந்துக்களின் உண்மையை விளக்கும் சான்றுகளேயாம். இக்கட்டுரையில் காணப்படுபவர்களின் பெயர்கள் உண்மைப் பெயர்களின் மாற்றங்கள்.]

அன்புடைய அக்கினிக் கொழுந்துகள்,

தன் குடும்ப அநுபவத்திலிருந்து விதவைகளின் நிலைமையைப்பற்றிச் செவ்வனே அறியாத ஒரு இந்துவைக் காண்பது அரிது. ஒரு விதவையின் வாழ்வு, துன்பம், கொடுமை,

பசினம், சஞ்சலம் முதலிய தீமைகள் இடைவிடாது நிறைந்ததாகும். குமாரகங்காநந்த சின்ஹா; இந்தியா சட்டசபை வாதங்கள்; 1927 செப்டம்பர் 15; 4414ம் பக்கம்.

"ஒரு குழந்தையின் முதலேழு ஆண்டுகளைப்பற்றி தெரிவிப்பாயானால் இறுதி வரைக்கும் அக்குழந்தையின் நடவடிக்கைகள் எத்தன்மைத்தாய் இருக்குமென்று நான் கூறிவிடுவேன்" என்பது ஓர் அறிஞர் உரை.

கமலா தேவிக்கும் இவ்வுரை பொருந்துமா? வட பாஞ்சாலக் காற்றிற்கே ஆண்மையை விளைக்கும் தன்மை உண்டு; கமலாதேவியும் வட பாஞ்சாலத்திற் பிறந்தவள். இவள் பிறந்த சிற்றூர் இராணுவப் பயிற்சி பெற்ற முஸ்லிம் சிற்றரசனின் விளக்க முடியா மனப்போக்கை ஆதரித்து வந்த உதவி கமிஷனர் துரையால், கூடிய வரையில் சுகாதாரமும் தூய்மையும் கொண்டு விளங்கியது. மேலும் ஓர் இந்துவாய் இருப்பினும் அழகிற் குறைந்த, சட்டமான், விளையாட்டுச் சேட்டை மிகுந்த, சிறுமியாம் கமலாதேவி, நாள் முழுதும் வெட்ட வெளியில் உறன்கொண்ட முஸ்லிம் சிறுவர்களுடன் விளையாடி வந்தாள்; இதன் பயனாய் பாஞ்சால நாட்டுச் சூரிய வெப்பத்தின் ஆற்றலும் காற்றின் ஆற்றலும் கமலாதேவியின் மனத்தினும் உடலினும் ஊன்றி ஆழ்ந்தன.

"அவள் ஒரு பையன் போன்றிருக்கின்றாள். அவள் உற்சாகமான மனது எனக்குப் பொழுது போக்கு அளிக்கின்றது. ஆதலின் 'அவளை அவள் பக்குவகாலம் வரையிலாயினும் நம்முடனேயே வசிக்குமாறு கடவுள் அருள் புரிவாராக!'" என்று கமலா தேவியின் தந்தை கூறுவது வழக்கம். "என் பிராண நாதா! கடவுள் அவ்வாறே அருள்

புரிவாராக" என்று தனது கணவன் வேண்டுகோளை கமலா தேவியின் தாயும் ஆமோதிப்பாள்.

கமலா தேவிக்கு ஆண்டு இரண்டு கூட சரிவர நிறையவில்லை. கமலா தேவி பிறந்த சிற்றூர், ஓர் முஸ்லிம் ஊராதலால், இவளுக்கு இரண்டு வயதிற்குள்ளாகவே மணமுடித்துவிட வேண்டுமென்று தந்தை கருதுவாரானார். மணமகன் தக்ககுலத்தில் அகப்படாமல், குலந்தவறிப்பெண்ணைக் கொடுப்பதால் ஆத்மாவிற்கு நரக அனுபவமே மேலிடும் என்று எண்ணி, கமலாதேவியின் தந்தை, குலம்மட்டில் ஒத்ததாய் இருப்பின் போதியதென்று, குலத்தில் ஒழிய, மற்றெல்லாத் துறைகளிலும் தாழ்ந்த ஒரு குடும்பத்தில் கமலா தேவியை மணம் செய்து கொடுத்தார். மணம் புரிந்து விட்டதும், எல்லாக் கவலைகளும் ஓய்ந்தன என்று கருதி, கமலாதேவிமீது இனி தன்னுடன் வசித்து வரும் வரையிலாயினும் முழு அன்பையும் செலுத்தி கமலா தேவிக்கு சுயேச்சையும் ஆதரவையும் தந்தை அளித்து வருவாராயினார். "நான் அவளை, அவளின் பன்னிரண்டாம் பிராயம் வரைக்காயினும் என்னுடன் வைத்திருப்பேன்" என்று அவர் அடிக்கடி சிந்திப்பார். மேற் கருதார்.

கமலாதேவிக்கு எட்டு வயது கூட முடியவில்லை; குழந்தைப் பருவம் நீங்கிவிட்டது.

இந்நிலைமையில், ஓர் தூதன் வந்து "அவள் கணவனின் தேக நிலைமை கமலா தேவியின் அவசியத்தைக் கோருகின்றது. ஆதலின் அவள் உடனே கணவன்பால் சேர்ப்பிக்கப் பெறுவது நலம்" என்றான்.

இதுவே கமலா தேவியின் வாணாட்களிலுள்ள விளையாட்டு நேரத்தின் முடிவாகும்.

"கமலத்தை அனுப்பவும் வேண்டுமோ? இன்னஞ் சிறிய தாயிற்றே; குழந்தை தானே?' என்றாள் தாய்.

"முட்டாளே! வாயை மூடு. அவள் நாதன் அவளை அழைக்கின்றான். நம்முடைய மகளால் நாம் வெட்கித்தலை குனிய வேண்டுமோ?" என்றார் விவசாயி.

எனவே பிரிவு ஏற்பட்டது; பிரிவின் முன்னம் தாய் கண்ணீர் விட்டுக் கதறினாள். தந்தை மிகுந்தும் துக்கித்தார். கமலா தேவி தென்றிசையில் நெடுந்தூரப் பிரயாணத்தில் உள்ள கணவன் மனைக்குக் கூட்டிச் செல்லப் பெற்றாள். கமலா தேவியின் தூய்மை யுடைய, குழந்தை உடம்பின் சேர்க்கையால் கூட, கணவன் ஆயுள் நீடிக்கவில்லை. பழைய விதிகளும் பொய்த்தன. அவன் ஒரு வாரத்தில் இறந்து போனான். கமலா தேவி, ஒரு ஏக குடும்பத்தின் விதவையானாள். இந்துக்களின் ஏக குடும்ப வாழ்வைப்பற்றி எத்தனையோ கூறலாம்; இவ்வழக்கப்படி பல தலைமுறைகளில் பிறந்த நேரான சந்ததிகளும் கிளைச் சந்ததிகளும் ஒன்று கூடி ஒரே வீட்டில் வசிப்பார்கள். எட்டு வயதுள்ள கமலாதேவியின் அநுபவம் இதுவே. பல சந்ததிகளால் ஆய பதினேழு நாத்திகளின், குறிப்பாக வீட்டுக்கு அரசியாகிய மாமியின், வசைக்கும் ஏவலுக்கும் உட்பட்டாள்.

'பேயே! பைசாசமே! எமலோகத்திலிருந்து வந்த மூதேவி முண்டையே! நீ பாவியாய் இல்லாத பக்ஷத்தில் என் மகன் காளைபோல் இன்றைக்கும் இருப்பானே! உன் ஏழேழு ஜென்மங்களிலும் நீ பாவம் செய்யாமல் இருந்திருப்பாயானால் என் மகன் இறவாமல் இருப்பானன்றோ! நீ என்றைக்கும் கடைத்தேற மாட்டாய்! உன் இழவு எடுக்க!

நீ அடுத்த ஜென்மத்தில் குருட்டு வண்டாய்த்தான் பிறக்க வேண்டும்! நீ—'என்று கிழவி அலறுவாள். கிழவி மூச்சு விடுமாறு தனது வசைகளை நிறுத்தினாளாயின், இவ்வசைச் சங்கிலியின் தொடர்பை, மற்றைய பெண்கள் எல்லாம் ஒவ்வொருவராய் எடுத்துக் கொண்டு, வசைக்கும் சாபத்திற்கும் குறைவு வைக்காமல் பேசுவார்கள். இத்தகைய வசை மொழிகளுடன் தான் கமலா தேவிக்கு, பல கொடிய தாழ்மையான வேலைகளையும் கட்டளையிடுவார்கள். இத்தகைய வசை மொழிகள்தாம், இந்து விதவையாகிய கமலா தேவியின் வறண்டுபோன அற்ப உணவிற்கு உப்புச் சுவை ஊட்டியது.

தன் இருப்பிடமாகிய இருளடைந்த மூலையினின்றும், குடும்ப வேடிக்கைகளில் கலந்துகொள்ள வெளிப்படுவாளானால், உடனே, எல்லோருமாகச் சேர்ந்துகொண்டு மீண்டும் அவளை அவள் மூலைக்கே வெருட்டிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள். ஏனெனில் கமலாதேவியின் கொள்ளிக் கண்கட்கு அவர்கள் உண்மையாகவே அஞ்சினார்கள். தன் கதியை நினைக்கத் துக்கம் மேலிட்டு, தேம்பியழுதவண்ணமாகவே கமலாதேவி, தன் இருள் மூலையில் தூங்கிப்போவதுண்டு. தூங்கினாள் என்று கண்டவுடன், அவளை அவர்கள் அடித்து உதைத்து எழுப்பி வேலையிட்டு, அவள் அழகற்ற முகத்தைப் பார்த்து நொடி கூறுவார்கள்.

இவ்வாறாகச் சில ஆண்டுகள் சென்றன.—இவ்வாறாகவே, கோடிக் கணக்கான "பாவிகள்" அடிமை இந்து விதவைப் பெண்கள் இந்தியாவில் உயிருடனும் இருக்கின்றனர். கமலாதேவி மனம் மட்டும் சுயேச்சை எண்ணத்தை வகித்து நின்றது. அற்ப உணவுடன், தனது வலிமைக்கு

மிஞ்சிய வேலைகளைச் செய்த கமலா தேவியின் உடம்புகூட நாளுக்குநாள் வளர்ச்சி பெற்று, பன்னிரண்டாம் ஆண்டில் பக்குவம் அடைந்தது. முகத்திலும் பருவத்திற்குரிய களை விளங்கிற்று. ஆனால், இவளுக்கு ஏற்பட்ட அழகு, பகைவர்கள் கண்கட்குப் புலப்படுவது எங்ஙனம்?

கமலாதேவிக்கு இப்பொழுதுதான் சனியன் பிடிக்க ஆரம்பித்தது. தனது கொழுநனின் மூத்த சகோதரனாகிய கிருஷ்ணன், கமலாதேவி மீது இச்சைகொள்ளத் தலைப்பட்டான். இவர்கள் குலமுறைப்படி, இளைய சகோதரனின் மனைவியை, விதவையானபின், கணவனின் சகோதரன் மணம்புரியலாம். எனவே கிருஷ்ணன், கமலா தேவியை மணந்து தனது இச்சைக்கு அடிமைப்படுத்த ஆவல்கொண்டான்.

கிருஷ்ணன் கொடியவன்; அசுத்தம் நிறைந்தவன்; நாற்றம் பிடித்த கிழவன். ஆகவே, இவனைத் தொடவும் கமலாதேவியின் நெஞ்சம் நடுங்கிற்று. என்றாலும், குடும்பம் முழுதும், கமலா தேவியை வேட்டை நாய்கள்போல் சூழ்ந்துகொண்டு, கிருஷ்ணனை மணக்கும்படிக்கு வற்புறுத்தினார்கள். கிருஷ்ணனை மறுமணம் புரிந்துகொண்டால் விதவைத் தன்மை நீங்கி சுமங்கிலியாய் இருக்கலாம் அன்றோ என்று அடிக்கடி இடித்துரைத்துப் பேசலானார்கள்.

மேலும் குடும்பத்தில் பொருள் செலவு நேராமல் முறையான சந்ததி விருத்தி ஏற்படும் என்றும் கருதலாயினர். ஆதலின், பகலும் இரவும் ஓயாமல், கிருஷ்ணனும் அவன் குடும்பமும் கமலாதேவியை இச்செய்கைக்கு உடன்படுமாறு நெருக்கிவந்தார்கள்.

"நான் கிணற்றில் வீழ்ந்திறப்பேன்" என்று ஓர் நாள் கமலாதேவி, இவர்கள் வற்புறுத்துதலை எதிர்த்து மறுமொழி கூறினாள். இந்து விதவைப் பெண்களுக்குத் தற்கொலை ஒரு பெரிதல்லவென்பதை கமலாதேவியும் அறிவாள்.

அடுப்படியில் இருந்த கிழ மாமி, இதனைச் செவியுற்றதும், அடுப்படியிலிருந்துகொண்டே "இங்கு வா" என்று ஓர் அலறு அலறினாள். கமலாதேவி, கிழவியை நெருங்கியதும், உடனே கமலாதேவியின் காத்தைப்பற்றி, கொதித்துக்கொண்டிருந்த அரிசிக் கஞ்சியில் மாமி கமலாதேவியின் காத்தைத் தோய்த்துவிட்டாள். "நீ தற்கொலை புரிந்துகொண்டால் எங்கள் குடும்பத்திற்குத் தண்ணீர் கொண்டு வருவது யார்? வேலை செய்வதும் யார்? தற்கொலை செய்துகொள்ளுவேன் என்ற உன் மொழிக்கு இதுவே படிப்பினை பயக்கட்டும். உன்னைப் பேய் பிடித்திருக்கின்றது என்பது உண்மையே. நீ முஸ்லிம் சிறுவர்களுடன் விளையாடி முற்றிலும் கெட்டுப்போய்விட்டாய். எந்த இந்து விதவையேனும் உன்போல் சண்டித்தனம் புரிவதுண்டோ? செத்துப் போய்த் தப்புவித்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்தைக் கனவிலும் நினையாதே. நாங்கள் உன்னை விட்டுவிடுவோம் என்று நினைத்துக்கொண்டிருக்கின்றாயா, என்ன?" என்றாள் கிழவி.

எனவே, இனி இவர்களின் காவலில் இருந்து தப்பி, தற்கொலை புரிவது கூடாத செயல் என்று கமலாதேவி அறிந்தனள்; ஆயினும், வாழ்வதற்கும் இவள் மிக்க அச்சம் கொண்டாள்; ஏனெனில், இந்தக் குடும்பத்தார், காலப் போக்கில், தனது உறுதியைக் குலைத்து சகிக்கொணாத கிருஷ்ணன்பால் ஓர் நாள் ஒப்படைத்துவிடுவார்கள் என்று கமலாதேவி கருதினாள்.

கமலா தேவியின் வலதுகை, கஞ்சியில் தோய்க்கப் பெற்றதனால் கொப்பளித்துவிட்டது. என்றாலும், தனது காலை வேலையாகிய பசுஞ் சாணத்தை அடையாகத் தட்டி சுவற்றில் ஒட்டிக் காயவைக்கும் தொழிலை இவள் நிறுத்திவிடவில்லை. ஏற்கனவே அடுக்கடுக்காய் இவள் தட்டிய எருமுட்டைகள் சுவற்றில் உலர்ந்துகொண்டிருந்தன. ஒவ்வொரு முட்டையிலும், கமலாதேவியின் சிறு விரல்களின் அச்சுக்கள் இருந்தன. நூற்றுக் கணக்கான எருமுட்டைகள், கமலாதேவி எட்டக்கூடிய உயரம் மட்டும் சுவர்மீது காணப்பெற்றன. ஆயினும்கூட, ஒரு பெரும் சாணக் குவியல் எஞ்சி நின்றது. கமலாதேவி கனவு காண்பதுபோல் தன் வேலையைச் செய்துவந்தாள். பகற்கனவு கண்டுகொண்டிருந்த கமலத்தின் செவியில் கீழ்வரும் சொற்கள் விழுந்தன.

"...சதி. பிரிட்டிஷார் நமது நாட்டைக் கைப்பற்றுவதற்கு முன்னர், சத்திய யுகத்தில், நமது இந்துப் பெண்கள் மனத் தூய்மையும் தீரமும் கொண்டிருந்தார்கள். அரசி முதல் அடிமை வரையில், தம் கணவர்கள் இறப்பின், கணவனின் பிரேதத்துடனேயே தாங்களும் உயிர்விட உற்சாகம் கொண்டிருந்தனர்; அக்கினியில் வீழ்ந்துயிர் துறந்து, புனித ஜன்மம் படைக்கப் பின்வாங்கினார்களில்லை. ஆனால், பிரிட்டிஷாரோ, நமது பண்டைய நாகரீகத்தின் கொடிய பகைவர்களாய்த் தோன்றி, நமது பெண்மக்களின் இவ்வுயரிய உரிமையை அழித்துவிட்டார்கள்.

"ஓ! இந்து விதவைகளே! ஆயிர வகைப்பட்ட துக்கங்கட்கு உட்பட்டவர்களே! நீங்கள் சதி மட்டும் செய்துகொள்வீர்களாயின், இப்பொழுதுள்ள சென்மத்தைப் பார்க்

கிலும் சுகமான, உயர்வான, புனிதமான நற்சென்மத்தில் தாங்கள் இருக்கலாமன்றோ என்று உங்கள் உயிரிழந்த கொழுநர் நன்கறிவார்கள். அந்தோ! நீங்களும் நம்மை ஆழ்த்தி வைத்திருக்கும் அரசாங்கத்தாரின் சூழ்ச்சிக்குள்ளானீர்கள்!

"தலை வணங்காத, உரன்கொண்ட, நீங்கள் இப்போது மெல்லியவர்களாய் கோழைகளாய்விட்டீர்கள். உங்கள் கொழுநருக்கு இறுதி வரையில் உழைக்க மனவுண்மை அற்று நிற்கின்றீர்கள். இத்தகைய ஒரு செயலால் நீங்கள் உங்கள் கொழுநரின் குடும்பங்களைப் புகழிலும் நற்பயனிலும் ஒப்புயர்வற்று மேலேற்றலாம் என்பதையும் கருதுகின்றீர்கள் இல்லை. பிரிட்டிஷார் தங்களது பொறாமையால் உங்கள் ஆத்மாக்களைத் தாழ்மைப்படுத்திவிட்டார்கள். சத்திய யுகம் போனது!—போனதே!"

என்று தனது குடும்பத்தில் இருந்த ஒரு பள்ளிக்கூடத்துச் சிறுவன், ஒரு தேசீய விளம்பரக் கடிதத்திலிருந்தும் இசைபோட்டுப் படித்துக்கொண்டிருந்தான். ஓசை வரும் புறம் கமலாதேவி தனது கடைக்கண்ணாற் பார்த்தாள். இதனைச் செவியுற அக்குடும்பம் முழுதும் சூழ்ந்து நின்றது. ஒவ்வொருவரும் விளம்பரத்தைப் படித்துக்கொண்டிருந்த இளைஞன் வாயைப் பார்த்தவண்ணமாகவே இருந்தனர். இந்த ஒரு நேரத்திற்றான், கமலாதேவியை இக்குடும்பத்தார் மறந்திருந்தனர்போலும்! சாணம் தட்டிக்கொண்டிருந்த கமலாதேவி உடனே மெல்ல வாசல்முற்றத்தைவிட்டு நிழல் போல் ஓசைப்படாமல் வெளிநடந்தாள்.

சில நாழிகைகள் சென்றன; கமலாதேவியைத் தேடிக் காணாது, கூச்சலிட ஆரம்பித்துவிட்டனர். மதியத்தில்

வெளியே சென்றிருந்த குழந்தை மீண்டும் தானாக இவர்கள் முன் தோன்றி நின்றது.

"நான் ஆற்றுக்குச் சென்றிருந்தேன். அங்கு நான் முறைப்படி நீராடி வந்திருக்கின்றேன்." என்று கமலாதேவி கூறினாள். ஓசை ஒரு பிரேதத்தின் வாயிலிருந்து வந்தது போல் உயிரற்று இருந்தது. குழந்தையின் வாயினின்றும் வெளிப்பட்டதாகத் தெரியவில்லை. "மாலைக்குள் நான் தீப் பாய்வேன். சாமிகளின்மீது ஆணையிட்டிருக்கின்றேன்" என்றாள்.

"என் மகன்பால் மீண்டும் அவன் மனைவி சேரும் நன்னாளாம் இன்னாள் வாழி! என் குடும்பத்தை உயர்வுபடுத்தும் நன்னாளாம் இன்னாள் வாழி! என் குடும்பத்தின் உயர்வின் பொருட்டுத் தீப்பாயும், எல்லாப் பெண்களிலும் என்னை மேலாக்கும் நன்னாளாம் இன்னாள் வாழி!" என்று ஆநந்தித்தாள் கிழவி. "இவள் உறுதியுடன் இருப்பாளா?" என்று மூச்செறிந்தார் சில இளமங்கையர்.

"அவள் விழிகள் கூறுகின்றன; அவள் மாறமாட்டாள்" என்று கிழவி விடையளித்தாள்.

உடனே, வீடு முழுதும் ஆரவாரம் மிகுந்தது. பூரித்தனர்; ஆநந்தித்தனர்; தீப்பாயும் கிரியைக்கு வேண்டிய முயற்சிகளைச் செய்ய முற்பட்டனர். தீப்பாயும் விதவைகட்கு வழக்கமாய் உடுத்தும், பட்டும் நூலும் கலந்து நெய்த "மஷ்ரூ" என்னும் உடையை ஓடோடிச் சென்று கடையிலிருந்து வாங்கிக்கொண்டு வந்துவிட்டார்கள். ஊர் முழுதும் செய்தியையும் பறையறைந்துவிட்டனர். விதவையானபின்னர் அணியாத அணிகலன்கள் எல்லாம் இப்போது கமலாதேவிக்குப் பூட்டினார்கள். தங்கள் குடும்பத்தில் மூலை

முடுக்குகளில் கிடந்த எல்லா நகைகளும் கமலாதேவி உடல் மீது ஏறின. அக்கம்பக்கத்து வீடுகளில் இருந்தும் இரவல் வாங்கிக்கொண்டுவந்த ஆபரணங்களுக்கு அளவில்லை. கமலா தேவி நகைகளின் சுமை தாங்க முடியாது களைத்தபின்னர், அவளை அவர்கள் தூக்கி ஒரு சிறந்த பல்லக்கின்மீது அமர்த் தினார்கள். பார்க்க, ஒரு கோயிற் சிலைபோல் கமலாதேவி சகல வைபவங்களுடனும் விளங்கினாள். பிறகு அடிமேல் அடிவைத்துப் பல்லக்கைத் தூக்கிக்கொண்டு செல்ல ஆரம் பித்துவிட்டனர்.

பஜனை முழங்கியது; மேள தாளங்கள் வழங்கின; கூட் டத்தின் பரவசப் பேரொலி கிளம்பியது; கிராமமே ஊர் வலத்தைப் பின்தொடர்ந்தது.

சுமை நிரம்பிய மாட்டு வண்டி ஒன்று பல்லக்கின்பின் சென்றது.

“பழைய மயானத்திற்குச் செல்லவேண்டாம்! அங்கு எல்லோரும் வருவார்கள். யாரேனும் ஒரு வெள்ளையன் நம்மைக் கண்டுவிடுவான். இரட்டைக் கிணற்றண்டை உள்ள நந்தவனத்திற்குச்செல்லுவோம்” என்றார் ஒரு வயது முதிர்ந் தவர். எனவே, தெருவிலும், வளமிக்க வயலிலும், கனி மாச் சோலையிலும், சதுப்பு நிலத்திலும், நாணற் புதரிலும், முறையே இவ்வூர்வலம் சென்று இறுதியாக, அறுபது அடி கட்கு மேல் வளர்ந்த மரங்கள் வரிசையாய் நெருங்கி நிறைந்த ஓர் வேலியைக் கடந்து நின்றுவிட்டது. மர வேலிக்கு அப்பால், ஓர் பழமையான நந்தவனம் காணப் பெற்றது. இவ்வனத்தில் பூஞ்செடிகளேனும், முறையாய் வளர்க்கப்பெற்ற மற்றைய செடிகளேனும் இல்லை. பாரா

முகமாய்க் கைவிடப்பெற்று, வளர்ச்சி குன்றி, காடு பாய்ந்த பல பல மரங்கள் தலை தூக்கி நின்றன.

இந்த நந்தவனத்தில் நன்கு தழைத்துப் பம்படித்த பல கிளைகள் நிறைந்த ஓர் பெரிய மரம் இருந்தது. இதன் கீழ், புல் பூண்டு வளராமல் வெறுந்தரை காணப்பெற்றது. இந்தத் தரையில் வண்டி முழுதும் நிறைத்திருந்த எருக் களைக் கொட்டிக் குவித்தனர். எருக்களில் கமலா தேவி யின் சிறிய விரல்களின் அச்சுக்கள் விளங்கின. இவ்வெருக் களை ஐந்து அடி நீளத்திலும் மூன்று அடி அகலத்திலும், ஒரு படுக்கைபோல் அடுக்கினர்.

பின்னர், கமலாதேவி அணிந்திருந்த ஆடைகளையும், அணிகலன்களையும் களைந்துவிட்டு, அவளை எருமுட்டைப் படுக்கையில் நீட்டிப் படுக்க வைத்துவிட்டனர்.

கமலாதேவி அசைவற்றுக் கிடந்தாள். அசைவும் பேச்
சும் கமலாதேவிக்கு அடைத்துப்போயிற்று. கல்போல்
கிடந்தாள். உடனே, முகத்தையும் வலது கையையும் மட்
டும் நீக்கி உடம்புமீது எருமுட்டைகளை அடுக்கிவிட்டனர்.
சுடுகஞ்சியில், கொப்பளித்த, இவள் வலது கரத்தில், ஒரு
வைக்கோற்கழுத்தைக் கொளுத்திக் கொடுத்தனர்.

கமலா தேவியின் சிறிய விரல்கள் மூடிக்கொண்டன—
அவ்வளவுதான்—வைக்கோலும் சாம்பராய் விழுந்தது.

இந்நிலையில், வலிமை மிகுந்த, உயரமான, மனிதர்கள்
எல்லாம், காட்டத்தின் புறமாய் நெருங்கிப் பரவசம் அடைந்
தனர். ஏனெனில், 'இப்பொழுதுதான், தன் பெரிய கண்
களைத் திறந்துகொண்டு, கமலா தேவி தன் இதழ்களால்
தன் காட்டத்திற்குத் தீ வைக்கும்படிக்குக் கட்டளையிட்
டாள். உடனே குருக்களும், மண் எண்ணெய்யினையும்,

பசு நெய்யினையும், எருமுட்டை அடுக்குகளின்மீது ஊற்றி காட்டத்திற்குத் தீ வைத்துவிட்டார்.

புகையும், தீக்கொழுந்துகளும் உயர்ந்தன; இத்துடன் கூட்டத்தின் ஆரவாரமும் உயர்ந்தது; வாத்தியங்களின் ஓசை செவிடுபடுத்திற்று; மேளங்கள் முழங்கின; இப்பேரொலியிடை, காட்டத்தில் உயிருடன் தீக்கிரையாகும் குழந்தை சகிக்கொணாத் துன்பத்தால் அலறியிருப்பினும், அவள் அழுகைக்குரல் செவிபுகுமோ?

"நான் என் அநுமதித்தேன் என்றே எனக்குத் தெரியவில்லை. துரை என்னைக் கோபித்துக் கொள்ளாமல் இருக்கவேண்டும். சதியைச் சட்ட மூலமாக நிராகரித்துள்ளது. என்றாலும் இந்தப் பெண் என் சிற்றூரின் எல்லைக்குட்பட்டவள் அன்று. இவள் நெடுந்தூரத்திலிருந்து இங்கு வந்தவள். ஆதலின், இதற்கும் எனக்கும் ஒருவகையான தொடர்பும் இல்லை. அவரவர்கள் குடும்பத்தைப் பொறுத்த செய்கை ஆயினும் இந்துக்களாய நமக்கு இது ஒரு பெறும் தூய்மை மிக்கத் திருநாளாகும்; நம் கிராமத்தின் புகழை அதிகப்படுத்தும் செயலாகும்; இத்தகைய செயல்கள் வரவரக் குறைகின்றன. கடவுள் அருள் புரிவாராக" என்றான் கிராமத்தலைவன்.

இந்திய பழக்க வழக்க குறிப்புகள்.

இந்துக்களின் சட்டம் பல மனைவிகளை மணம் புரிய இடமளித்தலால், எங்கு தன் மருமகன் வேறு பெண்ணைப் பார்த்துக்கொண்டு மறு மணம் புரிந்து விடுவானோ என்று அஞ்சி, பெண்களைப் பெற்றோர்கள் தமது பெண்களைக் கணவன் வேண்டிய உடனேயே மருமகன் வீட்டிற்கு அனுப்பி வைத்துவிடுவார்கள்.

டாக்டர் (மிஸ்ஸஸ்) எஸ். முத்துலக்ஷ்மி ரெட்டி (இவர் முதன் முதலாக சட்ட சபையில் அங்கத்தினராய பெண்; சென்னை சட்ட சபையின் உபதலைவராய் நியமிக்கப் பெற்றார். வைத்தியத் தொழிலில் புகழ் சிறந்தவர் ஊக்கத்துடன் சமூக சீர் திருத்தங்கட்கு உழைப்பவர்.) சென்னை சட்டசபை நிகழ்ச்சிகள்; மார்ச்சு 27, 1928. பக்கம் 43.

இள வயதில் மணம் புரியும் வழக்கமே, இந்தியாவில் பெண் கல்விக்குப் பிரதானமான தடையாகும். மற்றும் பல்வேறு துறைகளில் இந்தப் பழக்கம் கொடிய தீமைகளைப் புரிந்துவருகின்றது. இப்பழக்கத்தின் பயனாகவே பரிதாபகரமான நிலைமையில் விதவைகளின் தொகை மிகுந்து வருகின்றது. நமது நாகரீகத்திற்கு இது ஒரு பெரும் இழுக்காகும்—ஸ்ரீமதி பார்வதி சந்திரசேகர அய்யர்.

(பெங்களூர் ஜில்லா சபையின் முதல் பெண் அங்கத்தினர். மைசூர் மாஜி நீதிபதியின் மனைவியார்.) ஸ்ரீதர்மம், ஆகஸ்டு 1927.

பல்லாயிர ஆண்டுகளாக வைதிகப் பார்ப்பன வகுப்பார் நடைமுறையிற்கொள்ளும் இந்து மத தர்மத்திற்கு, இம்மசோதா, (பாலிய விவாகத் தடை மசோதா. இது 1927ல் செப்டம்பரில் இந்தியா சட்டசபையில் வாதிக்கப்பெற்றது.) முற்றிலும் எதிரிடையாகும் என்று நாம் இதனால் அதிகாரத்துடன் மொழிகின்றோம்............வைதிக கொள்கைகளை மீறிய இத்தகைய சட்டங்களை நாம் எக்காரணம் பற்றியும் ஆதரித்தல் கூடாது-இந்துமத வைதிக தர்மப் பிரதம மடத்திற்கு அதிபதியாகிய ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமி[illegible]ர்; கும்பகோணம். பிப்ரவரி 15, 1928.

அறிஞர் பலரும் சிறப்பாக வைதிக வகுப்பாரும் இம்மசோதாவை எதிர்க்கின்றனர். சாத்திரங்களை ஆதாரமாகக் காண்பித்து சிசு விவாகம் மத ஆணையென்று கூறுகின்றார்கள். மேலும், இளைய வயதில் மணமளிப்பதனாற்றான் பெண்கட்குக் கற்பு நிலைக்கும் என்றும் மாற்றுரை பகர்கின்றனர் —திரு. பி. கே. ராய் அவர்களின் மனைவியார்; வங்காள மாகாணப்பெண்கள் மகாநாட்டில் ஆற்றிய சொற்பெருக்கு. கல்கத்தா வாராந்திர ஸ்டேட்ஸ்மான் பத்திரிகை; ஜுலை26, 1928.

ஒவ்வொரு ஆண்டும் நீதி மன்றங்கள் முன்பாக, கள்ளமாய் நடாத்திய சதி (தீப்பாய்தல்) வழக்குகள் வந்துகொண்டே இருக்கின்றன...இவைகளைப் பொருள்படுத்த வேண்டியதில்லை. ஆனால், இவைகளால் பொது மக்களிடை பெரும் கிளர்ச்சி நிகழ்கின்றது. 1927ல் ஒரு பெண் இவ்விதமாக இறந்தாள். இவள் அவ்வூருக்கு ஓர் வீர பத்தினி ஆயினள். பல ஊர்களிலிருந்தும் சதி புரிந்துகொண்ட இடத்திற்கு ஜனத்திரள் கும்பல் கும்பலாய்ச் சென்று பார்த்தனர். இவ்விதமாகவே தங்கள் வீடுகளிலேயே மண் எண்ணெயினை ஊற்றிக் கொளுத்திக்கொண்டிறந்த பல நிகழ்ச்சிகளையும் வங்காளப் பத்திரிகைகள் பிரசுரம் புரிகின்றன—திரு. ஜி. டி. காராட், ஐ. சி. எஸ். இந்தியா நிலைமைக் குறிப்பு நூல்; ஜானதன் முனை; லண்டன்; 1928; பக்கம் 235.

1928 நவம்பர் முதல் வாரத்தில் காசியில்; அகில இந்தியா பார்ப்பனர் மகாநாடு கூடியது. அதுகாலை 300பண்டிதர்களும் சாத்திரிகளும் குழுமியிருந்தனர். மகாநாட்டின் ஆடம்பரமான சமஸ்கிருதத்தில் நிறைவேற்றப்பெற்ற தீர்

மானங்கள் குறிப்பிடத் தக்கவையாம். உதாரணமாக 1ம் 3ம்:-பெண்கள் 8வயதிலேயே மணம்புரிந்துதவப்படவேண்டும்; எட்டிலாகாவிடில், ஒன்பதிலாயினும், பத்திலாயினும்; முடியர்த காலத்தில், இறுதியாக பூப்பு நிகழ்ச்சி வயதின் முன்பாகவே. —எட்டு வயதிலிருந்து பூப்பு நிகழ்ச்சிக்கு முன்பாக மணம் புரிவதை சட்ட மூலமாகத் தடை செய்வது முற்றிலும் நேர்மையானதன்று—டைம்ஸ் ஆப் இந்தியா பம்பாய், டிசம்பர் 17, 1928.

(குறிப்பு) இக்கட்டுரைக்கு அன்பான அக்கினிக் கொழுந்துகள் என்று பெயரிட்டது என்னை எனின், கமலா தேவி, தன் கொழுநன் குடும்பத்தார்கள் அன்பிலும், எரு முட்டைகள் தீயினின்றெழும் கொழுஞ் சுடர்களை அன்பானவை என்று மதித்து தீயை அணைந்தமையின். ஆ. ந.

இரண்டாம் அத்தியாயம்.

விஷச்சிலந்தி.

பெற்றோர்கள் தங்கள் இளம் பெண்களை முதிர்ந்த வயதுடையவர்கட்கேனும், கிழவர்கட்கேனும் மணம் புரிந்தளிப்பதில் வருந்துவதில்லை. டாக்டர் மாலினி பி. சக்தாங்கர அம்மை, குழந்தைகள் மருத்துவம் (கௌரவம்), காமா, ஆல்பிளசு வைத்திய சாலை; இணைக்க வயது ஆராய்ச்சிக் கழகத்தின் முன்பாக, பம்பாய் பட்டினத்தில் கூறியது.

முகமது அப்துல் என்பவர் ஓர் முகமதியத் துறவி. இவர் அன்பே வடிவாய் இருந்தமையின், மனிதர்கட்கு நல்லாசி கூறுவதையே தொழிலாகக் கொண்டிருந்தார்; இது பற்றியே இவர் பூசஞ்சாரம் செய்துகொண்டு வந்தார். ஓர் நாள் தனது சஞ்சாரத்தில், இவர் ஆப்கானிஸ்தானத்தின் தென்னெல்லையைக் கடந்து, இப்பொழுது இந்தியா என்று கூறப்படும் சிலைகளை வணங்கும் நாட்டிற்குட் புகுந்தார். ஆங்கு ஓர் மலை இருந்தது. இம்மலையின் உச்சிமீது நின்று, இவர் தம் மதத்தினின்றும் வேறுபட்ட மனிதர்களின் நன்மைக்காக கடவுளைத் தொழுவது வழக்கமாகக் கொண்டார். அன்று முதல் நெடுங்காலம் வரைக்கும் அம்மலை மீது இருந்து அருள் ஊற்றுச் சுரப்பது கண்டு, பல இஸ்லாமியர்கள் அம்மலைச்சாரலைத் தமது இருப்பிடமாகத் தேர்ந்தனர். குடி புகுந்தவர்களின் எண் மிகவும், அம்மலைச் சாரல் இஸ்லாம்பூர் என்ற ஒரு சிறு நகராயது.

கடவுள் அருள் நிறைந்த முகமது அப்துல் நகரம் அழகிலும், பொருளிலும், உடல் நலத்திலும் வளமிகுந்து காணப்பெற்றதாயினும், இந்நகரம் பல ஆண்டுகள் வரைக்கும் இஸ்லாமிய நகரமாகவே விளங்கிற்று; இவ்வூரை ஒரு இந்துவும் அணுகத் துணிவு கொள்ளவில்லை. போர்த்தொழிலிற் சிறந்த, தலைவணங்காத் தன்மை கொண்ட வடநாட்டார்கள் இந்துக்களோடு ஒத்து வாழ ஒருப்பட்டனர் அன்று. துறவியும் தன்னுடைய ஊர்க்குள்ளாக இந்துக்களைக் கொள்ள உடன்பட்டிருப்பார் என்று கூறவும் முடியாது.

பிறகு, இதுவரையில் கையாளப்பெறாத, வேறுபட்ட கொள்கைகளாய அமைதி, ஒழுக்கம், என்பவைகளைப் பற்றுக்கோடாய்க் கொண்ட, பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவில் ஊன்றியது. இவ்வாறு வேறுபட்ட கொள்கைகளைப் பிரிட்டிஷார் தமது வலிமையால் நிலை நாட்டவும் தலைப்பட்டார்கள். எனவே, இஸ்லாமியர்கள் இந்துக்களைக் கொல்லும் விளையாட்டுத் தொழிலை பிரிட்டிஷார் முற்றிலும் ஒப்பவில்லை.

இதன் பின்னரே, பிரிட்டிஷாரின் துணைகொண்டு ஒருவர் பின் ஒருவராக இந்து வாணியர்கள் (வட்டிக்குப் பொன் கொடுக்கும் தொழிலுடையார்) இஸ்லாம்பூரில் நுழையலாயினர். கோழைத் தன்மையில் முயல் போன்ற, அறிவில் நரிபோன்ற, பேராசையில் சுடுகாடு போன்ற இவர்கள், தென்னாட்டிலிருந்து இஸ்லாம்பூரில் குடியேறினார்கள். இவர்கட்கு உள்ள அச்சத்தைப் பார்க்கிலும் பொருள்மீதுற்ற ஆசை மிகுதியாய் இருந்தது; மேலும் வட்டிமேல் வட்டி கொண்டு வட்டி ஈட்டும் தொழிலில் நேரக்கூடிய

புண்களை ஆற்றுதல் கூடும் என்றும் இவர்கள் கருதினார்கள்.

இவர்களுள் பாபு ராமதாசர் என்பார், முதனாள் இவ்வூரில் தங்கியிருந்த இஸ்லாமிய வணிகர்களிடம் கடன் தரும் பொருட்டு அணுகிய போழ்து, ஒருவர் இவரது உச்சிக் குடுமியைப் பிடித்துக் கரகர வென்று சுழற்றுவாரானார். இந்த வேடிக்கையைக் கண்டு ஏனைய வணிகர்கள் எல்லாம் கைத்தாளம் போட்டுக்கொண்டு, பாபு ராம தாசர் கெஞ்சி அழுதபோதெல்லாம், தங்கள் செந்நீலத் தாடிகளசையக் கெக்கரித்தார்கள்.

“ஓடிப் போ; பெண் உடையோடு வெளிவா. இனி நீ ஆண் போன்று நடித்தாயானால், உன் தொன்னைக் காதுகளைக் கத்தரித்துவிடுவோம்” என்று இடிபோல் மொழிந்து இறுதியில் அவ்விஸ்லாமியர், பாபு ராமதாசருக்கு விடுதலை அளித்தனர். ஆயின் என்னை? பின்னர் கிடைத்த பொற்றகடுகள் கொண்டு இத்தகைய வடுக்களை பாபு ராமதாசர் ஆற்றிக்கொண்டன ரன்றோ? மாரி வளம் குன்றி, பயிர்வளம் குறைவுற்ற போழ்தெல்லாம், விலை பொருள்கட்கு முன்னதாகவே பொருள் அளித்து, அவைகளைத் தன் வயப்படுத்தி, பின்னர் தான் கூறிய அகவிலைக்கு விற்கும் அறிவு இவருக்கு இயற்கையன்றோ?

மேலும், நூற்றுக்கு எழுபத்தியைந்து வீதம் வட்டி கொள்ளுபவர் சிற்சில இடைஞ்சல்களைப் பொறுத்துக்கொள்ளுவதைப் பொருட் படுத்துவரோ?

இத்தகைய இடைஞ்சல்களில், பிறவியிலேயே தாயை இழந்த ஊர்மிளை என்னும் மகளும் ஒன்று. ராமதாஸர் மறுமணம் புரியவில்லை, ஏனெனில், இஸ்லாம்பூரிலிருந்து நூறு

மைல் தூரத்திற்குள் வட்டத்தில், இவருக்கு இவர் குலத்திற் பிறந்த ஒரு குழந்தைப் பெண்ணும் அகப்படவில்லை; இதற்கப்பால் சென்று பெண் தேடுவது பொருட் சிலவளிக்கும்; கவலையையும் இழைக்கும்; ராமதாசர் இவ்வாறு தன் மனத்தையும் தனத்தையும் செலவிட இசைபவர் அன்று.

“ஓர் நாள், நான் ஒரு பையனை சுவீகாரம் புரிந்து கொள்ளுவேன்; ஆயினும் இதற்கும் மிகு பொருள் செலவிடுதல் கூடாது; காலம்தாழ்த்திப் போகவேண்டும்” என்று ராமதாசர் தனது தடிப்பேறிய மனதிற்கு எடுத்துரைப்பார்.

ஆகவே, ஊர்மிளை, தன் வீட்டு நடு முற்றத்திலும், இருள் மிகுந்த புறவாசல் அறைகளிலும், கட்புலனும், செவிப்புலனும் மழுங்கிய, எந்நேரமும் தூங்கிவிழுந்து கொண்டிருக்கும் செயலை உடைய, தன் அத்தையுடன் காலம் கழித்து வந்தாள். இவ்வத்தையே, ஊர்மிளைக்குக் கல்வி பயிற்றுபவளும், காவல் புரிபவளுமாய் இருந்தாள். உற்சாகமற்று, நோக்கமும் நோன்பும் அற்று, சிறு பிள்ளைகட்கு உரிய விளையாட்டுகள் அற்று, வீட்டில் உள்ள சிலைகளாம் சாமிகட்குப் புரியும் யந்திர தந்திரங்களைக் கூறும் படிப்பையும் சாதி முறைகளையும் அன்றி, வேறு படிப்பினையைப் புகட்ட வல்ல ஒரு ஜீவனுடைய நெருக்கமும் அற்று ஊர்மிளை தன் காலத்தைக் கழித்து வந்தாள்.

எது பற்றியோ, ஊர்மிளையின் மனதில் சுயேச்சை குடிகொண்டிருந்தது. குழந்தை வீரமும் சலிப்பும் ஊர்மிளையை அடிக்கடி தனது அத்தையை எதிர்க்கச் செய்தது; வயது சென்ற அத்தையோ இதுகண்டு, அமைதி இழந்து கண்ணீர் விடுவது வழக்கம்.

'நான் ஏன் இந்த அழகற்ற சிறிய சிலைச் சாமிகளைத் தொழவேண்டும்? அவைகளைப் பார்க்கக்கூட என் விழிகள் துன்படைகின்றனவே! நீ என்னை கோயிலுக்குள் கூட்டிச் சென்ற போது அங்கு கூட அவைகள் மிகவும் அழகற்றே காணப் பெற்றன. கோயிற் சாமிகளின் வீடு நம் வீட்டின் தூய்மையைக் கூடப் பெற்றிருக்க வில்லையே! அனீபான், தன்னுடைய கடவுள் வீடு நம்முடைய கடவுள் வீட்டைப் பார்க்கிலும் சுத்தமாய் இருக்கின்றதாகக் கூறுகின்றாள். மேலும அங்கு சிலைகள் இல்லையாம். அவர்கள் கடவுள், சிறுமிகள் புரியும் குற்றங்களைப் பார்த்துக் கொண்டே இருந்து துன்புறுத்துவ தில்லையாம். அனீபான் கூறுகின்றாள், இஸ்லாத்தில்'—

"உன் கொடிய வாயை மூடு. சாமிகள் கேட்டுவிடப் போகின்றன. முஸ்லீம் கிழப் பைசாசமாகிய அனீபான் நமது வீட்டிற்குள், சுள்ளிகளை எடுத்துக்கொண்டு விற்பனை புரிய வருவதுபோல் வந்து உன் மனதை வேறுபடுத்த முயல்கின்றாள். இனி அவளை நமது வீட்டுள் நுழைய விடப்படாது. ஒரு நல்ல இந்துப் பெண்ணுக் குரியவைகளை எல்லாம் நான் உனக்குக் கற்றுக்கொடுத்து விடுகின்றேன். பின்னர் உன்பாடு; உன் கணவன் பாடு" என்று கிழவி சினந்துரைத்தாள்.

கணவன்---எங்குள்ளான் அவன்? என்று, தனது மதத்திலும், குடும்பத்திலும் பற்றுடைய கிழவி, அடிக்கடி எண்ணி கவலைக்குள் ஆழ்வாளாயினள். இது பற்றி கிழவிக்கு இராத்தூக்கமும் கிடையாது. ஊர்மிளையின் தந்தை சாமிகட்கு என்ன தவறை இழைத்தானோ? சாமிகள் இவன் குலத்தைத் தழைக்க விடாமல் அழித்துவிட நினைத்துள்

ளார்கள் போலும்! ராமதாசன் ஒரு மணமகனைப் பார்த்து ஊர்மிளைக்கு மணம் புரியாமல் இருக்கும் அவன் நெஞ்சுறமே உறம். தனக்கு உயர்ந்த அழகுள்ளது என்றும் ஊர்மிளை அறியாள். என்றாலும் இந்த அழகே பெரும் ஆபத்தாக அன்றோ முடிந்துவிடும். இந்த நாட்டில் ஆண்களைப் பார்க்கிலும் பெண்களின் தொகை குறைவன்றோ; என்றும் கிழவி நினைப்பாள்.

ஆனால், தந்தை வாளா விருந்தார்; ஊர்மிளையின் வயதும் பன்னிரண்டு ஆண்டை நெருங்கியது.

ஓர் நாள் ராமதாசர் கடைத்தெரு ஓடு சென்றுகொண்டிருந்தார். அதுகாலை ஒரு இந்து வாயாடி மற்றொருவனை நோக்கி, 'ராமதாசரின் மகள் ஒற்றைக் கண்ணியா? குட்ட நோய் பிடித்தவளா? பன்னிரண்டு வயது அடைந்த அவளுக்கு வேறு எதுபற்றியோ மணமாகாமல் இருப்பது? இனி அவள் பருவத்தை அடைந்தால் ராமதாசர் சாதி நீக்கம் செய்யப்பட வேண்டுமன்றோ? பணமிருந்தால் என்ன? சாதி நீக்கம் செய்த உடனன்றோ நாம், அவர் நம்மிடம் பொருள்பறித்த செய்கையை நினைத்து மகிழ்வுறும் நிலைமையை அடைவோம்! அப்புறந்தான் நாம் சிரிப்பதும், உள்ளுக்குள்ளாகவே இன்புறுதலும்! இருந்தாலும், ஆத்மலாபத்தை கூட அவன் கருதவில்லை போலும்!'' என்றான்.

உடனே ராமதாசர் விழிப்படைந்தார். இவர் இனி தன் மகளின் நிலைமைக்காக பிறர் எள்ளி நகைபாடுதலை மனமேற்றிருக்க ஒப்பவில்லை. ஏற்படும் பிறவிகளிலும்.—

ஒரு நாளேனும், தன் மகளைப் பற்றிச் சிறிதும் நினை[illegible]ாத ராமதாசர், இன்று தன் மகளை நோக்கி 'உன்னை என்

வளர்த்தேன் என்றே தெரியவில்லை. உன் மணத்திற்குச் செலவிட்டு நான் அழிந்தன்றோ போவேன்! தொத்து நோயே! எத்தனையோ பெண்கள் எல்லாம், இத்தகைய நிலைமையில், தன் தந்தைக்கு செலவு நேரப்படாது என்று கருதி தற்கொலை செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் நீ அறியாயா?" என்றார்.

'ஆயின், எனக்கு மணம் ஏன்' என்றாள் இயற்கையாய் சுயேச்சை படைத்த ஊர்மிளை.

"ஏன்? அப்படியா! நம் குலமுறையும் சாமிகளின் கட்டளையும் இதுவாகும் நான் இனி காலம் கடத்தினால், இகத்தில் இழிவடைந்து நரகத்தில் சித்திரவதை எய்துவேன் ஆதலின்" என்றார் தந்தை.

'இஸ்லாமியப் பெண்கட்கு இத்தனை சிறு வயதில் மணமாவதில்லை என்று நான் கேள்வியுற்றிருக்கின்றேன். அவர்கள் சாமிகள் மட்டும் வேறு விதமான கட்டளையிட்டிருக்கின்றனரே. அவர்கள் சாமிகள் சிறுமிகளின்மீது அன்பாய் இருக்கின்றனரே'--

'தூஷியே! வாயை மூடு' என்று கூறி, ராமதாசர் ஊர்மிளையைத் தன் முன்னிலைபிற்கூட நிற்காத வகையில் துரத்திவிட்டார்.

ராமதாசர் தனது மூளையைச் செலுத்தினார்; உடனே ஒரு வழி அங்கு தோன்றியது. மனைவியை இழந்த நகை வணிகர் கேசவ தத்தர் தன் குலத்தார் அன்றோ? கேசவ தத்தர்; அறுபது வயது தான் கடந்தவர். கால் கைப் பிடிப்பும், காச நோயும் கொண்டவர். எனவே, மரண காலத்தை நெருங்கியவர். ஊர்மிளையை இரண்டொரு

ஆண்டில் அமங்கலியாக்குபவர். ஆதலால், கேசவ தத்தர் ஊர்மிளைக்குப் பெரும் பொருள் தருதல் தகைமையன்றோ? கொடுக்கட்டுமே; கேசவ தத்தர் பணக்காரர்தானே.

முடிவாக கேசவ தத்தரிடம் ஒரு தூதன் அனுப்பப் பெற்றான். இவன் கேசவ தத்தர்பால், ஊர்மிளையின் பனி நீரின் புதுமையை உடைய அழகை எடுத்தெடுத்து ஓதி, கேசவ தத்தரின் நலிந்துபோன இரத்தத்தில், காதற் கொதிப்பை விளைத்து விட்டான்.

"அப்பாடா! சாமிகளின் கருணை நமக்குளது. என் மகளுக்காக கேசவ தத்தரிடம் நான் மூவாயிரம் ரூபாய்களைப் பெறுவேனன்றோ?" என்று நினைத்து அன்றிரவு ராமதாசர் நன்றாகத் தூங்கினார்.

சிலநாட்கள் கழித்து, ஊர்மிளையைப் பார்த்து, "கேசவ தத்தர் தக்க கணவன்; மேலும் பணக்காரர்; கடைத் தெரு நடுவில் ஒரு பெரும் நகைக் கடையை வைத்திருக்கின்றார். அவர் உன்மீது வேட்கை கொண்டு உன்னை அடைய போவாக்கொண்டுள்ளார். ஆகலின், தன்பால் உள்ள உயர்ந்த நகைகளை எல்லாம் உன்மீது பூட்டாமல் வேறென் செய்வார்?" என்று ராமதாசர் கூறினார்.

எத்தகைய கணவன்! எவ்வளவு சிறந்த நகைகள்' எல்லாம் நமக்கே! என ஊர்மிளை செவியுற்றதும், அவள் பேதைச் செவ்விதழ்கள் சிறிது மலர்ந்தன; விழிகள் மெல்லிய கரு நிலாக்கள்போல் விளங்கின.

'ஆம்; எல்லாம் உனக்கே. என் குழந்தாய்!' என்று ராமதாசர் புன்னகையுடன் மொழிந்து, அவள் செவிகளைத் தொட்டுக் கொஞ்சினார்.

மறுநாட் காலை, வழக்கம்போல், தொழில்பற்றி ராம தாசர் ஊர்ப் பிரயாணம் சென்றுவிட்டார்—வட்டி வாங்க வேண்டும்; கடன் கொடுக்கவேண்டும்; கிட்டி போடவேண்டும்; நயம் கூறவேண்டும்; தொழில் முறையில் எத்தனை இன்பகரமான துறைகள்!

தந்தை புறப்பட்டுச் சென்றவுடன், ஊர்மிளை, தனது அத்தையை மெல்லத் தன் வயப்படுத்தலானாள்.

'நாம் கடைத் தெரு சென்று, வேடிக்கை பார்த்து வருவோம்' என்று தன் எண்ணத்தை இயற்கையாக மறைத்து அத்தையிடம் தெரிவித்தாள்.

'கூடாது; உன் தந்தை விரும்பமாட்டார்' என்றாள் கிழவி.

'நான் என் ஆடையினால் என் முகத்தை மூடிக் கொண்டு, உன் கையைப் பிடித்துக்கொண்டே பின் தொடர்வேன். என்னை யார் கண்டுபிடித்து விடக்கூடும். நாளும் நன்றாய் இருக்கின்றது. கண்காட்சி இதைவிட நன்றாயிருக்கவேண்டும். நாம் தாமே இருக்கின்றோம். அப்பாவிடம் யார் தெரிவிக்கப் போகின்றார்கள்? வா; போகலாம்' என்றாள் ஊர்மிளை.

கிழவி, அதிகமாகப் பின் வாங்காது இணங்கினாள். கடைத் தெரு நடுவில் நகைக் கடைகளையே ஊர்மிளை ஊன்றிப் பார்க்கலானாள்.

ஒவ்வொரு கடையையும் பார்த்து, "இது யாருடையது?" "அது யாருடையது?" என்று கேட்டுக்கொண்டே சென்றாள். கடைத்தெருவே உலக்மாய் மதித்த கிழவியும் தக்க விடையளித்துக்கொண்டே போனாள்.

பின்னர், ஒரு பெரும் கடையைப்பார்த்து 'இது யாருடையது?' என்றாள் ஊர்மிளை.

'அதுவா? அதுதான் கேசவ தத்தருடைய கடை; அதோ பார்! உன் பிற்கால நாதன்; தனது விலை உயர்ந்த அணிகலன்களிடையே அமர்ந்திருக்கின்றார்! அவர்தான் கேசவ தத்தர்' என்றுரைத்தாள் அத்தை.

உடனே, ஊர்மிளை தனது முக மூடியை இழுத்து மூடிக்கொண்டு, மூடிக்கிடையே நகைக் கடையை ஊன்றி நோக்கினாள். அவள் கண்ட காட்சி அவள் மனத்தைத் தீப்போற் சுட்டது. எலும்பும் தோலுமாய், சிங்கப் பற்களுடன் ஒரு கிழவனைக்கண்டு, ''நத்தலை கோணல்! அங்க முழுதும் ரோமம்! சுவர்களில் காணும் விஷச்சிலந்தி, போன்று அன்றோ இருக்கிறான்!' என்று ஊர்மிளை கருதினாள்.

ஊர்மிளையின் அடிகள் அப்பால் எழவில்லை; மென்மேலும் திகைத்தாள்; பின்னர், தனது அத்தையாம் சரோஜினியின் ஆடையைப் பற்றி இழுத்தாள்.

'அது-அதுவா-அவர்?'

'உண்மையாக; ஆம்.'

'நான் அவரையா மணக்க வேண்டும்? ஆ! ஏன்?'

'சாமிகளின் கட்டளை''

'உண்மையா? அப்படியாயின் அந்தச் சாமிகளை நான் வெறுக்கின்றேன்.'

'சேச்சே! இந்தப் பாவத்திற்கு சாமிகள் உன்னைக் கொன்றே விடுவார்கள்.'

'செய்யட்டும்!' என்று தேம்பிற்று குழந்தை ஊர்மிளை; பின்னர், திரும்பி தான் வந்த வழியே ஒரே ஓட்டமாக ஓடினாள். திகைத்துப் போய், யாது செய்வதென்றறியாமல், எங்கு போவது என்றறியாமல் சென்றாள். இறுதியாக, களைத்துப்போய் முகமது அப்துல் என்னும் துறவியின் மசூதியின் புறமாய் உள்ள ஒரு குட்டையின் அருகாமையில் இருந்த அகலமான கல்மீது விழத் தலைப்பட்டாள். இவள் இக்கல்லில் விழுந்து, குட்டைக்குள், தலைகீழாய்ச் சென்றிருப்பாள்; ஆனால் அப்பொழுது இவளை ஒருவலிமை மிக்க கரம் பற்றி ஈர்த்தது. திரும்பி ஒரு மனிதன் தோள் மீது சாய்ந்து விட்டாள். முகத்தில் இருந்த மூடி விலகி விட்டது. தன்னைப் பிடித்திருப்பவர் யார் என்று உற்று நோக்கினாள். நோக்கவும், வடமேற்கு எல்லைப் புறத்துப் போர்த் தொழிலில் சிறந்த ஒரு வகுப்பினரின் இளமுகத்தைக் கண்டு, இவளுக்குள் ஆழ்ந்து புதைந்திருந்த யாதோ ஒன்று கட்டறுத்துக் கொண்டது. இவள் நெஞ்சம் சூரியனை அளாவிப் பறந்தது.

'அழகியே! காயமடைந்தனையோ?' என்று புன்னகையுடன் இவளைக் காப்பாற்றிய இளைஞன் வினவினான்.

'சந்நிதானம்—பாலகிருஷ்ணப் பிரபுவா?' என்று தழதழத்த குரலுடன் ஊர்மிளை உசாவினாள்.

'இல்லை. அல்லாவின் புகழ் ஓங்குக. என் பெயர் முகமதுகான். என் தந்தையை ஷேர் அலி கான் என்பார்கள். நான் இவ்வூர்க்குப் புதியவன்' என்று நகைத்துக் கூறினான் வேற்றூர் மனிதன். ஊர்மிளையின் கண்கள் முகமதுகான் முகத்தைப் பற்றியபடியே இருந்தன; அவைகள் அவன் முகத்தை விட்டகலத் திறனற்றிருந்தன.

"நீர் இஸ்லாமியரா? அந்தக் கட்டிடம் உங்கள் சாமிகளின் கோயிலா?" என்றாள்.

"அது ஒரே கடவுளின் வீடு; ஆம்!" என்று வேற்றூரான் ஊர்மிளையைப் பார்த்தபடியே நின்றான். அவனுக்குத் தாழ்ந்ததோர் வந்தனம் அளித்துவிட்டு, ஊர்மிளை மீண்டும் ஓடிவிட்டாள்.

சரோஜினி அங்குமிங்கும் அலைந்து நடுங்கிப்போய் ஓடோடி வீடு சேர்ந்ததும், அங்கு ஊர்மிளைத் தனது படுக்கையில் பிணம்போல் குப்புறப் படுத்திருக்கக் கண்டாள். கிழவி, ஒருபுறம் கோபமும் ஒருபுறம் அமைதியும் கொண்டு ஊர்மிளையைத் தன் முழு வன்மையுடன் பிடித்திழுத்து படுக்கையினின்றும் தரைமீது எறிந்தாள். ஊர்மிளை ஒன்றும் தோன்றாமல் தரைமீது உட்கார்ந்துகொண்டு, ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருந்தாள். இவள் தலையின் மேற்புறத்திலிருந்து கிழவி வசைமாரி பொழியத் தொடங்கினாள். ஊர்மிளை தான் கண்ட கனவையே மீண்டும் விடாது சிந்தித்துக் கொண்டிருந்தாள். கிழவி இதனை அறியாள். ஊர்மிளை தனது சிந்தனையை நெகிழவிடவில்லை.

பின்னர் சரோஜினி, ஊர்மிளையின் மௌனத்தைத் தகர்க்க முயன்று இயலாதவளாய்க் களைத்துப்போய், பகல் தூக்கத்தில் ஆழ்ந்துபோயினாள். உடனே ஊர்மிளை மனதில் ஒரு உறுதி செய்துகொண்டு தான் அமர்ந்திருந்த இடத்தைவிட்டு எழுந்தாள். மெல்ல, ஓசை எழாதபடி, பாதங்களில் துணிகளை அணிந்துகொண்டு, சாமிகள் அறைக்குட் சென்று, அங்குள்ள சாமிகளை எல்லாம் தனது மடிமீது வாரிக்கொண்டு வந்து, நடுமுற்றத்தில் அவைகளை வைத்து ஒவ்வொன்றையும் கையப் புடைத்து, வசை கூறி, அவை

களைத் தலைகீழாய்க் குப்பையில் நிறுத்திவிட்டாள். "நான் உங்களை வெறுக்கிறேன்! வெறுக்கிறேன்! கேட்கின்றீர்களா; என்ன? விளங்கிற்றா? நான் உங்களை வெறுக்கின்றேன்! வேண்டுமென்றால் என்னைக் கொன்றுபோடுங்கள்! நான் அந்த விஷச் சிலந்தி மனிதனை மணப்பதிலும் மரிப்பது மேலன்றோ?" என்று அந்தச் சிலைகளைப் பார்த்து ஊர்மிளை கூறுவாளாயினாள்.

பின்பு தொண்டை விம்ம, கண்ணீர் ததும்ப, புறவாயிலைக் கடந்து, தெருவழியே செல்லத் தொடங்கினாள்.

பரவிய வெளி; பெரும் வெளி; ஒரு சிறு குழந்தை, அச்சம் விளைக்கத்தக்க வெட்ட வெளியில் எவ்வாறு தனியே செல்லும்? என்றாலும், தண்ணீரில் மூழ்குபவன், நீரிற் குதிக்குமுன்னர், சற்றுத் தயங்குவான்போல், ஊர்மிளை சிறிது நேரம் தயங்கி நின்று, மனதைத் தேற்றிக்கொண்டு, நடுப்பகல் தவழ் வான் கீழ் ஒளிரும், வெண் சுதை தீட்டிய, தலை மயங்கிச் செறிந்து கிடக்கின்ற மனைகளுக் கப்பால் உள்ள, முகமது அப்துல் மசூதியை நாடிச் சென்றாள்.

இதற்கிடையில், சில தெருநாய்கள் தாம், உயிர்ச் சீவன்களாக அலைவதைக் கண்டாள். சாலை, கண்ணுக் கெதிராக நன்கு புலப்பட்டது. தனது ஆடையால் முகத்தை மூடிக் கொண்டு தலை குனிந்த வண்ணமாய் ஊர்மிளை ஓடத் தலைப்பட்டாள். சில நிமிடங்களில், காலையில் இடறி வீழ இருந்த மசூதியின் புறத்துள்ள பெருங்கல்லை அணுகினாள். அணுகி, ஓர் படிக்கட்டைக்கடந்து, குட்டையைத் தாண்டி, சற்று அச்சத்துடன் மசூதியின் உட்புறத்திற்குள் சென்றாள்.

ஆங்குத் திறந்த இடத்தில், காற்று நன்றாக உலவும் வசதியைக் கொண்ட தொழும் இடம் இவள் கண்கட்குப் புலனாயது. தொழும் இடத்தின் நிறைவற்ற அழகும், உயரிய பரந்த பெருமையும், ஓவிய வேலைக் குறைவும், அதன் தாய்மையும் அவள் மனத்தின் படபடப்பை எவ்வாறாகவோ நீக்கியது. யார்? என்ன?—

ஊர்மிளையின் பக்கமிருந்து, "நான் காலையிற் சந்தித்த இளம் புறவே! இங்கு நீ என் செய்கின்றாய்?" என்ற ஒலி இவள் செவி புகுந்தது. தன்னை யார் விளிக்கின்றார்கள் என்று நோக்கியதும், தனது கருத்தில் ஆழ்ந்த தலைவனைக் கண்டு மகிழ்வெய்தினாள் எனினும், ஊர்மிளை "சிறு பெண்களை விஷச் சிலந்திகட்கு ஒப்படைக்கும் கொடிய சாமிகளிடமிருந்து உன் கடவுள் காப்பாற்ற வல்லதா என்று அறிய நான் இங்கு வந்தேன்" என்றாள்.

தலைவன் கண்களில் ஒளிர்ந்த புன்னகை, கண்களை விட்டகன்றது.

"அவராற் கூடும் வா, என்று கூறி அவளது கரத்தைப்பற்றி தொழும் இடத்திற்குள் அழைத்துச் சென்றான்.

* * * * *

ராமதாசர் மீண்டும் இல்லாம்பூர் வந்து சேர்ந்துவிட்டார். ஊர்மிளை வீட்டை விட்டகன்றுவிட்டதை எல்லோரும் ராமதாசருக்குத் தெரிவித்தார்கள். ஆனால் ஊர்மிளையின் முடிவு என்னாயிற்று என்று ஒருவரேனும் அறிந்தவரன்று.

"அவள் ஓர் கிணற்றில் வீழ்ந்து இறந்துபோனாள் போலும்! நீ இத்தனை ஆண்டுகளாக அவளுக்கு மணம் புரி

யாமல் இருக்கலாமோ?" என்றார் ஓர் சமூக சீர்திருத்த உழைப்பினர்.

"உண்மையாகவே, அவளுக்குக் குறைநோய் இருந்திருக்க வேண்டும். அதுபற்றித்தான் நீர் அவளை அவ்வளவு பெரிய பெண்ணாகியும் மணம் புரிந்து கொடுக்கவில்லை. தனது வெட்கத்தாலும், நோயின் கொடுமையாலும் தற்கொலை புரிந்துகொண்டனள் போலும்!" என்றார் வேறொருவர்.

கிழவி சரோஜினிமட்டும், தாங்கள் கடைத்தெருவூடே உலாவியதைப்பற்றி அச்சத்தால் வெளியிடவேயில்லை. தன்பால், ஊர்பிள்ளையைப்பற்றிப் பேசுபவர்களிடம் ராமதாசர் பின்வருமாறே கூறுவார்.

"நான் ஏன் அவளை வளர்த்தேன். என்னைப்போன்ற கெடுமதி கொண்டவர்களும் இருக்கின்றார்களா? அவளை அவள் பிறந்தவுடனேயே நான் ஏன் கொலை புரியவில்லை! நான் என்ன பாபம் செய்தேனோ, எனக்கு ஒரு பெண் குழந்தை பிறக்கும் சாபம் நேர்ந்தது! பதினொரு ஆண்டுகளாகக் கைம்மாறளிக்காமல் என் உணவைச் சாப்பிட்டாளே! இறுதியாக நான் அடையும் மூவாயிர ரூபாய்களையும் நட்டப்படுத்தினாளே! அவளுக்குக் குட்டமும் பிடிக்கவில்லை. ஒரு நோயும் கிடையாது. நீங்கள் பொய்யுரைக்கின்றீர்கள். நான் அவளை மணஞ்செய்து கொடுக்கத்தான் இருந்தேன். அவள் நன்றாகத்தான் இருந்தாள். அழகாயும் இருந்தாள். மூவாயிர ரூபாய்கட்கன்றோ ஏற்பாடு செய்திருந்தேன். அச்சுப்போல மூவாயிரம் ரூபாய்கள்! ரொக்கமாக, கைமேல் வாங்கி இருப்பேனே! பொருள் தொலைந்தது! எல்லாம் தொலைந்தது! எல்லாம் தொலைந்தது!"

ஆனால் அயல் வீட்டார்கள் எல்லாம் நகைபாடினார்கள். கிழவன் மனம் கொதித்தது. "நகையாடுங்கள்; ஒரு நாள் நீங்கள் இதற்கு ஈடு கொடுக்கும்படி நேரிடும். என் மகளை யாரோ களவு செய்துவிட்டனர். என் மகளைக் களவுசெய்த, பேய் மகன்மீது, நான் போலீசு படையை ஏவுகின்றேன். அவன் எங்குதான் ஒளிந்துகொண்டிருப்பினும் சட்டம் அவனைத் தேடிக்கொண்டு வந்து, அவனைத் தண்டித்துப் போலீசார் தங்கள் வேலையை முடித்தவுடன், நான் தூங்குவேன். எனக்கு வழி தெரியாதா? எனக்கு ஆற்றல் கிடையாதா?" என்று ராமதாசர் கூறினார். இதனைச் செவிபுற்று, கூட்டத்தில் இருந்த ஒரு வேற்றூர் மனிதர் புன்னகை புரிந்துகொண்டே கூட்டத்தைவிட்டகன்று சென்றார்.

இரண்டு நாட்கள் சென்றன. மூன்றாம் நாட் காலை ராமதாசர் தனது கணக்குப் புத்தகங்களுடன் உட்கார்ந்து கொண்டிருந்தார். ராமதாசரின் முன்னிலையில் இருந்த வெளிச்சம் மறைபட்டது. ஒரு பெரிய மனிதன் தன் கையில் ஒரு துப்பாக்கியை இடுக்கிக்கொண்டு ராமதாசரின் முன் தோன்றினான். கழுகின் அலகை ஒத்த மூக்கையும் விழிகளையும் படைத்த செந்நீல தாடியைக் கொண்ட இவன் ராமதாசரைப் பார்த்து "ஓய்! ராமதர்சா! கிழப்பன்றியே! குழந்தைகளைத் தின்பவனே! நான் ஆப்ரிதி வகுப்புத் தலைவனின் தூதன். உற்றுக் கேள். என் தலைவர் இரண்டாம் முறை கூறுவது கிடையாது--இச்சமயத்தில் துப்பாக்கி அச்சப்படும்படியாய் அசைந்தது—ஷேர் அலி கூறுகின்றார்.

"நீ வளர்த்துவந்த குழந்தை இனி உன்னுடையதல்ல. அவள் உன்னையும் உன் சாமிகளையும் தலை முழுகிவிட்டாள். இஸ்லாம் முறைப்படி நாங்கள் அவளை ஒரோ கடவுளின்

மகளாக நபியின் நெறியில் சேர்த்துக்கொண்டோம். மேலும் அவள் என் மகன் முகமதுகானை மணந்துகொள்ளப் போகின்றாள்.

"ஆனால், என் மகன் அவளைத் தன் இல்லக் கிழத்தியாகக் கொள்ளும் முன்பாக, அவள் தன் முழு வன்மையையும் வளர்ச்சியையும் அடையுமாறு எங்கள் வீட்டுப் பெண்களுடன் சில ஆண்டுகள் வாழ்வாள். ஏனெனில், ஆப்ரிதி வகுப்பாராகிய நாங்கள் எங்கள் குழந்தைகளை நறுங்கிக் குன்றிய சிறியவர்களாய் இன்றி, தங்கள் தந்தைகளைப் போலவே, ஆண்களாய்ப் பிறக்குமாறு கருதிவருகின்றோம்.

"ராமதாசா! உனக்கு எங்கள்மீது வெறுப்புளதேல் உடனே புறப்படு. உன் உறவினர்களுடனும், உன் ஆட்களுடனும், எங்கள் ஊருக்குவந்து முடிந்தால் உன் பெண்ணை மீட்டுச் செல். எங்கள் கோட்டையில் நூறு துப்பாக்கிகளும் அவைகட்கேற்ற மனிதர்களும் இருக்கின்றார்கள். ஆனால் ஆட்டு மந்தைகளாய நும்போன்றவர்களை எங்கள் பெண்களே கொன்றுபோடுவார்கள்.

"அறிந்தனையா? இனியும் உன் அசட்டு மூளையில் பழிக்குப் பழி வாங்கவும், சட்டத்தை உனக்குத் துணை தேடவும் இடமிருக்கின்றதா?"

ராமதாசர் விழித்துப் பார்த்தார். உடனே தன் எதிர் நின்றுகொண்டிருந்தவர் பாதத்தில் ஒரோ நீளமாகத் தெண்டனிட்டு, "நான் கீழ்ப்படிகின்றேன். பூலோக பதியே! என் வணக்கத்தைத் தங்கள் பிரபுவினிடம் தெரிவியுங்கள். எனக்கு அமைதியையும் உயிரையும் மட்டும் கொடுங்கள். என் மகள் உங்களுடையதே!" என்றார்.

மூன்றாம் அத்தியாயம்.

அவர்கள் ஏன் தெரிவிப்பதில்லை?

இள வயதில் மணம் புரிந்து கொடுப்பினும், பூப்படையும் முன்னர் தங்கள் பெண்களை, மாமனார் வீடுகளுக்கு அனுப்பாத வழக்கமுடைய சில மாகாணங்களும் உள; ஆனால் வங்காளத்தில், இத்தகைய தடை கிடையாது. மாமனார் வீடுகளிலிருந்துவரும் ஆணையை மீறி, அவர்கள் மனம்போல் பெண்களை அவர்கள் குறித்த நாளையில் அனுப்பாவிடில், மறுமணம் நிகழ்தலும் கூடும். ஆதலின், பாலிய விவாகத்தின் தீமைகள் இம்மாகாணத்தில் சிறப்பெய்துகின்றன.

ஒரு பண்டைய வங்காள நகரம்; இதன் நடுவில் பெண்கள் மருத்துவ சாலை ஒன்றுளது. சாலையின் உள்ளறை—இது மருத்துவச்சியின் தனிப்பிடம். ஓர் சாயுமன நாற்காலி—ஆங்கு, சாய்ந்த வண்ணமாய், கண்களை மூடிக்கொண்டு, மிகுந்தும் உழைத்து அதனால் கோடு விழுந்த முகத்துடன், அவ்வயித்திய சாலையின் ரண சிகிச்சை விற்பனியும் அதிகாரியுமான ஜேனட் ஹான்காக் அயர்ந்திருந்தாள்.

நடுநிசி வரையிலும், மறுநாட் காலை முழுதும், ரண சிகிச்சையும், கடினமான பிரசவங்கட்கு தன் முழுத் திறமையுடன் மருத்துவமும் புரிந்திருந்தாள். மதியத்தில், உடலின் ஒவ்வொரு உறுப்பும் களைத்துப் போயினமையின், மீண்டும் இழந்துபோன தன் வலிமையை அடையும்

பொருட்டு, அரை மணி நேரமாயினும் அயர்வு கொள்ள
லாம் என்று ஓய்வு கொண்டனள்.

இவள் பக்கத்தில், சற்று முன்புதான் இங்கிலாந்தி
லிருந்து வந்த கடிதங்கள் ஒரு நாற்காலியின்மீது இருந்தன.
தன் இளைய உடன் பிறந்தாளின் கடிதம் ஒன்றைத் தவிர,
ஏனைய கடிதங்களைப் படிப்பதற்கு, இவள் பெரிதும் களைப்
படைந்திருந்தாள். ஆனால், இவ்வொரு கடிதத்தை முற்றி
லும் போராவலுடன் படித்தறிந்துகொண்டாள். இக்கடிதத்
தின் முதற்பகுதி இவள் மூளையில் நன்கு பதிந்து ஒரு
கிளர்ச்சியை விளைக்கலாயிற்று.

"ஜேனட்! உன் மனோவன்மை எங்கே? நீ ஏன், நீ
காணும் கொடுமைகளை உலக முழுதும் விளம்பரப்படுத்தலா
காது? நாளுக்கு நாள் உதவியற்ற பெண்களின் சகிக்
கொணாத் துன்பங்களைக் கண்டும்—பெண்களா? குழந்தை
கள்—குழந்தைகள் தாமே அக்குழந்தை மனைவிகள்—நீ
வாய்திறவாதிருப்பது எதுபற்றியோ? அருமை ஜேனட்! இச்
செயல் சிறிது கோழைத்தன்மையதன்றோ? நீ ஏன் போலீசு
உதவியை நாடக்கூடாது? கருணையின் பொருட்டாவது,
பிரிட்டிஷ் கொடிக்கீழ் நடைபெறும் இத்தகைய இயற்
கைக்கு மாறுபாடான தீமைகளை, பிரிட்டிஷ் அரசாங்கம்
தலையிட்டு, ஒழிக்காது இருப்பது ஏனோ?"

"சிறிய தங்கையே! இங்கிலாந்தில் சுகமாக இருக்கும்
பேதைச் சிறிய தங்காய்! அவள் தூய மனம் கடவுளின்
ஆசியைப் பெறுக!" என்று ஜேனட் தனக்குள்ளாகவே
மொழியலானாள்; அப்போது, அவள் அழுத்தமான நிற
மற்ற இதழ்கள் இரக்கத்தால் சிறிது துடித்தன.

ஜேனட்டின் தனிமை முடிந்தது. ஏனெனில், ஜேனட்
டின் ஓய்வைக் குலைப்பதனால் மனம் வருந்தினவளாய், வருத்
தம் அவள் நலமிக்க முகத்தில் இனிது தோற்ற, ரூத் நாக்சு
என்னும் பெயருடைய உதவி மருத்துவச்சி ஜேனட் முன்
தோன்றினாள்.

"நான் மிகவும் வருந்துகின்றேன். உன் ஓய்வை
நான் கலைப்பது வெட்கமற்ற செயலாகும்—எனக்கு உண்
மையில் கருத்தில்லை—துணிவும் இல்லை. இங்கு ஒரு பெண்
வந்திருக்கின்றாள். அவள் உன்னையே பார்க்கவேண்டு
மென்று ஓலமிடுகின்றாள். பெரும் இடைஞ்சலில் சிக்குண்
டிருப்பதாகவும், இமைப்பொழுதும் காலந்தாழ்த்தக்கூடாத
தாகவும், நீ அவளை முன்பொருமுறை காத்திருப்பதாகவும்,
அதுபோலவே இம்முறையும் அவளை நீ காக்கும் நிலைமையில்
உள்ளதாகவும் அவள் கூறுகின்றாள். அச்சத்தால் பித்த
முற்றவள்போல் காணப்படுகின்றாள்! வேறு ஒன்றும் பிறர்
பால் கூற மறுக்கின்றாள். நான் என் செய்வது?" என்
றாள் ரூத்நாக்சு.

"அவளை என் மருத்துவ அறைக்கு அனுப்பு. ஆங்கு
அவளை நான் காண்பேன்." என்று ஜேனட் கூறி, தன்
சாயுமான நாற்காலியை விட்டெழுந்தாள்.

"ஜேனட்! நீ ஒப்புக்கொள்ளமாட்டாய்; ஆனால், நீ
மிகவும் களைத்திருக்கின்றாய்; ஓய்வற்று, என்றும்போல்
மீண்டும் உயிர் பெற்று நடைபெறும் வழக்கமான துன்பங்
களை நீக்க உன் மண்டையை நீ உடைத்துக்கொள்ளுகின்
றாய். நாம் ஓரக் கால்களில் உள்ள ஓதத்தையே நீக்குகின்
றோம்; வேறென்? நாம் என்றும்போல் ஒன்றும் கூறாமல்
இறுதிவரையில் உழைத்துக்கொண்டே போகவேண்டியது

தான். ஏன் நாம் இதனை ஒரே போடாய் அழிக்கக்கூடாது? ஏன் நாம் நமது வீட்டின் மேற்கூறையிலிருந்து இத்தகைய தீமைகளைப்பற்றி உலகத்திற்கு உரக்கக் கூவி, நாம் நாள்தோறும் கண்கூடாகப் பார்க்கும் அநீதங்களை விளம்பரம் புரியக் கூடாது? ஏன் நாம் போலீசாரின் உதவியை நாடக் கூடாது? ஏன் அரசாங்கத்தை இதில் தலையிடுமாறு வற்புறுத்தக் கூடாது?" என்று, ஜேனட்டின் தோளில் அன்போடு தனது கரத்தால் தொட்டு, ரூத் நாக்சு வினவினள். இதற்கு விடை கூறுமாறு, வாயில் வெளியில் ஜேனட் சிறிது நேரம் நின்றாள்.

"ஒரு காலத்தில், நானும் இவ்விதமாகவே பேசிவந்தேன்; அது உன்னைப் போல் நான் இங்கு புதிதாய் வந்த காலம். பதினைந்து ஆண்டுகளாக உழைத்ததன் பின்னர் நான் இப்பொழுது அதன் மறுபுறத்தைக் காண்கின்றேன். கருங்கற் சுவர்களையும், இருப்புக் கம்பி வேலிகளையும் கடந்தாலும் கடக்கக் கூடும்; இந்தப் பெண்களின் சிறையைக் கடத்தல் அரிது. அவர்களின் சிறைகள் அச்சத்தால் கட்டப்பெற்று உள்ளன—பழக்க வழக்கங்களால், நம்பிக்கையின்மையால், அறிவீனத்தால், வேறு உயர்வான நிலைமைகள் இருப்பதாகக் கருதுகின்றனர். செருக்காலும், கட்டப்பெற்றுள்ளது. அவர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்! போலீசாலும், அரசாங்கத்தாலும், சட்டங்களாலும், வல்லமையாலும் அவர்கள் சிறைகளைத் தகர்ப்பது அரிது. ஏனெனின் அவர்கள் கட்டுப்பாடுகளெல்லாம் மதத்திற்காக உள்ளன. ஆதலின் அவர்கள் இவைகளை உயர்வாகவே கருதுகின்றனர். இந்த நிலைமை மாறுதல் அடையும் வரையில், நாம் ஓரக் கால்களில் உள்ள ஓதத்தைத்தான்

[illegible]க்கி வருதல் வேண்டும். அவர்களின் துன்பத்தையேனும் சிறிது குறைத்து வரலாம்."

"இதிற் பயனுளதா?" என்றாள் ரூத்.

"ஆயின் நீ கைவிடத் துணிவாயோ? நீ வழி மாறத் துணிவாயோ?" என்று கூறி ஜேனட் சென்றுவிட்டாள்.

இவள் பிறகே ஒரு சிறு பெண் குழந்தையை அழைத்துக்கொண்டு ஒரு இந்துப் பெண் தொடர்ந்தாள். பின்னையவளுக்கு பத்து ஆண்டுகட்கு முன்னர் கடினப் பிரசவத்தினின்றும் தப்புவித்த ஒரு நினைவு ஜேனட்டிற்கு உண்டாயது. இவள் அதுகாலை, மருத்துவ சாலையில் நெடுநாட்கள் சுகவீனமாய்த் தங்கியிருந்தாள்.

"களிப்புற்றேன்! களிப்புற்றேன்!! விடுதலை நேரம் கிட்டியது. இவள் என்னைக் கண்டுகொண்டாள். என்னை முன்னொரு முறை காப்பாற்றிய அவள் திருக் கரங்கள் கடவுள் அருள் கொண்டு விளங்கும் கரங்கள். இப்பொழுதும் முன் எனக்களித்த இந்தக் குழந்தையின் துன்பத்தை நீக்கும் ஆற்றலுடையவை அன்றோ!" என்று விம்மி விம்மிப் புடைத்து மேற்பேச நாவெழாது நின்றுவிட்டாள்.

"என்ன? நேர்ந்த துன்பம் யாது? சிறுமியே நீ கூர்" என்று மொழிந்து, ஜேனட், அச்சிறுமியின் முகமூடியை நீக்கி அவள் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

அம்முகத்தைக் கண்டதும் ஜேனட் நெஞ்சம் பகீரென்றது. சிறியவள்; குழந்தை; என்றாலும் இயற்கைக்கு மாறுபாடான அறிவின் ஒளி; அச்சம் கொண்டு நடுங்கிய முகம்; என்ன துன்பம்; என்ன கொடுமை; என்ன ஆற்[illegible]மை.

'சிறுமியே! உனக்கு யாது நேர்ந்தது?' என்று மீண்டும் ஜேனட் அக்குழந்தையைப் பார்த்து வினவினாள்; உடனே நிகழ்ந்தவற்றை அறிந்து ஆற்றாளாய்த் திகைத்தனள்.

ஆனால், இப்பொழுது இக்குழந்தையின் அன்னை, மீண்டும் பேசும் நிலைமையைப் பெற்றனள்.

'இவளின் சிறிய உருவமே, இதுவே நமக்கு இடைஞ்சலாய் நின்றது. இவளுக்கு வயதாகவில்லை; ஆனால் இவள் கணவன் இவளை விழைகின்றான். அவன் தாமதிக்கமாட்டானாம். நாளை இவள் அவனுடன் சேரவேண்டும். அதோ இருக்கின்றானே, வட்டிக்குப் பொருள் கொடுப்பவன்! அவன் தான் இவள் கொழுநன். அதோ அந்தப் பெரிய வீட்டில்தான் வசிக்கின்றான். அவன் மிகவும் முரடன்; பரு உடல் கொண்டவன்; தன் சொல்லுக்குப் பிறிதுசொல் கேளான்; அவன் இதற்குள்ளாக இந்தக் குழந்தையைத் தன் இன்பத்திற்கு அழைப்பான் என்று நாங்கள் நினைக்கவே இல்லை. இனி அவன் சினம் கொண்டு, என் மகளைத் திரும்பவும் எங்கள் வீட்டிற்கே அனுப்பி விடுவான். நாங்கள் எல்லா மனிதர்கள் முன்னிலையிலும் இழிவு கூறப் படுவோம்' என்றாள் தாய்.

'டாக்டர் மிஸ்ஸி சாயபு அறியவேண்டும்; நாங்கள் எங்களால் இயன்றவற்றை எல்லாம் செய்து பார்த்தோம். மாமி தன் முழு அறிவையும் இதில் செலுத்திப் பார்த்திருக்கிறாள். வைத்தியரும் கூடியவரையில் முயன்றார். குழந்தைக்கு இரத்த ஒழுக்கும் பலவீனமுந்தான் கண்டதே ஒழிய, அவள் பெரியவளாக இல்லை. ஆதலின் பெண்களின் துணையே! நான் மிகுந்தும் போராடி இவள் மாமியால் இணக்கம்பெற்று இவளைத் தங்கள் முன்னிலையில் கொண்டு

வந்திருக்கின்றேன். எவ்வாற்றானும் இக்குழந்தையைப் பெரியவளாய்ச் செய்யுங்கள். இவளை இவள் கணவன் கோபித்துப் புறக்கணிக்காமல் ஏற்குமாறு வழி தேடுங்கள்' என்று சிறுமியின் தாய் மீண்டும் எடுத்துரைத்தாள்.

இந்தப் பழங்கதையைக் கேள்வியுற்று ஜேனட் கூறினாள்:—

'தாயே நான் வருந்துகின்றேன். உன் கணவன் ஊர
றிந்தவர். நான் பல முறைகளில், அவர் சிறப்பான இடங்
களில் இருக்க, அவரைக் கண்டிருக்கின்றேன் இரண்
டொரு ஆண்டுகட்கு முன்புதான், அவர் சிறு பெண்களை
மணம் புரியும் தீய வழக்கத்தை ஒழித்துவிட வேண்டு
மென்று ஆற்றிய அழகிய சொற்பெருக்கையும் படித்திருக்
கின்றேன். நீரும் இதனால் நேரும் கெடுதல்களை உமது
அநுபவத்தால் நன்கறிவீர். இவள் உடம்பு பகுதிகூட
முதிர வில்லை. இதற்குள்ளாக இவள் கொழுநன் இவளைக்
கூடவும் ஒப்புக்கொண்டிருக்கின்றீர். அன்றியும், இவளைப்
பெரியவளாகுமாறு ரண சிகிச்சை புரிந்து நீங்கள் இது
வரையில் வீட்டில் செய்துள்ள கெடுதலை நான் அதிகப்
படுத்திவிட்டு அவளை ஒழித்துவிடவும் வேண்டுகின்றீர்.
ஏன்? எதனைக் காப்பாற்ற? யாரைக் காப்பாற்ற? உமது
குழந்தையின்மீது நீர் ஒரு சிறிதும் அன்பு கொண்டதில்
லையா? உமது நெஞ்சத்தில் அணுத்துணையும் இரக்கம் என்
பது இல்லையா?'

'தாங்கள் முற்றிலும் அறிந்துகொள்ளவில்லை. நான் இக்குழந்தையின் நன்மையைக் கருதியே, இவ்வாறு செய்யத் துணிந்தேன். கணவனால் மறுக்கப்பட்ட மனைவிகளை சாமிகள் ஏற்பார்களா? என் கொழுநன் பாலிய விவாகத்

தின் தீமைகளைப் பற்றி மேனாட்டாரிடமிருந்து அறிந்தவர் போல் கூறுகின்றார். அதன்படியே நேர்ந்தபோழ்தெல்லாம் மேடையிற் பேசுவார். ஆனால், தனக்கே இத்தகைய நிகழ்ச்சி உதிக்குமாயின், அப்பொழுதன்றோ தெரியும்! குலமுறையைக் கைவிடுதல் கூடுமா? கர்மத்தை விலக்கமுடியுமா? இது விதியின் பயனன்றோ? எங்களால் இதனைக் கடக்க முடியாது. ஆதலின் துணைபுரியும்,' என்று கூறினாள் அன்னை.

ஆனால், ஜேனட் தாய்கூறிய மொழிகட்கெல்லாம் அமைதியாக மறுமொழி கூறி அரை மணி நேரம் கழித்து தாயையும் குழந்தையையும் மீண்டும் அவர்கள் வீட்டிற் கனுப்பி விட்டாள். பிறகு தனது வேலையின் நெருக்கத்தில் இந்த நினைவையே ஜேனட் முற்றிலும் மறந்தனள்.

இரண்டாம் நாளிரவு; நல்ல தூக்கம்; ஒரு வீறிட்ட ஓசை கேட்டது; ஜேனட் விழித்து, 'அது என்ன' என்று கேட்டுக்கொண்டே எழுந்து உட்கார்ந்தாள்.

மீண்டும் அவ்வோசை கீழுள்ள தெருவிலிருந்தும் ஒலித்தது—அது ஒரு பெண் குழந்தையின் துன்பத்தினின்றும் எழுந்த நடுங்கிய குரலொலி. உடனே, கட்டிலை விட்டுக் கீழே குதித்து, பாதங்களில் குறடணிந்து, உடலை ஒரு ஆடையால் மூடிக்கொண்டு, தெருக்கதவை யடைந்தாள் ஜேனட். கையில் மருத்துவப் பெட்டியுடன் ரூத் நாக்சும் ஜேனட்டைச் சார்ந்தாள். பின்பு, இருவருமாக, சந்துகளிலும் வீட்டு வாயில்களிலும் இருந்து வெளிவந்து தெருவில் நெருங்கிச் செல்லும் இந்தியர்கள் கூட்டத்தின் உட்புகுந்து செல்வாராயினர்.

'ஒருவருக்குக் காயம் ஏற்பட்டிருக்கின்றது. நாங்கள் மருத்துவச்சிகள்; வழிவிடுங்கள். நாங்கள் செல்லவேண்டும்' என்று அமைதியாகவும், வேண்டியும், அதிகாரத்துடனும், கூறிக்கொண்டே கூட்டத்தை விலக்கிக்கொண்டு போய், இறுதியாய் ஒரு கும்பலை அணுகினர். இக்கும்பலின் நடுவில் துன்பம் ஆற்றாது, அழுது துடிதுடித்துக் கொண்டிருந்த ஓர் உருவத்தைக் கண்ணுற்றனர்.

'அந்தக் குழந்தையை மருத்துவசாலைக்கு எடுத்து வாருங்கள், அங்கு நாங்கள் தக்கது புரிவோம்' என்று ஜேனட் கூறினாள்.

ஆனால், இதைச் செவியுற்றதும், அக்கூட்டத்தில் ஒரு முணுமுணுப்பு உண்டானது. உடனே இரண்டு மனிதர்கள் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து அக்குழந்தையை ஒரு வீட்டிற்குள் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டனர். குழந்தை மேற்கொண்டும் அலறிக் கத்திற்று.

மருத்துவச்சிகளும், இதனால் தோல்வியடையாது அவ்வீட்டின் கதவு அடைபெறும் முன்பாக அக்குழந்தையைத் தொடர்ந்து வீட்டிற்குள் நுழைந்து விட்டனர்.

வீட்டின் உள் முற்றத்தைக் கடந்து சென்று, தங்கள் சுமையை அம்மனிதர்கள் தரையிற்கிடத்தினார்கள். இரண்டு மருத்துவச்சிகளும் அதன் அருகாமையில் மண்டியிட்டு உட்கார்ந்தனர். மெல்லிய ஒரு சிறுபெண்; பத்து வயது கூட அடைந்திராது எனலாம்.

'கழுத்து முறிந்து போயிற்று! ஒன்றும் செய்ய முடியாது. ஒரு மருந்தூசியை மட்டும் செலுத்துவோம். சீக்கிரத்தில் எல்லாம் முடிந்து போய்விடும்' என்று மருத்துவச்சி

கள் பேசிக்கொண்டனர். மருந்து துன்பத்தைக் குறைத்தது; முடிவு காலத்தை எதிர்பார்த்து நின்றனர்.

அதுகாலை மருத்துவச்சிகட்குத் தெரிந்த ஒரு மனிதன் அங்கு காணப்பெற்றான். அவனைப் பார்த்து, ஜெனட், 'அரிபாபு! நிகழ்ந்தது என்ன? இது உன்வீடாயிற்றே; குழந்தைக்கு ஏற்பட்டது என்ன' என்றாள்.

'இக்குழந்தை எனது அடுத்த வீட்டாராகிய செட்டியாரின் புதிய மனைவி. இன்றிரவுதான் இவளை அவர் தன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டார். இவள் அவனுக்கு இன்பத்தை விளைக்க வில்லைபோலும். மேலும் அவனுக்கு சற்று ஆத்திரம் மிகுந்திருக்கலாம். என்றாலும், சாளரத்தின் வழியாக இவளை அவன் தூக்கிக் கீழே எறிந்தமை ஆய்ந்தவன் செயலன்று' என்றார் அரிபாபு.

'ஆய்ந்தவன் செயலன்றா! ஏன் இல்லை?' என்றாள் ரூத் நாக்ஸ்.

'ஏனெனில், இதனால் ஏற்பட்ட கலவரத்தாலும், ஓசையாலும், போலீசார் வந்து விடுவார்களல்லவா?'

'நீங்கள் ஏன் இந்தக் குழந்தையை மருத்துவ சாலைக்குக் கொண்டுவர உடன்படவில்லை; நான் அவ்வாறுதானே கூறினேன்?'

'இதுகூட தெரியவில்லையா? போலீசார் அங்கும் வந்துவிடுவார்கள் அன்றோ?'

'போலீசார் இதைப்பற்றி ஏன் தெரிந்து கொள்ளக் கூடாது?' என்று ரூத் சினந்துரைத்தாள்.

இதுபோது, அங்கிருந்த கூட்டமுழுதிலும், ஒரு முணுமுணுப்பு ஏற்பட்டது. ஆனால், அரிபாபு இதனை அமர்த்தி விட்டார்.

'சகோதரர்களே! இவள் இந்தியாவிற்குப் புதியவள்.
இவள் என்னுடன் நெருங்கிப் பழகியவள். இவள் தீமை
ஒன்றும் கருதவில்லை. இவள் நமது பழக்க வழக்கங்களை
யெல்லாம் சரிவரத் தெரிந்து கொள்ள வேண்டாமா?
அம்மா! நாங்கள் எங்கள் அந்தப்புற மர்மங்களை வெளியிடுவ
தில்லை. எங்கள் மனைவிகள் எங்கள் சொத்துக்கள். ஆகவே,
நாங்கள் எங்கள் மனைவிகளை எவ்வாறு நடாத்தியபோதிலும்
கூட, ஒருவரும், அவன் நண்பனாயினும் சரி, பகைவனாயி
னும் சரி, எங்கள் உரிமைகளைத் தடை செய்ய முடியாது.
போலீசார் எங்கள் அந்தப்புற மர்மங்களை அறியலாமா?
நாங்கள் மிகவும் பொறுமை சாலிகள். ஆனால் எங்கள்
பெருமைக்கு இழுக்கு நேர்ந்ததாயின், அந்நாளில் உங்கள்
நாட்டிரத்தமும் எங்கள் நாட்டிரத்தமும் ஆறாய் ஓடும்'
என்று அரிபாபு கூறினார்.

தரையிற் கிடந்த உருவத்தினின்றும் ஒரு மெல்லிய
ஓசை உண்டாயது—உயிர் நீங்கிற்று. இரு மருத்துவச்சி
களும், அக்குழந்தையின் முகத்தைத் துணியால் மூடிவிட்டு
வெளிப் போந்தனர். போம் வழியில், இவர் பாதங்களில்
ஒரு பெண்கள் கூட்டம் விழுந்து வணங்கியது.

'அம்மா! நீங்கள் போலீசாருக்கு மட்டும் தெரிவித்து
விட வேண்டாம். நீங்கள் தெரிவித்து விட்டீர்களாயின்,
எங்கள் கொழுநர் இனி உங்களை எம்பால் அணுகவிடார்.
எங்களுக்கு என்ன நேர்ந்த போதிலும், உங்கள் உதவியை
நாடுவது எமக்கு அரிதாய்விடும். ஆதலின், உங்கள் உதவி
யால் நாங்கள் அடையும் நலனை, இனி அடையாத வகை
யில் தாங்கள் போலீசாருக்குத் தெரிவித்து விடப்படாது.
செட்டி, பைத்தியம் பிடித்தவன்; அவன் ஒரு பித்துக்

கொள்ளி; நாள் முழுதும் காமத்தை மிருக்க வல்ல மது வகைகளை அருந்திக்கொண்டிருந்தான். நீங்கள் இதனைப் போலீசாரிடம் தெரிவித்து விட்டீர்களாயின் நாங்கள் உட விருக்க உயிர் வதையடைவோம். அவளோ நல்ல வேளையாய் இறந்து விட்டாள். கூறவேண்டாம். உங்கள் கடவுளாணை; உங்கள் கடவுளாணை' என்றனர்.

மருத்துவச் சாலையின் வாயிற்படியைக் கடந்து சென்று கொண்டிருக்கையில், ரூத் நாக்சைப் பார்த்து, ஜேனட், 'முன்னொரு நாள் ஏன் நமது மேற்கூரையிலிருந்து விளம்பரம் புரியக்கூடாது?' என்று கேட்டனையே; நினைவிருக்கின்றதா? "நான் ஏன் அரசாங்க உதவியை நாடக்கூடாது" என்றனையே. இன்றிரவு நாம் கண்ட காட்சியின் பின்னர், உனது கருத்து என்ன? சிற்சில பெண்களின் நலத்தைக் கருதாது, மேல் நாட்டாருக்கு நிலைமையைக்கூறி, ஓரோ போடாய் விழிப்பூட்டி விடலாமா? ஒருவேளை செய்தாலும் செய்யலாம். என்றாலும் யாது செய்வதென்றே எனக்குப் புலப்படவில்லை யென்று நான் ஒப்புக்கொள்ளுகின்றேன். நீயும் நானும், இவ்வளவு அருகாமையில் இருந்துகொண்டு நாம் நடந்துகொள்ள வேண்டியவைகளைப் பற்றி ஒரு முடிவிற்கும் வரமுடியாது. நாளைய வேலை நம் தலைமேல் இருக்கின்றது—நாளையும், நாளையும், நாளையும்; நேற்று, நேற்று, நேற்றுப்போலவே என்னைப் பொருத்த வரையில் நினைத்து நினைத்து அலுத்துவிட்டேன். உடம்போடு இது எனக்கு ஒத்துப்போய் விட்டது. ஒன்றும் வாய்பேசாமல் நான் எனது கடமையைச் செய்து கொண்டே போகவேண்டியதுதான். கடவுள் ஒரு நாள் தனது உலகை கேட்கவும் பார்க்கவும் தலையிடவும் அறிவுறுத்தலாம். என்னால் முடி-

யாது. நான் களைத்து விட்டேன்; முற்றிலும் களைத்தேன்' என்று கூறினாள்.

ஜேனட், இன்றும் தனது தொழிலைச் செய்து வருகின்றாள். இவளே இக்கட்டுரையை எனக்குத் தெரிவித்தவளும்.

குறிப்புகள்.

பாலிய விவாகத்தைப் பற்றிச் சிறிது நோக்குவாம்... ....அது நமது குடும்பத்தினாலாவது, தாயினாலாவது, பிறர் எவராலாவது ஏற்படும் குற்றமல்ல அது உமது குற்றம். அது என் குற்றம். நாம் எதனைச் செய்ய வேண்டாம் என்று கருதுகின்றோமோ, அதனைப் பிறர் நம்மிடம் கட்டாயப்படுத்த முடியாது. இந்தியா முழுதிலும் பூப்படையும் முன்னதாக என் பெண்ணை நான் மணம் புரிந்து அளிக்கமாட்டேன் என்று கூறும் ஆண்களும் மகளிரும் உளரேல், இது நடைபெறாது என்பது திண்ணம். நீங்கள் அஞ்சுகின்றீர்கள்; நீங்கள் பழக்க வழக்கங்களுக்கு அஞ்சுகின்றீர்கள்: நீங்கள் உங்கள் மகளுக்காக அஞ்சுகின்றீர்கள்: மகனுக்காக அஞ்சுகின்றீர்கள். நீங்கள் அச்சத்தின் உருவமே.......மனிதர்கள் தங்கள் மிருக வேட்கைக்கு இலக்காம் சிறிய குழந்தைப் பெண்களின் துன்பத்தினைப் பொருட்படுத்துவது இல்லை; அவர்கட்குரிய தமது கடனையும் செலுத்துவதில்லை — கிருஷ்ண மூர்த்தி; அடையாறு சொற்பெருக்கு; டிசம்பர் 1925.

நான் அடிக்கடி பெண்களை, அவர்கள் முழு வளர்ச்சியை அடையும் முன்னரேயே தாய்களாகச் செய்யும் கொடுமையைப்பற்றி மேடைகளில் எடுத்துரைத்திருக்கின்றேன்; இதனால் மனித சமூகத்தின் உயிர் நிலைக்கே வினை

யக்கூடிய நிமையைப் பற்றியும் கூறியிருக்கின்றேன். பல மனிதர்கள் இதனைத் தவறென்று அறிவார்கள்; தவறென்று பொதுவில் கூறியும் வருகின்றார்கள். ஆனால் இவர்கள் பிறரை ஏன் இவ்விதமாகச் செய்கின்றீர்கள் என்று கேட்டுக் கொண்டே, தங்கள் பெண்களையே இளமணத்திற் குட்படுத்துகின்றார்கள்; ஏனெனில் பிறர் தூற்றுவர் என்று அஞ்சுவதினால்—டாக்டர் பெசண்டம்மை.

பொது மேடைகளில் பல சமூகச் சீர் திருத்த உழைப்பினர் ஊக்கத்துடன் இதனைக் கண்டிக்கின்றார்கள். ஆனால் தங்கள் பெண்களையே அவ்விதமாக மணஞ்செய்து கொடுப்பீரால், குற்றத்தை மனைவி மீதிலும், தாய் மீதிலும், பாட்டி மீதிலும் சுமத்தி விடுகின்றார்கள். ஆதலின், தங்கைகள், தமக்கைகள், மனைவிகள், தாய்கள், பாட்டிகள், ஆய நாமே இதைப்பற்றி ஊன்றிச் சிந்தித்து, ஆண்மக்கள் நம் மீது குற்றத்தைச் சுமத்தாமல் இருக்கும்படியான வழிகளைக் கண்டுபிடித்தல் வேண்டும்-திருவாங்கூர் மகாராணி, அகில இந்தியப் பெண்கள் மகா நாட்டில் ஆற்றிய தலைமைப் பேருரை; டிசம்பர் 1928.

இந்து மதம் என்பது கடவுள் நெறி; சில இந்துக்கள் அல்லாதார் கூறுவதுபோல் இது சமூக நெறியன்று. இதில் உள்ள சில விஷயங்கள் அபிமானமுற்ற ஆராய்ச்சியாளர் பலர் மனதைக் கவர்ந்துள்ளன. ஆனால் இந்திய மக்கட்கு இந்து மதம் தாழ்வையும், தாழ்வுபடுத்துவதற்குரிய உரிமையுமே கற்பித்துள்ளது—பகத்ராம்; இந்து மதம் என்பதென்ன; இந்தியன் உமிட்னஸ; இலக்குமணபுரி, டிசம்பர் 5, 1928.

* பகத்ராம் என்பவர் பிரோசப்பூரிற் பிறந்தவர். இவர் இந்து மதத்தின் பெயரால் பெண்கள், குழந்தைகள், தீண்டப்படாதார், மிருகங்கள் முதலிய சீவர்கள் அடையும் கொடுமைகளை நன்கெடுத்துரைக்கும் சீர்திருத்த உழைப்பினர்களுள் முதன்மை பெற்றவர்.

நான்காம் அத்தியாயம்

புழுவா மனிதனா?

தீண்டாமை இந்து மதத்தைக் கெடுக்கின்றது; சிறிதளவு பாஷாணம் பாலிற் கலந்ததைப்போல. மகாத்மா காந்தி; யங் இந்தியா; அக்டோபர் 20, 1927. பக்கம் 355.

ஆப்கானிஸ்தானத்து எல்லைப் புறங்களில் போர்த் தொழில் புரிந்தவர்கள்; இவர்கள் தங்கள் தலைவர் (ஜெனரல்) கிடுனியின், காப்பி அருந்திக்கொண்டிருந்தனர். பான்னு, கோஹத், கைபர், வாசீர் ஸ்தானம் முதலிய இடங்களில் தாங்கள் போக்கிய வாழ்நாட்களைப் பற்றியும், அங்கு நேர்ந்த துன்பங்கள், அபாயங்கள், வீரச் செயல்கள், வேடிக்கை நிகழ்ச்சிகளைப் பற்றியும் ஒருவர்க் கொருவர் உரையாடிக்கொண்டிருந்தனர்!

"உன் மனம்போல் தேர்ந்துகொள்ளும்படி விடப்பெற்றால், நீ எத்தகைய இந்திய வீரர் படைக்குத் தலைவனாக இருக்க விரும்புவாய்?" என்று விருந்தளிப்பவர் வினவினார்.

"இணையற்ற கூர்க்காப் படைக்கே" என்று உடனே கூறினார் ஒரு வயதிற் சிறியார்.

"கூர்க்கா வகுப்பினர் சண்டைக்காரர்கள்——ஒப்பற்றவர்கள். ஆனால், சிற்சில வேலைகட்குப் பட்டாணியர்கள்..."

"என்னைக் கேட்டால், நான் சீக்கியர்களையே விரும்புவதாகக் கூறுவேன். உறமும், ஒழுக்கமும் கொண்ட சீக்கியர்கள் தக்க தலைவர்களின் கீழ் சிறப்பு மிகுந்த வீரர்கள்" என்றார் மூன்றாவது ஆங்கில வீரர்; உடனே மற்றொரு இளைஞர்

"எல்லோரும் பண்டு முதல் கொண்டுள்ள கொள்கைகளையே நீங்களும் கூறுகின்றீர்கள். நீங்கள் என்ன சொன்னாலும் சரி! என் மராட்டிய வீரர்கள்மேல் பந்தயம் கட்டுவேன்."

இவ்வாறாக, ஒவ்வொருவரும் தங்கடங்கள் படைவீரர்களையே புகழ்ந்து பேசலாயினர்.

"உண்மையே! நீங்கள் யாவரும் எல்லோரும் அறிந்த போர்த்தொழிலிற் புகழ் சிறந்த வகுப்பினர்களைப் பற்றியே பேசி வந்தீர்கள். ஆனால் போர்த்தொழில் புரியாத தோட்டிகள் வகுப்பை நீங்கள் ஒருவரேனும் போற்றவில்லையே" என்றார் படைத் தலைவர்.

இளைஞர்கள் சிறிது மனம் வருந்தினவர்களாய்த் திகைத்தனர். அவர்கள் ஒவ்வொருவரும், முழுமனதுடனேயே

புகழ்ந்துரை செய்தனர்; அதனை என்றுவது, போர்வீரர்க்கு அழகன்று. படைத் தலைவரோ அவர்களின் கண்ணனையார்.

தான் கூறிய மொழிகட்கு எதிர்பார்த்தவண்ணமே பயன் ஏற்பட்டதைக் கண்டு படைத்தலைவர் புன்னகை புரிந்தார்.

"நாம் இதுவரையில் எல்லைப்புற நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசியே மாலைப் பொழுதைப் போக்கிவிட்டோம். இனி வேறு செய்தி பேசுவோம். நாம் எல்லோரும் வீரர் படையில் உள்ள, இன்றியமையாத போர்த் தொழிலாளர்கள் அல்லாதவர்களைச் சிறிதும் பாராட்டுவதில்லை. நானும் இப்படித்தான் இருந்தேன். ஆனால், பிறர் அறியும்படி புகழ்ப்பெறாத அவர்களின் வீரச் செயல்களைக் கண்டதும், நான் விழிப்படைந்தேன். ஆதலின், நீங்கள் இணங்குவீர்களாயின், நான் ஒரு கட்டுரை கூறுகின்றேன். இக்கட்டுரை நயமாகத் தோற்றாது; எனினும், இதன் நயக் குறைவை நீங்கள் முற்றிலும் கேட்டதின் பின்னர் பாராட்டமாட்டீர்கள்.

'நான் கூறப்புகும் நிகழ்ச்சிகள், மெசப் பொட்டேமியாவில், குட் நகரத்தில் நாம் தோல்வியுற்றபோது நடைபெற்றன. அப்போது நான்...........படைத்தலைவராக இருந்தேன். எனது படையில் அதிகாலை, என் பழைய நெருங்கிய நண்பர் கார்டன் என்பார் படை மருத்துவராய் இருந்தார். இவர் மிகவும் நல்லவர்; பகுத்தறிவுடையவர்; சீவகாருண்ய உணர்ச்சி இவர் மனதில், முட்டையில் உணவு இருப்பதுபோல் நிறைவுற்றிருந்தது. இவர் ஐ. எம். எஸ். பிரிவைச் சேர்ந்தவர். இந்தியாவின் பல வகுப்புக்களையும், பாஷைகளையும் நன்கறிந்தவர்; கார்டன், முதற்றர மனிதன்.

'ஆனால் என் கட்டுரையைத் துவக்கும் முன்னர், இரண்டொரு செய்திகளை நமக்கு விருந்தளிப்பவரின் தெளிவிற்காகக் கூறிவிடுகின்றேன். இந்து மதத்தினர்களின் ஒவ்வொரு செயலும் மத சட்டங்களால் வரையறுக்கப் பெற்றுள்ளது என்று நீங்கள் அறிவீர்கள். இதற்குச் சான்றாக, ஒரு இந்துவும் தன் மலசலத்தை தானே அகற்றுதல் வழக்கமில்லை. இதுபற்றி, இந்துமத சட்டத்தின்படி, ஒரு வகுப்பினர் தீண்டப்படாதார் என்ற பெயருடன் பிறவியிலிருந்து இந்துக்களின் அழுக்குகளை எடுத்தெறிபவர்களாய்ப் பிரிக்கப் பெற்றுள்ளனர். ஆதலின், ஒவ்வொரு இந்து வீரர்படைக்கும் தீண்டப்படாதவர்களாய தோட்டிகள் சிறு படை ஒன்றுளது. இவர்கள் வீரர்கள் செல்லும் பொழுது பின்னணியில் போர்க்கருவிகளின் முன்பாகச்செல்லுவார்கள். கந்தையுடுத்திய, நாற்றம் எடுத்த, பொறுமை மிகுந்த, பிறர் எள்ளி நகையாடுகின்ற, குப்பை கூட்டுபவர்களை மற்றைய வீரர்கள் வசை கூறுவதும் தூற்றுவதும் வழக்கம்.

'கதையை விட்டு விட்டோமே; கூட் நகரத்தில் நாம் தோல்வியுற்றதன் பின்னர் நாங்கள் வீணில் சண்டையிட்டு அலுத்தோம். படையும் கடற்கழியின் ஓரமாக அமர்ந்து விட்டது. கொடிய வெப்பம்; நாளுக்கு நாள் காற்று தீச் சுடர்போல் வீசிற்று. தட்பவெப்பநிலை அறிவிக்குங் கருவியில் உள்ள ரசம், 120 புள்ளிகள் மட்டத்தில் உயர்ந்து நின்றது. உணவுப் பொருள்கள் குறைந்து போயின. மிகுந்த இடைஞ்சல்கட்கு இடையில் எம்மால் கூடியவரையில் படைகளைச் சீர்படுத்தி வைத்துக் கொண்டிருந்தோம். இந்நிலையில் நோயும் எம்மைப் பகைமை கொண்டது. படை மருத்துவருக்குச் சரியான வேலை இருந்தது.

'ஓர் நாள் கார்டன் ஒரு புதிய முறையீட்டுடன் என்னிடம் வந்தார்.

"கர்னல்! எனக்குப் பத்து நிமிடங்கள் செவிகொடுக்க வேண்டும். நான் நமது தோட்டிகளைப் பற்றிப் பேசப் போகின்றேன். இதைப் பற்றிப் பேசவேண்டுமென்ற பரபரப்பு எனக்குச் சகிக்க முடியவில்லை" என்றார்.

'நான் அதிக வேலை செய்து ஓய்ந்துபோன கார்டனுக்கு மூளைக் கொதிப்புக் கண்டதோ என்று ஐயமுற்றேன். தோட்டிகள் படை மருத்துவ விற்பனரின் மேற்பார்வையிற்றான் இருப்பது வழக்கம். ஆனால், பொறுமை மிக்கத் தோட்டிகளால் யாருக்கும் ஒருவிதமான இடைஞ்சலும் கிடையாது.

'என்றாலும் கார்டன் பின் வருமாறு தெரிவிக்கலானார்.

"தாங்கள் நமது தோட்டித் தலைவனை அறிவீர்களல்லவா?—நெடியவன்; நெருங்கி வளராதத் தாடியை உடையவன்; கருவிழியன்; பார்வைக்கு ஒருவிதமாக இருப்பானே அவன்; அவனைத் தெரிவீர்களல்லவா?" என்றார்.

'நான் இவனை நன்கறிவேன். மருத்துவத் தலைவர் இவனைப் பற்றிக் கூறியதும் இவன் உருவம் என் மனக்கண் முன் நின்றது. பழைய பாகை ஒன்றையும், அழுக்கடைந்த கந்தைகளையும் உடுத்தி இருப்பவனாயினும், இவன் உருவம் கவர்ச்சியை இழைக்கக் கூடியதே; இவன் இராணுவ மேல் வேலைக்காரர்கள் [illegible] சுத்தம் படுத்தும் தொழிலைக் கொண்டவன்; எனவே, தோட்டிகள் படைக்கு மேற்பார்வை உரிமை பெற்றவன்.

"உங்களுக்கு நினைவிருக்கும்? அவன் மிகவும் நல்லவன். அவன் வேலையை ஒரு கலையெனச் சொல்லக் கூடிய

நிலைமைக்குக் கொண்டு வந்தவன். அவன் அறிவும், ஊக்கமும் அவனை எனக்கு இன்றியமையாதவனாய்ச் செய்தன. பல முறைகளில் அவன் எனக்கிழைத்த உதவிக்காக நான் அவனுக்கு நன்றி செலுத்தி யிருக்கின்றேன். அவனுக்குள்ள வேலையை விட, அவன் வேறொரு தொழிலைக் கையாடி வந்தான். போர்த் தொழிலில், தோட்டியாய் இருந்தாலும் அவன் சண்டை செய்வான். தாங்கள் புன்சிரிப் படைகின்றீர்கள். இருந்தாலும், அவன் செய்த செயல்களைப்பற்றி நான் கூறுகின்றேன் கேளுங்கள்.

"சண்டை ஏற்பட்ட காலத்தில், அவன், அவனுக்கேற்பட்ட இடத்தில் போர்க்கருவிகளுடனும் கோவேறிக் கழுதைகளுடனுமே இருப்பான் உண்மையாகக் கைகலந்த போர் துவங்கினவுடன், மெல்ல மெல்ல, தன் இடத்தை விட்டகன்று படையின் முன்னணிக்குச் சென்று இறந்து போன ஒரு போர் வீரனின் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு, போர் முடியும் வரையில் சண்டை புரிவான். போர் முடிந்ததோ இல்லையோ, உடனே எப்பொழுதும் போல் மீண்டும் தன் இருப்பிடத்திற்கு வந்து ஒன்றும் அறியாதவன்போல் இருந்து விடுவான். இவன் இவ்வாறு செய்து வருவதை நான் இதுவரை அறிந்ததே கிடையாது. அவ்வளவு திறமையுடன் நடந்து கொள்ளுவான். இப்படியாகவே நடைபெற்று வந்தது. ஓர் நாள், போர் முடிந்தவுடன், பிணங்களை யெல்லாம் அப்புறப்படுத்தும் என் கடனை நான் செய்துகொண்டு வந்தேன். அப்பொழுது என்னவென்று நினைக்கின்றீர்கள்? முன்னணியில் இரு கண்களுக்கும் நடுவிற் குண்டு ஊடுருவிப் பாயப்பெற்று கையில் துப்பாக்கியைப் பற்றியபடியாகவே அவன் பிணமாய்க் கிடந்தான். பிறகு நான் போர் வீரர்களை வினவினேன்.

அவர்கள் உண்மையை உரைத்தனர். துவக்கத்திலிருந்தே இவன் இவ்வாறு செய்து வந்தவனாகக் கேள்வியுற்றேன். அவன் பத்து சண்டைகளில் போர் புரிந்துள்ளானும்.

"நிற்க, நான் இதைப்பற்றி மறந்தே போய்விட்டேன். பிறகு ஓர் நாள் போர் வீரர்கள் தங்கியிருக்கும் விடுதிகளைப் பார்வையிடச் சென்றேன். அதுகாலை நான் ஒன்றைப் பார்த்தேன். அது ஒன்றும் பெரிதல்ல—ஒரு தோட்டிதான்—பதினாறு வயதுள்ள பையன்; தோட்டிகளில் மிகச் சிறியான்—மண்டையைப் பிளக்கத்தக்க சூரிய வெப்பத்தில் வெட்ட வெளியில் உட்கார்ந்து கொண்டு, சிலர் சண்டையிடுகின்றார்; சிலர் மண்டையைப் போடுகின்றார் என்று பாடிக்கொண் டிருந்தான். அதுபோது அவன் தன் வெறுங் கைகளால் கலீசுப் பாண்டங்களில் இருந்தவற்றை எடுத்தெறிந்து கொண்டிருந்தான்—வெறுங்கைகளால்! தோட்டிகள் மோட்ச உலகம் வரை நாறுகின்றார்கள் என்பதில் வியப்பென்ன!

"அதுபோது என் மனதில் ஒன்று உதித்தது. அது இன்று வரை என் மனதை விட்டகன்றதன்று. மனிதன் தன் சகோதரர்களையே மிருகங்களிலும் தாழ்மையாக மதிக்கின்றான். அவ்வாறு மதிக்கப் பெற்றமையால் தங்களைத் தாமே மிருகங்களிலும் தாழ்மையாகக் கருதுகின்றார்கள். மதம் என்ற ஒரு பொருளின் பெயரால் இவர்கள் இறுதி வரையில் நாரின் மலசலத்துடனேயே காலம் கழிக்கின்றார்கள்! இழிவிற்கும், வசைக்கும், கழிவிற்கும், உடலொடு ஆத்ம அடிமைக்கும் பிறந்தவர்கள்; மதத்தால் விடுதலையின்றி இந்நிலைமையிலேயே இறுகப் பிணிக்கப் பெற்றவர்கள்; என்றாலும் தங்கள் இழி தொழிலைச் செய்வதிலும்

பாலும் ஒரு உற்சாகத்தை உடையவர்கள்; மனிதன்போல் போர் புரிந்து இறக்கும் துணிவையும் மனத்தில் வகித்தவர்கள். என்னென்று கூறுவது! யோசித்துப் பாருங்கள்! கடவுள் ஆணைப்படி—!

'ஆம்; இதற்கென்ன வழிகண்டு பிடித்திருக்கின்றீர்கள்?' என்றேன்.

"நான் அதற்காகத்தான் தங்களிடம் வந்தது. இதற்கொரு வழி என் மனதில் உதித்துள்ளது. முதலாக், நான் ஒரு கம்சுப் பாண்டத்தைக் கண்டு பிடித்திருக்கின்றேன். இப்பாண்டத்தின் உட்புறத்தைக் கைகளால் தொடாமலேயே, அதில் உள்ள கழிவுகளை அப்புறப்படுத்தி விடலாம். இத்தகைய பாண்டங்களை நாம் மிகவும் எளிதில் செய்யக் கூடும். அவைகட்கு மண் எண்ணெய் 'டின்'கள் தாம் இலவு; ஒரு 'டின்'னை எடுத்துக் கொள்ளுங்கள்; அதனை இரண்டாகப் பிளந்து விடுங்கள்; பிறகு அதற்கு மரத்தினால் கைப்பிடிகளை அமைத்து விடுங்கள். அவ்வளவுதான்.

"ஆனால், நான் இம்மட்டுடன் எனது சீர் திருத்த முறைகளை நிறுத்தப்போவதில்லை. என் தோட்டிகளுக்கு உண்மையான நல்ல இராணுவ உடுப்புகளை அளிக்கும்படி விரும்புகின்றேன்; அவர்களின் அழுக்குபடிந்த, கந்தலாய்ப் போன, தோட்டிகள் உடைகளை நீக்கிவிட விரும்புகின்றேன்; அவர்கள் என்றும் நீராடி நாற்றம் வீசாமல் இருக்க விரும்புகின்றேன்; பன்றிகள் கூட்டம் போலன்றி அவர்கள் மற்ற காலாட் படைகளைப்போல் அணிவகுத்த முறையாகச் செல்லும்படி விரும்புகின்றேன்; இறந்துபோன கிழத்தோட்டியின் பொருட்டாயினும், அவர்களை நான் மனிதர்களாக்க விரும்புகின்றேன்.

'கார்டனின் உண்மையான நோக்கங்களைக் கண்டு ஒருவரும் ஐயுற வேண்டுவதில்லை. என்றாலும், கார்டனின் திட்டங்கள் பயன் பெறுமா என்று நான் அதுபோது ஐயுற்றேன். எவ்வாற்றாலும், தோட்டிகளை முன்னுக்குக்கொண்டு வர விரும்பி முனைந்து நிற்கும் கார்டனின் திட்டங்களில் எனக்கு நம்பிக்கையில்லையென்று நான் கார்டனிடம் கூறியிருப்பேனாயின், கார்டனின் மனம் துன்படையும் ஆதலின், நான் "சரி, உன் மனம் போற் செய். உனக்கு நல்ல திருட்டம் வாய்க்க" என்றேன்.

'கார்டன் உடனே தன் முயற்சியில் இறங்கிவிட்டார். தன் கருத்தின்படி கம்சுப் பாண்டங்களைச் செய்து குவித்து விட்டார். தோட்டிகட்கெல்லாம் ஒரே விதமான உடுப்புக்களைத் தைத்து உடுக்கும்படிக்கு ஆணையிட்டு விட்டார். அவர்கட் குள்ளாகவே, இறந்துபோன கிழவனுடைய இடத்தில் மற்றொரு தோட்டியை தலைவனாக அமர்த்தி விட்டார்.

'இவன் நல்ல உடல் திடம் வாய்த்தவன்; இருபத்தியைந்து வயதை உடையவன். ஐந்தடி எட்டங்குல உயரம் இருப்பான்; புன்னகை எங்கேயும் குடிகொண்ட உருண்டு பருத்த முகம்; முகத்தில் கரிய மீசை; எனக்கு இவைகள் எல்லாம் நன்றாக நினைவில் இருக்கின்றன—பின்னர் நிகழ்ந்த நிகழ்ச்சிகளினால்.

"இவன் பெயர் குப்பு. நான் இவனைத் தலைவனாய்த் தேர்ந்தமை எற்றுக்கெனில், இவனுக்குக் கால் பந்தாட்டம் கற்றுக்கொடுக்கும் பொருட்டே" என்றார் கார்டன்.

'காற்பந்தாட்டம்—தோட்டிகள்!' என்று நான் மனதிற்குள் நினைத்துக்கொண்டு வாளாவிருந்துவிட்டேன்.

ஆனால் அவர்கள் ஒரு வகையாகப் பந்தாடவில்லையென்று நான் கூற முடியாது.

'ஆண்டு முடிவில் கூட் நகரத்தின்மீது படை எடுத்துச் சென்றோம். அதன் பின்னர் பாக்தாத் நகரம் வரையில் பகைவர்களைத் தொடர்ந்து சென்றோம். என்ன நடை! என்ன நடை! மாலை ஐந்துமணி முதல் காலை ஒன்பதுமணி வரையில் நடைதான்; முதுகில் சுமையுள்ள பெரும் உடுப்பு மூட்டை; போருக்கு உரியவைகளைச் சுமந்து பின்தொடரும் கோவேறு கழுதைகளும், வண்டிகளும், எங்கள் பின் எழு மைல் தூரம் நீளமுடைய ஒரு தொடர். இவைகளினின்றெழும் தூசு எங்கள் உடலுக்குள் ஊடுருவிப் புகுந்தன.

'காலாட் படைகளின் பின்னால், தொடர்ந்து வந்த கூட்டம் போர் வீரர்கள் படையைப் போலவே இருந்தது. இதற்கு குப்பு தலைமை வகித்திருந்தான். ஒரு சார்ஜண்டு—மேஜரைப் போல் கைவீசி நடந்து வந்தான். தோட்டிகள் எல்லாம் காலாட் படைகளைப் போன்றே இருந்தார்கள். நாளுக்குநாள் புதிய உடுப்பில் பார்வைக்கு மிகவும் கவர்ச்சியை இழைத்தார்கள். ஈதெல்லாம் கார்டனின் வேலை! கார்டன் மிக்கத் திறமை படைத்தவர்—இவர்கள் மனத்தில் சுயமரியாதையையும் வீரத்தன்மையும் உட்புகுத்திவிட்டார். அவர்கள் இப்பொழுது தங்களுக்குள்ளாகவே, தங்களுக்கென்று ஒரு தலைவர் (குப்பு) இருப்பதாக உணர்ந்து கொண்டார்கள்—தங்களைக்கண்டு நாணப்படாத ஒருவர்; தங்களின் உரிமைகளைக் காப்பாற்ற முன்வரும் ஒருவர்; இவரது (குப்புவின்) துணை அவர்கட்டு ஒரு உயர்ந்த நிலைமையை உண்டுபண்ணிற்று. கடைசியாக, துருக்கியர்களை நெருங்கி விட்டோம். அன்று முதல் ஓயாதுசண்டை நடைபெற்றது.

'சண்டை துவக்கத்திலிருந்தே, குப்பு துருக்கியர்களின் துப்பாக்கிகளைச் சேர்த்துக் கொண்டேவந்தான். இவைகளை ஒன்றன் பின் ஒன்றாய்த் திரட்டித் தங்களது உடுப்பு மூட்டைகளில் ஒளித்து வைக்கத் தலைபட்டான். ஓர்நாள் இவைகட்கு உபயோகம் ஏற்படும் என்று குப்புதிண்ணமாய்க் கருதினான். சிற்சில நேரங்களில், குப்பு தன் தோளில் ஒரு போர்வீரனைப்போல துப்பாக்கியைச் சுமந்து திரியவும் விரும்புவான். அவன் இந்த வேட்கையை எவ்வாறு அடக்குவான்?

'போர்ப் படையில் இல்லாதவர்கள் (தோட்டிகள்) போர்கருவிகளைச் சுமத்தல் கூடாது; ஒழுங்கற்ற முறையாகும். ஆனால் அங்கு நடைபெற்ற போரில் எல்லாச் சட்டங்களும் கைவிடப்பெற்றன. பகுத்தறிவு ஒன்றே சட்டமாய் இருந்து வந்தது. கார்டன், தன் தோட்டிகளைப் பற்றி ஒரு குழந்தை தனது பொம்மைகளைப்பற்றிப் பேசுவதுபோல் பேசி வந்தார்.

'ஓர் நாளிரவு, டைக்ரீசு நதி வளைவில் நாங்கள் சண்டை புரிந்துவிட்டு, உணவு அருந்திக்கொண்டிருந்தோம். அது போது கார்டன்,

"கர்னல்! என் தோட்டித் தலைவன் குப்பு" என்று துவக்கினார். 'நான், கார்டன் தனது வளர்ப்புக் குழந்தைகளைப் பற்றிக்கதை பேசப்போகின்றார் என்று வேறு வழியில்லாது செவிசாய்த்துக் கேட்கலாயினேன். அன்றிரவு கார்டன் காயமடைந்தவர்களைத் தேடிக்கொண்டு போர்க்களத்தில் பதுங்கிப் பதுங்கிச்சென்று கொண்டிருந்தார். அங்கு ஒரு படைத்தலைவர் இறந்து இடக்கக் கண்டார். ஆனால் இப்பிணத்தின் அருகாமையில் ஒன்றைக் கண்டு

விட்டார். அது என்ன? அது குப்புதான். குப்பு மிகவும் அமைதியாக தரையில் உட்கார்ந்துகொண்டு ஒரு துப்பாக்கியில் குண்டுகளைப் போடுவதும் சுடுவதுமாய் இருந்தான்! தனது தோட்டித் தொழிலை மறந்துவிட்டான்! தான் ஒரு போர்வீரன் அல்லவென்பதையும் மறந்தே போனான். எதிரிகளைச் சுடுவதிலிருந்து எதிரிகள் அனைவரும் இவன் மீது சுடுவதனால் உண்டாகும் மண்ணும் சேறும் உடம்பு முழுதும் நிறைந்திருந்தது. இவன் எதிரே ஆற்றுக்கப்பால், ஓர் கட்டிடத்தில் ஓர் சாளரம் தென் பட்டது. இச்சாளரத்தின் நடுவிற் குறிவைத்துக் குப்பு சரமாரியாகக் குண்டுகளைச் சொரிந்து வந்தான். ஒவ்வொரு குண்டும் அக்கட்டிடத்தில் இருக்கவேண்டிய ஒவ்வொரு துருக்கியரையும் கொன்றுவிடும் என்று இவன் கருதினான்போலும்! நாங்கள் துருக்கியர் கையிலிருந்து பற்றிய குண்டுகளைச் செலவிட்டு வந்தான். மறைந்துகொண்டு சுடுவது என்ற நினைவே குப்புவுக்கு இல்லை: சாளரம் இருக்கிறது. அதைப் பார்த்து, சுடவேண்டியது தானே; வேறென்ன இருக்கிறது? இதற்கு ஒளிந்து கொள்வானேன்? பதுங்கி யிருந்துச் சுடுவானேன்?

'ஓர் வேளை, "நான் இதற்கு ஒரு வீரப்பதக்கம் பெறுவதும் கூடும். இதோ தன் வயிற்றோடு வயிறாக வளர்ந்து கொண்டு காளைபோற் சீறி கார்டன் துரை வருகின்றார். அவர் என்பால் வருவதற்குள் மற்றொரு குண்டைச் செலுத்திவிடவேண்டும். அவர் கட்டளையை நான் இதுபோது கேட்க என் செவிகளுக்கு ஆற்றல் குறைவாக இருக்க வேண்டும்" என்று குப்பு தனக்குள்ளாகவே சொல்லிக் கொண்டிருந்தான் போலும்!

"அடே முட்டாள்! நிறுத்து! உன் வேலையை நிறுத்து!" என்று (கார்டன்) கூறினேன். ஆனால், "அவன் ஒரு குறிகாரன். இதோ நான் அவனைச் சுட்டுவிடப் போகின்றேன்!" என்றான் குப்பு.

'கார்டன்! இதனை நீ என்னென்று கூறுகின்றாய்?' என்றேன் (கர்னல்)

"உமது அதிகார தோரணையில், இதனைக் கீழ்ப்படிதலில்லாத் தன்மை என்று நீர் கொள்ளுதல் கூடும். நான் மட்டும் இதனைப் புழு மனிதனாகும் மாறுதலில் ஏற்படும் ஒரு நிகழ்ச்சி என்றே கூறுவேன்." என்று கார்டன் விடையிறுத்தார்.

இதுபோது படைத்தலைவர், 'நீங்கள், இந்தக் கட்டுரையைக் கேட்டு அலுத்துப்போய் விட்டீர்களா? சற்று உற்சாக மடையுங்கள்; கொஞ்சந்தான் இருக்கின்றது. இவ்வாறு குப்பு செய்தது டைக்ரீச நதிக்கரை வளைவில். நாங்கள் அங்கு ஒரு மாதம் சண்டை யிட்டோம்; மிகுந்த உயிர்ச் சேதம் அடைந்தோம். எஞ்சிய எல்லா மனிதர்களுடைய உதவியும் இன்றி பலமற்றதாக இருந்தது. சண்டை முடிந்தது; துருக்கியர் முறியடிக்கப் பெற்றார் என்று மகிழ்வுற்றிருந்தோம். ஆனால் வீரம் படைத்த துருக்கியர் மீண்டும் எங்கள் இருபக்கங்களிலிருந்தும் தாக்குவாராயினர். எங்கள் முன்னணியையும் பிளந்து உட்புகுந்தனர். முன்னணியில் கார்டன் தனது வேலையில் மும்முரமாய் ஈடுபட்டிருந்தார். துருக்கியர்களின் பீரங்கிகள் எங்கள் படையின் பெருங்கேடு இழைத்து வந்தன. முன்னணியில் குண்டுகள் இல்லை; என் செய்வது? குண்டுகள் இல்லை. துருக்கியர்கள் மேலே வருகின்றார்கள். குண்டுக

ளுமில்லை; துருக்கியர்களும் முன்னேறி வருகின்றார்கள். என் செய்வது? துப்பாக்கியின் முனைகளைத் தான் ஆயுதமாகக் கொண்டு சண்டை செய்யவேண்டும்.

"எங்கள் கையில் குண்டுகள் இல்லை; ஏதாவது ஒரு வழி செய்யவும் கடவுள் ஆணை" என்று மீண்டும் வார்த்தை வந்தது.

'ஆனால் அதுபோது ஒரு மனிதனாயினும் தன் இடத்தை விட்டகலக் கூடாது. அவரவர்கள் இடத்தைச் சிறிதும் பெயராமல் காப்பாற்றும் வேளை அது. இந்நிலையில் 'குண்டுகள் இல்லை' என்று கூறுவதில் என்ன பயன்!

''துப்பாக்கி ஈட்டிகள்! துப்பாக்கி ஈட்டிகளும் கை வெடிகளும்!'' என்று கார்டன் அலறுவாராயினர். கை கலந்து சண்டையிடும் நிலைமையைக் கார்டன் எதிர்பார்த்தனர்.

'இந்த நிலைமையில், கார்டன் வியப்பெய்தினார். அவர் கண்முன் துப்பாக்கிக் குண்டுகள் நிறைந்த பெட்டிகள் சிறு குன்றுகளாகக் குவிக்கப் பெற்றன. இவைகள் தாமாகவே நடந்து வந்தனவா?

'கார்டன் திகைத்துப் போனார். ஊன்றி நோக்கினார். குண்டுகள் உள்ள பெட்டிகளைச் சுமந்துகொண்டு, இருகால்களும் கவட்டைபோல் வளைந்த வண்ணம் ஓர் உருவம் வந்தது. கால்களின் அமைப்பு கார்டனுக்குத் தெரிந்த ஓர் மனிதனுடையதைப் போன்று இருந்தது.

"குப்பு! குப்பு!!" என்று கார்டன் கூவினார்.

"ஆம் துரையே!"

'குப்புவின் புன்னகையுடைய முகத்தில் ஒரு அழகு காணப் பெற்றது.

"குப்பு! நீ படை வீரர்களில் ஒருவன் அல்லவே! நீ எங்கு செல்கின்றாய்?"

"நான் என் மரணத்தை நோக்கிப் போகின்றேன். நான் இனி தோட்டியல்ல; எப்பொழுதும் அல்ல; இன்று முதல் நான் ஒரு போர்வீரன்" என்றான் குப்பு.

'இதுகாலை ஒரு வெடிகுண்டு விழ்ந்தது. குப்பு எங்குள்ளான் என்று கார்டன் உற்றுப் பார்த்தார். வெடியாற் சிதறிப் போனானோ, என்னமோ, குப்பு மறைந்து விட்டான்.

'—இவ்வாறாக, நாங்கள் இறுதியில் கூட் நகரத்தை மீண்டும் கைப்பற்றி விட்டோம். இந்த நாளைக் கொண்டாடும் பொருட்டு, கார்டன் தனது தோட்டிகட்கு ஓர் பெரும் விருந்தளித்தார். அவர்களும் எங்கிருந்தோ இரண்டொரு ஆடுகளைக் கொண்டு வந்து விட்டனர். விருந்து முடிந்தது'.

'அன்றிரவு கார்டன் என்னிடம் வந்து,

"கர்னல்! என்னுடைய தோட்டித் தலைவனை நன்கறிவீர்களல்லவா—குப்பு? (யார்தான் கார்டனின் குப்புவை மறக்கக் கூடும்!).

"குப்பு இப்பொழுது கைது செய்யப் பெற்றிருக்கின்றான். அவன் வழக்கு நம் முன்னிலையில் வரும் முன்னர் நான் இரண்டொரு செய்திகளைத் தெரிவித்துவிட விரும்புகின்றேன்.

"தோட்டிகள் விருந்து முடிந்ததும் குப்பு நன்றாகக் குடித்து விட்டான்; அவனுக்கு எங்கிருந்தோ ரம் (ஓர்

வகைச் சாராயம்) கள்ளத்தனமாய்க் கிடைத்து விட்டது. மயங்கிய நிலைமையிலேயே தோளில் ஒரு துப்பாக்கியைச் சுமந்து கொண்டு, தலையில் ஒரு கலசத் தகரத்தை இருப்புக் கவசம்போல் அணிந்து கொண்டு, பாசறைகளைச் சுற்றிச் சுற்றி, செவிக்கின்னாத பாடல்களைப் பாடத் துவங்கினான்; தான் ஒரு போர்வீரனாக படையில் சேர்ந்து கொண்டதாய்க் கூவிக் கூத்தாடலாயினான்; வீரன்; வீரன்; வீரன்; வீரனன்றி வேறன்று; தோட்டியாயினமைப் பெருந் தவறு பற்றியே! வீரனாக, வீரனாக, முக்காலும் வீரனாக என்னை யார் மறுத்துரைப்பது? மேலும் மேன்மை தங்கிய சக்கிரவர்த்தி பெரும் போரில் ஈடுபட்டிருக்கையில்! என்று பலவாறாக ஆடத்துவங்கினான். ஒருவராலும் தாங்க முடியவில்லை.

"கர்னல்! குப்பு குடித்திருந்தது உண்மைதான்— போர்க்காலத்தில் குடித்திருந்தான் இதற்கு இராணுவ நீதி வழங்க வேண்டும். ஆனால், துருக்கியர்களுடன் குண்டுகளில்லாமல், துப்பாக்கி முனையாலேயே போர் புரியும் நிலைமை ஏற்பட்ட பொழுது, குண்டுகட்குப் பஞ்சம் ஏற்பட்டபொழுது, குப்பு தன் முதுகொடியத் துப்பாக்கிக் குண்டுகள் பெட்டிகளைச் சுமந்து வந்து, அதிலும் எதிரிகள் குண்டுகள் மாரியை பொருள் படுத்தாமல் சுமந்து வந்து, நமது முன்னணிக்குக் கைகொடுத்தானே. இதன் பிறகு இவன் குடித்து விட்டானாயின் இவனை இராணுவ மன்றத்தில் குற்றம் சுமத்துவதென்றால், எப்படி? தோட்டியாய் இருப்பினும், அவன் கலத்திற்கு நான் பொறுப்பாளியானபடியால், நான் அவனுக்கு "விக்டோரியாச் சிலுவை" (பிரிட்டிஷ் அரசாங்கத்தில் முதற்தர போர்ப் பரிசில்) யையே அளிக்கும்படிக்குக் கூறுவேன். ஆம், ஐயா! விக்டோரியாச் சிலுவைக்கே!"

படைத் தலைவர் இத்துடன் முடித்து விட்டுத் தனது "சுங்கானில்" புகையிலையைத் துறுத்திக் கொண்டிருந்தார்.

'தாங்கள் குப்புவிற்கு யாது செய்தீர்கள்?' என்று விருந்தளிப்பவர் வினவினார். படைத்தலைவர் புன்னகை புரிந்து,

'முன்னர் நான் தெரிவித்தபடியே, சிற்சில வேளைகளில், சட்டங்களிலும் உயர்வாகப் பகுத்தறிவை நாங்கள் பாராட்டுவது வழக்கம்' என்று விடையளித்தார்.

குறிப்புகள்.

கடந்த பிறவிகளில் இழைத்த பாவங்களின் பயனாய், இப்பிறவியிலும் அவர்கள், இறக்கும் வரையில் தீண்டப்படாதவர்களாய்ப் பிறக்கின்றனர் என்று இந்து மதம் போதிக்கின்றது. அவர்கட்கு இறக்கும் வரையில் வேறு விடுதலை கிடையாது.—ஹென்றி உவைட்ஹெட் பாதிரியார். இந்தியாவின் ஒதுக்கப் பெற்றவர்களும் கிறிஸ்து மதமும். 1927. பக்கம் 5.

மனித உணர்ச்சியையும், மனித ஆற்றலையும் படைத்த ஒரு வகுப்பினரை எக்காலும் எப்பொழுதும் அறியாமையிலும் அடிமைத் தன்மையிலும் துன்பத்திலும் ஆழ்த்தி வைத்திருப்பதைப் பார்க்கினும், அல்லது இவ்வாறு தம்மைத் தாமே நினைத்துக் கொள்ள, கொள்ளும்படியான நிலைமையை ஏற்படுத்தி யிருப்பதைப் பார்க்கினும், உள்ள ஒரு பெருங் கொடுமை [illegible]லகில் காண்பது அரிது; இவர்கள் தங்கள் நிலைமையிலிருந்து முன்னேற முயற்சிப்பதும் பாவம் ஆகும். வாயற்ற இந்த ச[illegible]கோடிகள், நாள்தோறும் மண்ணோடு மண்ணாய்த் தேய்க்கப்படுகின்றார்கள்; இழிவாக

நடத்தப்படுகின்றார்கள்; மிருகங்களுக்கும் இத்தகைய கொடுமைகளை இழைப்பது கிடையாது. உணவற்று, உடையற்று, மனைநிடம் அற்று, நல்லிருக்கையற்று, பாம்பரை அடிமைத் தன்மையால் சுதந்திரம் அற்று; எந்நேரமும் கெஞ்சும் தன்மையை படைத்தவர்களாய், பசியின் கொடுமையால் கைக்குக் கிட்டியதைப் புசிப்பவர்களாய், மத உணர்ச்சியிலும், ஆன்ம உணர்ச்சியிலும், மனோ உணர்ச்சியிலும் உடல் உணர்ச்சியிலும் கடையர்களாய் ஒதுக்கப் பெற்று, இவர்கள் இறுதி வரையிலும் துன்பத்திற்கே பிறந்தவர்களாய்க் கையறு நிலையில் இருக்கின்றார்கள்—ராவ்பகதூர் எம். சி. ராஜா; ஒடுக்கப்பட்ட இந்துக்கள். பக்கம் 7.

தீண்டாமையும், சாதித் தாழ்வும், நமது சமூகக் கட்டுப்பாடுகளால் ஏற்பட்டன; தாழ்த்தப் பெற்ற மக்கட்கும் தீண்டப்படாதவர்கட்கும் அரசாங்கம் சில உரிமைகளை அளிப்பதனால், பெரிதும் துன்பத்திற்குள்ளாக்கும் தீண்டாமையும், சாதித் தாழ்வும் எவ்வாறு நீங்கும் என்று எனக்குத் தோற்றவில்லை.—சர் அரிசிங் கௌர். இந்தியா சட்டசபை வாதம், பிப்ருவரி 23, 1923, பக்கம் 704.

ஒதுக்கப் பெற்றவர்கட்கு எத்தகைய காப்புச் சட்டங்களாலும் நலனிழைக்க முடியாது; உயர்தர இந்துக்கள் தாங்களே தோட்டித் தொழில் புரியவேண்டும். இவ்வாறாகவே தாழ்த்தப் பெற்ற மக்கட்குத் தங்கள் கடமையைச் செய்தல் வேண்டும். உயர்தர மக்களே தோட்டித் தொழிலில் இறங்கிய பிறகு, காப்புச் சட்டங்கட்கு அவசியமில்லை. இப்பொழுதுள்ள நிலையில் பொதுக் கிணறுகளையும் பொதுப் பள்ளிக்கூடங்களையும் அவர்கள் சட்டப்படி உபயோகிக்கலாம்; ஆனால் உயர்தர இந்துக்கள் என்று கூறப்படுபவர்கள்,

இவர்களைத் தடை செய்து விடுகின்றார்கள்—மகாத்மா காந்தி; யங் இந்தியா; ஜூலை 14, 1927. பக்கம் 232.

ஐந்தாம் அத்தியாயம்.

இரண்டு இராணிகள்.

இருபது வயதிற்கு மேற்பட்ட இந்தியர்களில், நூற்றுக்குத் தொண்ணூறு பேர்கட்கு, எழுத்து மூலமாக கற்பயிற்சி அளிக்க முடியவில்லை—இந்திய விவசாய ராயல் கமிஷன் அறிக்கை, 1928, பக்கங்கள் 559-60.

இக் கட்டுரையில் காணப்படும் நிகழ்ச்சிகள், ஒரு மத்திய இந்திய சமஸ்தானத்தில் நடைபெற்றன. ஒரு சிறிய சமஸ்தானம்; மக்கள் நெருக்கம் குறைவுற்றது; குன்றுகள் நிறைந்த சிற்றூர்களைக் கொண்டது; புதர்களும் புலிகளும் செறிந்துள்ளது.

அரசர் கொடியதோர் நோய்வாய்ப் பட்டிருந்தார். இந்நோய், ஆங்கிருந்த ஆங்கில மருத்துவராலும், அரசாங்கச் சோதிடராலும், நாட்டு மருத்துவராலும், அரசரைவிட்டு அகன்றதன்று; மற்றைய மந்திர தந்திரங்களும் பயனற்றன.

இரண்டாம் அரசி ஒரு ஆண் மகவைப் பெற்று, இம்மகவும் முறுகி வளர்ச்சி கொண்டிருக்க, முதல் அரசி,

தனக்கோர் குழந்தையும் இன்றி விதவையானதற்கு மனம் வருந்தினாள்.

'என் மன்னரைப் பறிகொடுத்து, பொற்றாலி இழந்து' என் வாழ்நாள் முழுதும், இளையவள் மகனுக்காக ஆட்சி செலுத்தும் பிரதிநிதியின் கட்டுக்காவலுக்கு அடங்கி, நான் ஒரு மூலையில் இருந்து அரை வயிற்றுச் சோறுடன் கண்ணீரும் கம்பலையுமாய் உறங்கிக் கிடப்பதா?' என்று முதல் மனைவி கூறுவாள்.

'உடனே, ஊக்கமே உருவாய்ப் பிறந்த இவள், இதற்குரிய முயற்சியைத் தேடலாயினாள்.

'என் சோதிடனை அழைத்து வா' என்றாணையிட்டாள்.

எனவே, சோதிடன் அரசியின் முன் இருந்த ஒரு திரை மறைவில் நின்று கொண்டிருந்தான்.

'உன்னிலும் உயர்வான ஒரு சோதிடனை நீர் அறிவீரா?' என்று, முதலரசி விதியின் கையாளாகிய சோதிடனைப் பார்த்துத் தனது இனிமையற்ற குரலோடும் வினவினாள்.

'உதயகால முத்தனையீர்! தங்களின் நலனுக்காக அடியேனுக்குச் சாமிகள் அருளிய பேராற்றல் உள்ள வரையில், என்னிலும் உயர்வுடையாரைக் காண்டல் அரிதன்றோ?'

'ஆயின் அப்புறம் செல்! வயித்தியனை இவ்விடம் ஓடிவரச் சொல்'—என்றாள் அரசி.

எனவே, மருத்துவன் பெருமூச்செறிய, தன் கொழுத்த உடலைச் சுமந்துகொண்டு, ஓட்டோடியும் அரசியின்

பால் வந்தான்—இவன் பெருமூச்சு திரையையும் கடந்து அரசியின் செவியிலும் ஒலித்தது.

'உன்னிலும் உயர்ந்த, நோயை அகற்றவல்ல மருத்துவர் ஒருவரை நீர் அறிவீரா?'

'மலை நாட்டின் பெருமை மிக்கீர்! உண்மையைக் கூறுமிடத்து, இல்லை என்பேன்' என்றான்.

'அடிபடும் முன்னர் அகன்று செல்! பேடியே! இழிவுடையோனே! மயிர் வினைஞனை என் முன் அனுப்பு' என்று அரசி கடிந்துரை செய்தாள்.

எனவே, மயிர் வினைஞன், பாதங்களில் சிறகு முளைத்தாங்கு பறந்தோடி வந்து, இராணியின் திரைக்கப்பால், நின்றான்.

'அடியாய்! எமது குலத்தாருக்கு மணமக்கள் தேடுவதில், நீ பல ஊர்கள் சுற்றியிருப்பாய். நீ எங்காயினும், மந்திரம் தெரிந்த ஒரு சக்தி உடைய பெரியவனைக் கண்டதுண்டோ? என்றினள்.'

'நமது இளங்கோவிற்கு, அரசர் ஆணைப்படி நான் மணமகள் தேடிச்சென்ற போழ்து, தாங்கள் கூறுவது போன்ற ஒருவரை நான் கண்டதுண்டு' என்று, தனது சாமிகள் தன்னை இவ்வாறாக விடை கூறிக் காப்பாற்றிக் கொள்ள அருளியதை நினைத்து அவர்கட்கு நன்றிகூர்ந்து மறுமொழி புகன்றான்.

'"இளங்கோ!" நீ கூறும் மந்திரவாதி, தனது ஆற்றலை எவ்வாறு விளக்கிக் காண்பித்தார்?' என்று அரசி பரபரப்புடன் மயிர் வினைஞனை வினவினாள்.

'அருள் மிக்கீர்! அது ஒரு பாடல்பெற்ற இடம். அவர் காதில் குண்டலம் அணிந்திருந்தார். உட்கார்ந்த வண்ணமாய் மந்திரங்கள் செபித்துக்கொண்டிருந்தார். அதுபோது அவர் தொண்டர் ஒருவர் பிச்சைப் பாண்டத்தில், பிச்சை ஏற்றனர். மிகவும் புகழ் சிறந்தவராதலின் அவரைச்சுற்றிலும் பலர் சூழ்ந்திருந்தனர். அப்பொழுது அவர் "நான் தொடர்ச்சியாகச் செய்துவந்த யோகத்தின் பயனாய், சாமிகள் எனக்குச் செம்பை வெள்ளியாக்கவும் வெள்ளியைப் பொன்னாக்கவும் சக்தியை அளித்துள்ளனர்.' என்றார்.

'உடனே அங்கிருந்தவர்கள், "இந்த சக்தியைத் தாங்கள் காண்பிக்குமாறு அருள்புரியவேண்டும்" என்றனர்.

'இதற்கு அந்தப் பெரியவர் தன்வாயைத் திறந்து "கையிற்பொருளுள்ள மல்லீரும் என்னைச் சுற்றி உட்கார்ந்து கொள்ளுங்கள். பின்னர் என்கையில் உங்களிடம் உள்ள விலையுயர்ந்த நாணயம் எதுவோ அதனை நீங்கள் ஒவ்வொருவரும் ஒப்புவித்துவிடுங்கள்" என்று உறக்கக் கூவினார்.

'எனவே எல்லோரும் பெரியவர் கூறியதுபோல் அவரைச் சுற்றி உட்கார்ந்துகொண்டு தங்கடங்கள் கையிலிருந்த செம்பு, வெள்ளி, நாணயங்களை அவரிடம் கொடுத்துவிட்டார்கள். பின்னர் அவர் களிமண் பிசைந்து நாணயம் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு களிமண் உண்டையில் பொதிந்து உண்டைகளை எல்லாம் தன்முன் வரிசையாக அமைத்துவிட்டார்.

"இப்பொழுது நான் மிகுந்த சக்தி உடைய மந்திரங்களைச்செபிக்கப் போகின்றேன். மந்திர பலத்தால் தாழ்மை

யானலோகங்கள் எல்லாம் மாற்றேறும். நீங்களனைவரும் ஒருமொழிகூடத் தவறாமல், என்னுடன் சேர்ந்து கொண்டு ஜெபித்தல் வேண்டும். இவ்வாறு நீங்கள் தவறாமல் செபிப்பீர்களாயின், நான் பின்னர் களிமண் உண்டைகளை உடைத்து மாற்றுயர்ந்த நாணயங்களை உங்களுக்கு அளிப்பேன். செம்பு கொடுத்தவர் வெள்ளி எடுத்துக்கொள்ளலாம்; வெள்ளி கொடுத்தவர் பொன் எடுத்துக்கொள்ளலாம்.

"நீங்கள் செய்யவேண்டியது ஒரு சிறிதும் உளது. நான் மந்திரம் செபித்துக்கொண்டிருக்கும்போது, உங்களில் ஒருவரும் கருமுகம் கொண்ட ஒரு வெள்ளைக் குரங்கைப் பற்றி நினைத்தலே கூடாது. அவ்வாறு உங்களில் ஒருவர் மனதிலேனும், கருமுகம் கொண்ட வெள்ளைக் குரங்கின் உருவத்தின் சாயல் ஏற்பட்டாலும்கூட, என் வேலை குலைந்து போகும்—என் ஆத்ம சக்தி அழிவுறும்; நானும் இந்த இழிய நாணயங்களைத் தவிர, வேறு ஒரு நற்பயனும் பெறுதல் முடியாது." என்றார்.

"அதன் பின் என்னாயிற்று?" என்றான் ஆசி.

'பிறகென்ன! மந்திரங்கள் முறையாய் உச்சரிக்கப்பெற்றன. அங்கிருந்தவர்களும் முறை வைத்தார்கள். பெரியவர் களிமண் உருண்டைகளை உடைத்துப் பார்த்தார். அந்தோ! எல்லா நாணயங்களும் முன்னிருந்த வண்ணமே இருந்தன—செப்பு நாணயம் செம்பாகவே இருந்தது; வெள்ளி வெள்ளியாகவே இருந்தது. பெரியவருக்குச் சினம் பொங்கிற்று.

"நரலோகப் பிறவிகளே! உங்களில் யார், நான் நினைக்கக்கூடாது என்று ஆணையிட்ட நினைவை நினைத்தது?

நினைத்து என் சூக்கும சக்தியை விழலாக்கியது? அது யார்? ஒப்புக்கொள்ளுங்கள்!" என்று பெரியவர் சீறினார்.

உடனே, அவர்களுள் ஒருவர் மிகவும் அஞ்சியவராய் "சுவாமி! அது நானே. எவ்வளவோ முயன்றும், என் ஆற்றற் குறைவினால், கருமுக வெள்ளைக் குரங்கை நான் நினைக்கக் கூடாதென்றே நினைத்துக்கொண்டிருந்தேனாதலின் குரங்கை மறக்க முடியவில்லை" என்று கூறினார்.

'இதன் பிறகு மிக்க மனவருத்தத்துடன், பெரியவரின் தொண்டரும், எல்லா நாணயங்களையும் தன் குருவின் பிச்சைப் பாண்டத்தில் நிறைத்துக்கொண்டுவிட்டார். குரங்கை நினைத்த மனிதனிடமற்றவரை மற்றைய எல்லோரும் கல்லாலும், கழியாலும் அடித்துச் சபித்து வெருட்டிவிட்டகன்றனர்.' "உண்மையில் பெரிய மந்திரவாதி நீ உடனே, என் பந்தய ஒட்டகையாம் சிவாஜியிலேறிக் கொண்டு, அப்பெரியாரைக் கடிதில் சென்று கடிதில் அழைத்துவா; நமது நாதரின் உயிர் காப்பாற்றப்பட வேண்டும்" என்று அரசி கூறினாள்.

எனவே, மயிர்வினைஞன் ஓடோடி, அம்மந்திரவாதியை அழைத்துக்கொண்டு திரும்பினான்.

இதன் பின்னர், வாள் வீச்சாலும், சுருக்குக் கயிற்றாலும், கண்ணடித் தூளாலும் தனது கொடிய பகைமையையும் அழுக்காற்றினையும் நீக்கிக்கொள்ளும் செயல்பற்றி, கண்டவாங்கே உடல் நடுங்கி உள்ளுறை ஊனும் எலும்பும் உருகிக் குன்றும் அச்சத்தை விளைக்கும் இம்முதல் அரசி, அழகிய ஆடைகளை அணிந்துகொண்டு அரசர்முன் தோன்றிக் கூறினாள்.

"அரசே! தங்கள் உடல்நலத்தை மீண்டும் அளிக்க வல்ல ஒரு மந்திரவாதியைப்பற்றி நான் கேள்வியுற்றிருக்கிறேன்."

"ஆயின் அவரை வரவழை; எனக்கு அத்தகையாரின் உதவி வேண்டியதே" என்றார் அரசர்.

எனவே, பெரியார் அரசர்முன் நின்று அரசரைப் பார்த்துக் கூறினார்.

"ஐய! நான் தங்களின் விதியை நட்சத்திர அமைப்பால் கண்டறிந்திருக்கின்றேன். தாங்கள் உயிர்வாழ ஒரே வழி உளது. தங்களுடைய குடிகளில் ஒருவருடைய உயிர் தங்களது உடலிற் புகுந்துகொண்டு, குன்றும் நிலைமையில் உள்ள தங்கள் உயிர்க்குத் திறன் அளிக்க வேண்டும்."

"அந்தப் பாம்பின் மகனன்றி வேறு யார் உயிரை அளிப்பது?" என்று முதலரசி தனக்குள் மொழிந்துகொண்டு தன் முகத்தில் ஏற்பட்ட மகிழ் ஒளியை மறைக்கும் வண்ணம், தன் பொன்னாடையால் முகத்தை மூடிக்கொண்டாள்.

"என் படுக்கையைத் தூக்கிச் செல்லுங்கள். என்னை என் தர்பாருக்கு எடுத்துச் செல்லுங்கள். என் குடும்பம் முழுதையும் அழையுங்கள்" என்று அரசர் [illegible] தன் பத்தோடும் ஆணையிட்டார்.

குடும்பம் முழுவதும் ஆண், பெண், குழந்தைகள் எல்லோருமாக இருநூறு பேர்கட்குமேல் திரண்டனர்; அரசர் தன் படுக்கையைவிட்டெழுந்து, எல்லோரும் தன் முகத்தைப் பார்க்கும்படி சாய்ந்த வண்ணமாய் அமர்ந்துகொண்டார்; அரசரின் தாடி இருபிளவாக வகுக்கப்பெற்று, தலை மீது முடியப்பெற்றிருந்தது.

"என் மக்களே! நீங்கள் யாரேனும் உங்கள் உயிரைத் தத்தம் செய்யினல்லது நான் இறந்துபோவேன்" என்றார் அரசர்.

அவர் குரல் நோயாலும் உடல் மெலிவாலும் நலிவுற்றிருந்தமையால், அரசர் கூறியதை அவர் அமைச்சர்கள் உரக்கக் கூவினர்.

உடனே அங்கிருந்த கூட்டத்தில் "... தந்தையாரின் உயிரைவிட நம்முயிர் உயர்ந்ததா?" "நான் தருகின்றேன்", "நான் தருகின்றேன்" "நான் தருகின்றேன்" "எல்லோருமாக எங்கள் உயிர்கள் அத்தனையும் தருகின்றோம்" என்ற ஓர் ஆரவாரம் உண்டாயிற்று,

ஆனால், பொறாமை மிக்க இரண்டாம் அரசி, தான் இறுகத் தழுவி நின்றுகொண்டிருந்த தன் மகனை, தன் செந்தாமரை இதழ் போன்ற கைகளால் அரசன்முன் தள்ளி இது கூறினாள். "வில்லில் உயர்ந்த உயிர்ப் பலியாலன்றோ நமது சாமிகள் களிப்படைவார்கள்." கூறியதும் தன் தோழிகள்மீது பிணம்போல் சாய்ந்துவிட்டாள்.

இளங்கோ, அரசனை அணுகும் முன்பாக, மற்றொரு அரண்மனைப் பெண் தனது சிறிய மகனை, அரசர் முன் நிறுத்தி, "தந்தையே! ஆண்டையே! யாராய் இருப்பினும், அன்னைக்கு மகன் மகன்தான். இக்குழந்தைக்கு ஏழு வயதாகின்றது. தக்க வயது. தங்கள் மகன் தங்களுக்கு எத்தனை அருமையாக இருக்கின்றானோ, அத்தனை அருமையானவன் இவனும் எனக்கு. இப்பலியும் எளியதன்று. என் மகனை எடுத்துக்கொள்ளுங்கள்" என்றாள்.

எனவே, அரசர் மீண்டும் தன் அறைக்கு எடுத்துச் செல்லப் பெற்றார். அன்றிரவு ஒரு தனி அறையில் மந்திரவாதியும், முதல் அரசியும், மற்றும் பல அரண்மனைப் பணியாளரும் கூடினர். மந்திரவாதி, வித்தைகள், விளக்குகள் முதலியவற்றுடன் தன் வேலையைக் கடுமையாய்ச் செய்துவந்தார்.

அரண்மனை வேலைக்காரியின் குழந்தையின் உயிரை, மந்திரவாதி வாங்கிவிட்டார்.

பிறகு, இக்குழந்தையின் பிணத்தை ஒரு துண்டில் மூடி, அரண்மனைப் பெண்களின் விடுதியின் உள் முற்றத்தில் உள்ள ஓர் சிறு மீன் குளத்தில் எறிந்து விட்டனர். மந்திர வாதிக்கு அவனால் வேறு கெடுதி நிகழா வண்ணம் கைநிரம்பப் பொன் கொடுத்தனர்.

ஆனால், அரசரோ, மந்திரம் செய்த மூன்றாம் நாளே மரணமடைந்தார். மிகுந்த ஆடம்பரத்துடன் அரசன் பிணத்தை எரித்துவிட்டனர். ஆங்கில அரசாங்க சட்டத்திற்கு அஞ்சியே, பிணத்துடன் ஒரு மனைவியேனும், வைப்பேனும் கொளுத்தப்படவில்லை.

அன்றிரவு, தன் மகனைத் தத்தம் செய்த பணிப்பெண், தன் படுக்கையிலே பிணமாய்க் கிடந்தாள்.

பிள்ளைப் பலியளித்த செய்தியாவது, பிள்ளையின் தாய் கொலை செய்யப்பெற்ற செய்தியாவது வெளியோர் வரையில் வெளிவந்ததன்று. ஆனால், அரண்மனை வேலைக்காரர்கட்குள் பொறாமையும், சண்டை சச்சரவும் ஏற்பட்டதின் பயனாய் நடைபெற்ற நிகழ்ச்சிகள் முழுதும், அரசப் பிரதிநிதியின் அரண்மனைப் பிரதிநிதி அறியலானார்.

பிரதிநிதி, அரண்மனையில் உள்ளவர்களில் ஒருவரையேனும் விடாமல், எல்லோரையும் தன்முன் வரவழைத்துப் புலனறிந்தார்.

"முதலரசி இங்கு இனி தங்குதல் கூடாதன்றோ" என்று அவர்களிடம் மொழிந்தார்.

"முற்றிலும்; அதன் மேலும், கூடாது" என்றார் அரண்மனைப் பணியாளர்கள் அனைவரும்.

"ஆயின், உங்கள் அரசியல் சட்டப்படி முதல் அரசிக்கு யாது செய்தல் வேண்டும்; எனக்கு இதில் தலையிட யாதொரு உரிமையும் இல்லை" என்றார் பிரதிநிதி.

அரண்மனைப் பணியாளர்களும், "எங்கள் அரசியல் சட்டப்படியும், வழக்கப்படியும், மத நெறியின்படியும், முதல் அரசிக்கு வேண்டிய பொருள் அளித்து, அவளை எம் சமஸ்தானத்தைவிட்டு, அவள் தந்தை வீட்டிற்காயினும், எங்காயினும் அகற்றிவிடுதல் வேண்டும். எல்லோரும் அறிந்தால் அரச குடும்பத்திற்கு மானக்கேடு உண்டாகும். ஆதலின், தனி[illegible] அவளை நாம் அகற்றுதல் வேண்டும்" என்றார்கள்.

எனவே, முதல் அரசி, சினமிகுந்து, ஆற்றாளாய், அவ்வூரை விட்டு மறைந்துபோனாள். இளங்கோவை மிகவும் அன்போடு பாராட்டிவந்த இரண்டாம் அரசி, முதல் அரசியின் இடத்திலிருந்து ஆட்சி புரிந்துவந்தாள்.

பெரியவராகிய மந்திரவாதி சென்ற இடங் தெரியவில்லை—இவருக்குக் கிடைத்த பொருள் மூட்டையைச் சுமந்துகொண்டு இத்துணை கடிதில் எப்படித்தான் 'மறைந்

தனரோ! மூலை முடக்கெல்லாம் தேடிப் பார்த்தாய்விட்டது. சாமியாரைக் காணோம்!

ஆறும் அத்தியாயம்.

விதவை.

எண்ணிறந்த பெண்கள், குழந்தைப் பருவம் நீங்கா முன்னரேயே அமங்கலிகளாய் மீளாத் துன்பத்தை அடைகின்றனர். இதில் விளையும் துயரமும் தீமையும் கூறற்பாலதன்று. இதனைத் தணிக்க முடியாதா?; இதற்கோர் மருந்தில்லையா?; இக்கொடுமைக்கும் கூடா ஒழுக்கத்திற்கும் முடிவு கிடையாதா?; என்கின்றனர். சமூகச் சீர்திருத்தம் மிகவும் கடினமான வேலை. ஏனெனில், பொதுமக்கள் சமூக சீர்திருத்த உழைப்பினர்களை இகழ்ந்துரைத்துத் தூற்றுதல் புரிவார்கள்.—செல்வி: பார்வதி சந்திரசேகர அய்யர்; ஸ்ரீதர்மம்; ஆகஸ்டு **1927.** பக்கம் **149.**

சூரிய வெப்பத்தால், நிலம் தாரை தாரையாய்ப் பிளந்து காணப்படும் ஓர் வங்காள நாட்டுப் பாலைவனம்; சாம்பல் நிறமுள்ள, வழுவழுப்பான களிமண்ணாற் சுவர்கள் நிறுத்தி, கீற்றுக்களால் மேற்கூரை வேய்ந்த ஓர் சிறு குடிசில்; இக்குடிசில் வாயிற்கண் வெண்கலை பூண்ட ஓர் பெண் உட்கார்ந்துகொண்டிருந்தாள்; அப்பால், தாசுகளால் பகுதி மறைந்த, களிமண் குடிசைகளாலாய சிற்றூர்.

சீதை என்னும் இப்பெண் ஆண்டுக் கணக்கின்படி இருபத்தொன்பது வயதை அடைந்தவள். பார்ப்பன மதப்படி பண்டைய பழக்க வழக்கங்களின் ஓர் அறிகுறி; நெஞ்சத்தின்படி ஒரு குழந்தை.

தசைப்பற்று இல்லாமல் உலர்ந்த பிணங்களிற் காணப்படுவதுபோன்ற இவளிரு கன்னங்களும் வாயிலுள்ள பல்வரிசையை எடுத்துக் காண்பித்தன. ஒட்டத் தரித்தக் கூந்தல், கருமையை இழந்து சாம்பற்பூத்திருந்தது.

இவள் வீடாகிய இச்சிறு குடிசிலில் ஒரே ஒரு அறை; பசுமாட்டு மலத்தால் மெழுகிய களிமண் தரையும் சுவர்களும்; சாளரமில்லை; வெறும் கயிற்றுக் கட்டில் ஒன்று; குடிநீர்ப் பானை ஒன்று; கதவின் புறமிருந்த ஒரு மூலையினின்றும் தொங்கவிட்ட கரிப்பானை ஒன்று; திருவைக்கல் ஒன்று; இவைகள்தாம் எல்லாம்.

இவள் வாணாளோ சென்ற காலத்தோடு தொலைந்தது. முன்னூற்று அறுபத்தியைந்து நாட்களும் இருபத்து நான்கு மணி நேரமும் சென்ற காலத்தை நினைந்து நினைந்து' நிகழ்ந்தவற்றை மனதிற்குக் கொண்டுவந்து கொண்டுவந்து வீணே பார்த்துவருகின்றாள். இன்று விடியற் காலையிலேயே என்றும்போல் எழுந்து, நீராடி சாமிகளுக்கெல்லாம் பூசனை புரிந்து வாயிற்படி காப்பாளாயினாள். வேறு என்ன வேலை இருக்கின்றது? பகற்கனவு காணவேண்டியதுதான்.

தான் ஒரு சிறிய குழந்தையாய் இருந்த காலம்; தாய் வீடு செல்வமிக்கது. தாயின் செல்வக் குழந்தை; பிறகு ஒரு தம்பி பிறந்தான்; எல்லோருக்கும் இந்த ஆண் குழந்தை ஓர் கண்ணாயிற்று. பின்னர் தாய்வீட்டில் இருந்த பெண்

கள் எல்லாம் ஒரு இந்துச் சிறுமிக்கு உற்ற பயிற்சியை அளிக்கத் தலைப்பட்டனர்—சாதி முறை கூறினார்கள்; இதனை மீறுதல் மீளா நரகத்திற்குட்படுத்தும் என்றார்கள். சாமிகளை வணங்கவும், வணக்க முறையும் பயிற்றுவித்தனர்; இதனைத் தவிப்பவர்கட்குத் தீமை விளைக்கச் சாமிகள் காத்துக்கொண்டிருக்கின்றனவென்றனர்: உற்ற சாமியாகிய கொழுநனுக்குரிய கடமைகளைக் கூறினார்கள்; கணவனுக்கு நாடோறும் ஆற்றவேண்டிய தொண்டுகளைப்பற்றியும் விளக்கினார்கள்.

இடைக்கிடை நாள் போக்க, சிறு விளையாட்டுகள்; உலகத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் மற்றைய பெண்களின் வாய்பார்த்திருத்தல். அவர்கள் பிள்ளைப் பெறுதலின் துன்பத்தைப்பற்றிக் கூறுவார்கள்; சில வேளைகளில் உடலிற் புண்கொண்டு, துளைத்துச் செல்லும் நோய்களின் தன்மையைப்பற்றியும் விளக்கிப் போவார்கள்.

இத்தகைய நோய்களின் கொடுமையை செவியேற்று சீதை, இதனை மறவாமல் நினைத்துக்கொண்டேயிருந்து இரவில் கொடிய கனவுகளைக் கண்டு நடுநடுங்கி, வீறிட்டெழுவது வழக்கமாயிற்று. எப்படியாவது இப்பெரு நோயினின்றும் தப்புவதே நலமென்று எண்ணி சாமிகளிடம் தன்னை இத்தகைய நோய்களினின்றும் காப்பாற்றும்படியும் வேண்டிக்கொள்வாள்.

"எல்லோருக்கும், பொன்னும் பொருளும் புதல்வர்களும் அருளும் என் சாமிகளே! நீங்கள் எனக்களித்தது ஒரே ஒன்று—உங்களை வணங்கும் என் உடல். ஆதலின், இந்த உடம்பைப் பாதுகாத்து, அதற்கோர், நோயும் ஏற்படாவண்ணம் நான் உங்களை வணங்குகிறேன்." என்பாள்.

சிலைகளின் முன் பொம்மைகள், பழவகைகள், பூவகைகள் முதலியவற்றைப் படைத்துச் சில வேளைகளில் தனக்கு ஒரு கணவன் வேண்டுமென்றும் தொழுதிருப்பாள். இதன் படியே, சில மாதங்கட்குள், பெரும் பொருட் சிலவில் ஒரு மணமகனும் வாய்த்தான். இவளுக்கு வயது பன்னிரண்டு ஆனதும் கடிதில் இவளை இவள் வீட்டார் கொழுநன் வீடு சேர்ப்பித்தனர்; இவளிடம் பருவத்திற்குரிய குறிகளும் காணப்பெற்றன.

கொழுநன் வீடு சேர்ந்த அற்றை நாளை இன்றும் சீதை மறக்கவில்லை. அவள் அன்பின் தாயும் ஏனைய பெண்டிரும், அதன் உண்மையை ஒருவாராக அறிவித்தனர்; ஆனால் அவை சீதையின் குழந்தை மனதிற்கு மட்டுப்படவில்லை. பீமன் என்னும் அவள் கொழுநன் எத்துணை பெரியமனிதன்! எத்துணை கொழுத்த மனிதன்! தந்தையினும் மிகவும் வயதில் முதிர்ந்தவன்; தந்தையினும் உருவத்திற் பெரி—இ—இ—இ—யவன்! சீதை தனது பன்னிரண்டாம் வயதில் சின்னஞ் சிறியவள் அன்றோ!

சீதைக்கு முன் நான்கு மனைவிகள் இக்குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டு, குழந்தைகளை யளிக்காமல் சென்றனர். இப்பொழுது சீதையேனும் ஒரு ஆண் மகவை அளிக்காமற் போவாளோ!.

'நான் இடை விடாமல் சாமிகளை வணங்குவேன்' என்று சீதை தாழ்மையாகவும் நடுக்கத்துடனும் மொழிந்து தொழுவாளாயினள்.

ஒரு ஆண்டு கழிந்தது; குழந்தைப் பருவமும் நீங்கிற்று; ஆனால் உடற்கட்டு உறப்படாமல், நாளுக்கு நாள் உறிஞ்சுதல் பெற்று வன்மை குறைந்தது.

"நீ இளைத்துப் போகின்றாய்; அழகாயில்லை; உற்சாகத்
துடன் இல்லை; நீ மலடியாயிருக்கின்றாய்; ஆகவே, எங்கள்
ஆண்டான் உன்னை நீக்கிவிட்டு வேறு மனைவியைக் கொள்
ளுதலும் கூடும்" என்று கணவன் குடும்பத்துப் பெண்டிர்
கள் கூறுவாராயினர். ஆனால், விதியின் பயனாய் பீமனின்
மனது வேறு வழியிற் சென்றது. எனவே, அவன் சீதையை
நோக்கி "நாளை நான் உன்னைக் காளி கோயிலுக்கு அனுப்
பப் போகின்றேன். ஆங்கு, பூசாரிகள் குறிப்பிட்ட இடத்
தில் இருந்து காளியினிடம் குழந்தை வரம் பெறுமாறு நாள்
முழுதும் நீ தொழுதல் வேண்டும். இரவிலும் அவ்விடத்
திற்றானே பூசாரிகள் குறிப்பிட்ட இடத்தில் துயிலுதல்
வேண்டும். பின்னர் என் வீடு திரும்பி வந்து என்னை நா
சத்திலிருந்தும் காப்பாற்றும்பொருட்டு ஒரு மகனைப் பெறு
தல் வேண்டும்" என்று கூறினான். எனவே, பணிப்பெண்
கள், ஒரு பணக்காரன் மனைவியை அழைத்துச் செல்லும்
முறைப்படி, சீதையை திரை போட்டு மூடிய ஒரு மாட்டு
வண்டியில் இட்டுக் காளி கோயில் சேர்ப்பித்தனர். சீதை
பகல் முழுதும் காளி கோயிலில் தொழுதுவந்தாள். இரவில்
பூசாரிகள் ஆணைப்படி ஒரு இருட்டறையில் அச்சத்துடன்
படுத்திருந்தாள்.

"இரவில் ஏதேனும் உன் கனவில் தென்பட்டதோ"
என்றான் பூசாரி.

"கனவில் ஒன்றுமில்லை; ஆனால் ஓர் உருவம் வந்த
துண்டு. அவ்வுருவத்தின் குரல் தங்களது போன்றே இருந்
தது."

"காளிக்கு வந்தனம் செய்; அது ஒரு சாமிதான்.
இனி உன் கணவன் வீடு திரும்பிச் செல். குழந்தை பிறந்த

உடன் உன் கொழுநனிடம் சொல்லி எனக்குப் போதிய பொருள் அளிக்கும்படிக்குச் செய்”

பின்னர் ஒரு குழந்தையும் பிறந்தது. அந்தோ! அது ஒரு பெண் மகவு!

பல ஆண்டுகள் கழிந்தன; இரண்டாம் முறையும் காளி கோயிற் சென்றிருந்தாள். ஆனால் சீதைக்கு வேறு குழந்தை பிறக்கவில்லை. வாணாள் முழுதும் தொடர்ச்சியான துன்பமாயிருந்தது. சாமிகள் இட்ட வழி; அமைதியாக சகித்துச் செல்லல் வேண்டுமன்றோ?

“இத்துணை துன்பங்கட்கிடையில் என் வேண்டுகோள் பலித்தது. என்னைக் குறை நோய் பீடிக்கவில்லை. சாமிகள் என் உடலைத் தூய்மையாகவே வைத்திருக்கின்றார்கள்.” என்று சீதை தனக்குள்ளாகவே சொல்லிக்கொண்டு அமைதி பெறுவாள்.

பீமன், ஒரு சிறுவனை வளர்ப்பு மகனாக ஏற்றுக்கொண்டான்—கொள்ளி வைக்க வேண்டுமே!

காளியளித்த சீதையின் சிறு மகவுக்கு வழக்கப்படி பயிற்சி அளிக்கப்பெற்றது; மணங்கூறலும் பெற்றது; பதினொரு வயதில் கணவனிடமும் அனுப்பப் பெற்றது. பின்னர், சீதையின் பூர்வசென்மப் பாவங்களின் பயனாய் பீமன் இறந்து போனான். தான் செய்த பாவங்கள் எவைதாம் என்று சீதை நினைத்து நினைத்துப் பார்த்தாள்; ஒன்றும் புலப்படவில்லை. ஆனால், பூர்வ சென்மங்களில் இழைத்த பாவங்கள் ஆதலின் சீதைக்கு இவை இச்சென்மத்தில் எவ்வாறு விளங்கும்?

மனைவிபாவியாய் இல்லாமலிருந்தால் கொழுநன் இறப்பது எங்ஙனம்? இதுபற்றித்தானே ஒரு விதவை அபசகுனமென்றும் அடிமையென்றும் இந்துமத முறைப்படி இறக்கும் வரைக்கும் ஒதுக்கி வைக்கப்படுகின்றாள். இந்துமத முறைப்படி சீதையின் பொற்றாலி பறிக்கப்பெற்றது. கூந்தல் களையப்பெற்றது. அணிகலன்களும் பட்டாடைகளும் கவரப்பெற்றன. பின்னர் இவளுக்கு ஒரு வெள்ளைப் புடவையை அளித்து, பிச்சை எடுத்துப் பிழைக்குமாறு இவளை பீமன் குடும்பத்தார் தெருவில் வெருட்டிவிட்டனர். பீமன் பொருளுக்கு உரியவர்களும் இதனை ஆமோதித்தனர் என்றாலும், சாமிகள் மனமிரங்கினார்கள். இவள் மருமகனாய சாரதி என்பவன் இந்த மண்குடிசிலை சீதைக்களித்து ஊருக்கப்பால் வசித்துவரும்படிக்கு உதவிபுரிந்தான்.* சாரதி சிற்சில வேளைகளில் சீதைக்குக் காசளித்தும் வருவான். அவளும் இதைக்கொண்டுதான் ஒருவேளை உணவைச் சாப்பிட்டு வந்தாள். சீதை உணவுப் பொருள் வாங்கக் கடைத்தெரு, செல்லுங்காலையில், திருநாட்களில்லாக் காலங்களில், தன் மகளை எட்டிப்பார்த்துச் செல்லவும் சாரதி கருணை புரிந்தான்.

மற்ற வேளைகளில், ஒரு விதவைக்குத் தன் இறந்துபோன கணவனின் ஆத்ம விடுதலைக்கு வணங்கும் ஒரு வேலையைத் தவிர வேறு என்ன வேலைதான் உளது? இடைவிடாது தொழுது, பட்டினி கிடந்து, உடல் நலன் துறந்து, கணவனின் மோட்சப்பதவியை மென்மேலும் உயர்த்தும் ஒரு கடனிலும் வேறு நற்கடனும் உளதோ?

சீதையின் வாணாட்களின் ஒவ்வொரு எண்ணமும் ஒவ்வொரு நிகழ்ச்சியும், ஒவ்வொரு செயலும் எவ்வாறு

டண்டு தொட்டு நடைபெறும் பழக்கவழக்கங்களால் கட்டுப் பட்டு வருகின்றதோ, அதுபோலவே, சூரிய ஒளியில் மின்னுகின்ற தூசிடையில் துயிலும் அச்சிற்றூரும் கட்டுப்பட்டு வந்தது. உழுவித்துண்பார், உழுதுண்பார், சருமார், தீண்டப்படாதார் பண்டைய வழக்கங்கள் என்னும் அற்றிடை அகப்பட்டு நாளுக்கு நாள் அழிந்து போகும் நாளை நாடிச் சென்றுகொண்டே வந்தனர்.

இச்சிற்றூருக்கு அறுபது மைல்கட்கப்பால் உள்ள இந்தியாவின் பெருநகராய கல்கத்தாவில், அரசியல் கிளர்ச்சி நடைபெற்று வந்தது. இது 1921-ம் ஆண்டு; இலையுதிர் காலம். இந்தியாவின் மகாத்மாவாகிய காந்தியின் எண்ணத்திற்கு மாறுபட்டுச் செல்பவர்களைக் கல்கத்தாவில் அச்சுறுத்தியும், உயிர் வாங்கியும் வந்தனர். மகாத்மா அஹிம்சா தர்மத்தைப் போதித்து வந்தாலும் கூட, இப்போதனையின் பயனால் பகைமையும் கொலையுமே நடைபெற்று வந்தன.

நகர மக்கள் அரசியல் ஒளியைப் பரப்பிவந்து கொண்டிருக்கையில், ஏனைய சிற்றூர்கள் எல்லாம் என்றும்போல் பழைய வழக்கங்களிலிருந்து மாறுபடாமல் தூங்கிக்கொண்டிருந்தன.

இவ்வாறிருக்கையில், ஒருநாள், உச்சிப்பொழுதில் சீதை வசித்துவந்த சிற்றூரை நாடி இருவர் வந்தனர். இவர்கள் தலையில் "காந்திக்" குல்லாய்களை அணிந்திருந்தனர். கொடிய மொழிகளைக் கூறினர். எனவே இவர்களை அவ்வூரார் ஊர்த் தலைவரிடம் கொண்டு சேர்ப்பித்தனர்.

அவர்கள் கூறிய மொழிகளைக் கேட்டு ஊர்த் தலைவன் "நீங்கள் ஏன் பிதற்றுகின்றீர்கள்? நாங்கள் சப்பாத்திப்

பழங்களைச் சாப்பிட்டு வயிறு வளர்த்து வருவதா? நீங்கள், ஆங்கிலேயர்கள் வணிகம் செய்ய வந்து இடம் கிடைத்ததும் வாள்களைக் காண்பித்ததாகக் கூறுகின்றீர்கள். ஆதலின் அவர்கள் துணிகளை எரித்து அவர்களையும் துரத்தி வரும்படிக்கு மொழிகின்றீர்கள். ஆனால் அவர்களால் நன்மையும் இருக்கின்றது. நீங்களும் நாளைக்கு அதிகாரம் கிடைத்தவுடன் கொள்ளையடிக்கமாட்டீர்களா?" என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டான்.

எனவே, இவ்விருவர்களும் சினங்கொண்டு திரும்பிச் சென்றார்கள். செல்லும் வழியில் சீதையின் சிறு குடிசில் தென்பட்டது. அக்குடிசிலின் வாயிற்கண் ஒரு வெள்ளைப் புடவையினையும் கண்டுவிட்டார்கள்.

'நீ யார்?'

'நான் ஒரு விதவை.'

'நீ எங்கு செல்கின்றாய்?'

'கடைக்கு; உணவுப் பொருள் வாங்க.'

'இந்த வெள்ளைப்புடவை மான்செஸ்டர் துணி அன்றோ?'

'மான்செஸ்டர் என்றால் என்ன? இது என் புடவை. ஒன்றே உளது.'

'இதனை நாங்கள் எரித்துவிட வேண்டும்; கொடுத்துவிடு' என்று புடவையைப்பற்றி ஈர்த்தனர்.

'ஏன் நான் அதை நீக்க வேண்டும்?' என்று சீதை பெருமூச்சு விட்டாள்.

'மகாத்மா காந்தியின் கட்டளை'

'மகாத்மா காந்தி யார்?'

'மகாத்மா காந்தியின் வாக்குப் பலிக்கும். நீ உன் புடவையைக் கொடுக்காவிட்டால் அவர்சாபம் உன்னைச் சுடும்'

என் செய்வாள் சீதை? இவர்களிடம் தன் ஒரு புடவையை அளித்துவிட்டு, நிர்வாணமாய் இருப்பதா?

'நீ தரமாட்டாய் போலும்! ஆயின் பிடி சாபம்! உனக்குக் குட்ட நோய் பிடிக்கட்டும். அது உன் நெற்றியில் ஆரம்பித்து உன் தசையைத் தின்றுகொண்டு உன் உறுப்புக்களைக் குறைக்கட்டும். இதோ! இதோ! உன் விரல்கள் நுனியில் குட்ட நோயின் அறிகுறிகள் காணப்படுகின்றன.' என்றனர்.

இதைச் செவியுற்றதும், சீதை அலறித்துடித்து, தன் குடிசைக்குள் ஓரேபாச்சலாய்ப் பாய்ந்து, தன் புடவையை அவிழ்த்து வெளியில் எறிந்துவிட்டு 'சாபத்தை நீக்க வேண்டும்; நீக்கவேண்டும்' என்றாள்.

ஆனால் அவர்கள் சிரித்துக்கொண்டே போய்விட்டனர்.

மூன்று நாட்கள் சென்றன. 'சீதையைக் காணவில்லையே! என்றார்கள் ஊரார்.

'என் தாயைக் காணவில்லையே' என்றாள் சாரதியின் மனைவி.

ஆனால் குடிசைத் தாளிடப்பெற்றிருந்தது.

'மாமி! உள்ளே இருக்கின்றீர்களா;' என்றான் சாரதி.

விடை இல்லை.

'மாமி! உடம்பிற்கென்?'

விடை இல்லை.

'மாமி! உண்மையாகவே நீங்கள் பிணியுற்றிருக்கின்றீர்கள்' என்றுகூறி, சாரதி கதவைத் திறந்துகொண்டு உட்புகுந்தான்.

வீட்டின் மூலையில் உடல் விடவிடவென்று நடுங்க, எலும்பும் தோலுமாய் தன் விரல்களின் நுனியைப் பார்த்த வண்ணமாய் மாமி உட்கார்ந்திருந்தாள். அவளது வறண்டு போன நாவிலிருந்து 'சாமிகளே! சாமிகளே! எனக்கு ஏன் இந்தக் கதி! நான் குறைநோய் கொண்டேனே?' என்ற மொழிகள் உதித்தன.

'இதென்ன கொடுமை;' என்றான் மருமகன்.

'மகாத்மா காந்தியின் தொண்டர்களாம். என் புடவையைக் கேட்டார்கள். நான் தரவில்லை. என்னைச் சபித்தனர். இதோ என் விரல்கள் நுனியில்-இதுகுட்ட நோயன்றோ? என் வேண்டுதல் எல்லாம் பாழ்பட்டனவே' சாமிகள் எல்லாம் அழிந்தா போனார்கள்?' என்றாள் மாமி.

மருமகன் தன் முகத்தைத் திருப்பிக்கொண்டு, தன் மேலுடையை மாமிக்கு அளித்து, 'இதனை உடுத்திக்கொள்ளுங்கள். இதோ சென்று நான் தங்கள் மகளை அனுப்புகின்றேன் அவள் தங்களைத் தேற்றுவாள்' என்று கூறித் தன்மனை நோக்கிச் சென்றனன்.

ஒரு மணி நேரம் சென்று, தன் மனைவியுடனும் வேறு சில பெண்களுடனும், உடை, உணவு, பொருள் முதலியவற்றை எடுத்துக்கொண்டு சாரதி திரும்பிவந்தான்.

மாமி, தன் மேலுடையால் கழுத்திற் சுருக்கிட்டுப் பிணமாய்த் தொங்கிக் கொண்டிருந்தாள்!

ஏழாம் அத்தியாயம்.

தேவதாசி.

இந்தியாவில், தமிழ்நாட்டுக் கோயில்களின் திருப்பணிக்காக வாழ்க்கைப்பட்ட நடன மங்கையர்களைத் தேவதாசிகள் என்று வழங்குவர். பொது வழக்கில், இவர்களை விபசாரிகள் என்றே கூறுவார்கள். புகழ் வாய்ந்த ஒவ்வொரு கோயிலிலும், இத்தகைய தேவமாதர்களின் படை ஒன்றிருக்கக் காணலாம்.--ஜே. ஜீ. பிரேசர்; பொற்கிளை; அடோனிசு; ஆட்டிசு; ஆசிர்சு; முதற்பகுதி, **61**-ம் பக்கம்.

மாகாண கவர்னர் சுற்றுப் பிரயாணம் செய்து வந்தனர். இங்கிலாந்திலிருந்து வந்த இவர் மனைவியும் உடன் போந்திருந்தனள். இவள் நோக்கப்படி, புகழ் சிறந்த பழைய கோயில் ஒன்றைக் கவர்னர் பார்த்து வருவதாக ஒப்புக் கொண்டார்.

எனவே; கோயிற் குருக்கண்மார் கவர்னரையும் அவர் மனைவியையும் மிகுந்த மரியாதையுடன் இந்துக்கள் அல்லாதார் ஒரு கோயிற்குள் எவ்வளவு தூரம் நுழையலாமோ, அவ்வளவு தூரம் அழைத்துச் சென்றனர். மரியாதைக்கு மரியாதையாக கவர்னர் மனைவியும் கோயிற் கட்டிடத்தின் அருமை பெருமையினையும், சிற்பவினைத் திறமையினையும்

புகழ்ந்துரைத்தாள். இக்கோயில் மாரியம்மன் கோயில்; அங்கிருந்த சிலையின் மார்பில் புளித்துப்போன வெண்ணெயின் நாற்றமும், வைசூரியின் நினைவும் கவர்னர் மனைவியின் நெஞ்சத்தில் ஓர் வகை வெறுப்பை இழைத்தது. மேலும் அன்று கோடை வெப்பம்; தொண்ணூறு புள்ளிகள் வரையில் இருந்தது.

இந்த இடத்தினின்றும் விடுதலைபெற விரும்பிய இவள், தனது வெறுப்பைப் பிறர்க்கு அறிவித்துக் கொள்ளாமல், இசைக் கருவிகள் ஒலிக்கும் மண்டபம் நோக்கி மெல்லத் திரும்புவாளானாள். கற்றூண்கள் செறிந்த அம்மண்டபத்தில் கவர்ச்சியை விளைக்கத்தக்க ஓர் காட்சியைக் கண்டாள். தேவதாசிகள் கூட்டம் ஒன்று! அழகு வாய்ந்த முகத்தினர், அழகு வாய்ந்த உடையினர், அழகு வாய்ந்த தோற்றத்தினர்; இசைக் கருவிகளின் இன்னிசைக் கொப்ப நடித்துக் கொண்டிருந்தனர்.

பிறகு இக்கூட்டத்தினின்றும், ஒரு தேவலோகப் பெண் போன்ற ஓர் உருவம் பிரிந்து வந்தது. ஓர் குழந்தை பொற்சரிகை யிழைகளால் பூவேலை செய்யப்பெற்ற, நீண்ட தோர் வெள்ளைத்தானை அணிந்திருந்தாள். சிறந்த அணி கலன்கள் இவள் கழுத்தையும், கைகளையும், கணுக்கால்களையும் சுமத்தித் திகழ்ந்தன. கொண்டையில் மலரணிந்திருந் தாள். இவள் உடல் மிகவும் நலிந்திருந்தது; பட்டைப் போன்ற கன்னங்கள் 'சிவப்புப் "பவுடருக்" கடியிலும் வெளுத்திருந்தன. முகத்தில் கோடு விழுந்து காணப்பெற்றது. இதனால் இவள் பிறவியின் உயர்வும், அறிவின் முதிர்ச்சியும் பன்மடங்கு பெருக்கித் தோன்றின. இவள்

கவர்னரின் மனைவியின் முன்பாக ஒரு மலர்மாலையை ஏந்தி நின்றனள். இருவர் கண்களும் ஒருமித்தன.

இமைப்பொழுது இருவரும் ஒருவரை ஒருவர் உற்று நோக்கிய வண்ணமாய் இருந்தார்கள்—கவர்னர் மனைவி இக்குழந்தையின் உள்ளத்தையே, துருவி ஆராய்ந்தாள்; குழந்தையும் இதற்குடன்பட்டாற் போன்று நின்றது. பின்னர் இந்த நிலைமை மாறியது; விழித்தெழுந்தவள் போன்ற இச்சிறுமி, பெருமூச்செறிந்து தன்னிடம் திரும்பிச் சேர்ந்தாள். பூசாரிகள் தங்கள் விருந்தினர்களை (கவர்னர்; அவர் மனைவி) வேறு காட்சிகளைக் காண்பிப்பான் அழைத்துச் சென்றுவிட்டார்கள்.

லட்சுமி என்னும் இச்சிறுமி, தனது நான்காம் ஆண்டிலிருந்து சிற்சில நிகழ்ச்சிகளை நினைவிற்குக் கொண்டுவரும் ஆற்றலைப் பெற்றிருந்தாள். இப்பொழுது இவளுக்கு ஏழு வயதாயிற்று. தன் தாயின் நினைவு தன் உள்ளத்தில் ஊன்றி நிலைத்திருக்கின்றது. தாயின் அழகிய முகம் ஒரு உயர்தரப் பார்ப்பனியின் முகம். ஓர் நாள் அவள் அழுத அழுகை இன்னும் மறக்க முடியவில்லை.

'என் கண்ணே! உன் வாழ்க்கை என்னாகும்! ஏழைக் கைம்பெண்ணாகிய நான் உனக்கு வரதட்சணை அளிப்பது எங்ஙனம்? வரதட்சணை அளிக்காமல் உன்னை மணம்புரிந்து கொடுப்பது எப்படி? மணம் புரியா வாழ்க்கையிலும் இறப்பது மேலன்றோ? இதைவிட வெட்கக் கேடும் உளதோ?'

பிறகு தன் தாய்க்குக் காசநோய் கண்டதும், அவள் இருமிக்கொண்டிருந்ததும், அந்நோய்நாளுக்குநாள் மிகைப்பட்டதும் லட்சுமிக்கு நினைவுண்டாயிற்று. சிற்சில வேளை

களில் மருத்துவச்சி வந்து மருந்தளித்ததும், அந்த வெள்ளை மருத்துவச்சி ஓர் நாள் தன்னை அவள் வீட்டிற் கெடுத்துச் சென்றதும் கனவுபோல் தோன்றியது.

பின்னர் ஓர் நாள்—ஒரு பெரிய அகலமான வெளிச்ச மான அறை; ஆங்குப் பல பேர் மண்டியிட்ட வண்ணமாய் முணுமுணுத்துக் கொண்டிருந்தனர். வெள்ளை மருத்துவச்சியைக் கேட்டனள்; வெள்ளை மருத்துவச்சியும் 'கர்த்தாவே! எங்கள் இருளைப் போக்கி, மற்றைய இடையூறுகளினின்றும் விலக்கி, தங்கள் ஒரு மகனும் இயேசு கிறிஸ்துவின் ஆணைப்படி எமக்குக் கருணை புரியுங்கள் என்பதின் பொருள்தான் இது' எனக் கூறினாள்.

இந்த நினைவும் மறத்தற்பாலதன்று; ஆங்கிலத்தில் மொழிந்த உரைகள் பலவும் இவள் மூளையில் நன்கு பதிந்திருந்தன.

சின்னாட்கள் கழிந்தன; அருமைத் தாயின் நிலைமை கொடியதாயிற்று. வெள்ளை மருத்துவச்சியும் வரவில்லை. ஆனால், அதுபோது உயர்ந்த உடைகளையும் அணிகலன்களையும் தரித்த ஓர் அழகிய இந்தியப் பெண் வந்திருந்தாள். இவள் ஒரு தேவதாசி. பல அற்புதக் கதைகள் செப்பினாள். அவள் லட்சுமியின் தாயைப் பார்த்து,

'உன் பயணம் நெருங்கி விட்டது. நீ லட்சுமியை எனக்களித்து விடு. நான் அவளைக் கடவுள்களுக்கு மணம் புரிந்து கொடுத்து விடுகின்றேன், அவளுக்கு அழகிய உடைகளையும், நகைகளையும் நல்கி, பிறர் புகழுக்கும் பெருமைக்கும் இலக்காக்குகின்றேன். அவள் என்றும் சுமங்கலியாய் இருப்பாள். உன்போல், கைம்பெண்ணாகும் இழி

நிலை அவளுக்கு ஏற்படாது. அவளை மொட்டைச்சி என்று பிறர் அபசகுனமென வெறுக்கார்கள்.

'நல்ல சிவப்பு; கூரிய மூக்கு; அழகும் களையும் உள்ள முகம்; என் கையில் விட்டுவிடு; இங்குள்ள பணக்காரப் பார்ப்பனர்களெல்லாம் இவள் அழகில் அழியும்படிக்குச் செய்து விடுகின்றேன். இவள் பாதங்களில் பொன்னும் புகழும் இறைத்து அஞ்சலி செய்து நிற்கும்படிக்குச் செய்கின்றேன். இவளை எனக்களித்து விடு?' என்றாள்.

லட்சுமி என்னமோ என்று அஞ்சி, தன் தாயின் கால்களை இறுகத் தழுவிக் கொண்டாள். 'அம்மா என்னை அனுப்பி விடாதே!' என்றழுதாள். இவளுடன் கூட அன்னையும் கதறினாள். என்றாலும், அன்னை, 'நான் உட்படுகின்றேன். நான் இனி ஒன்றியாய்ப் போக வேண்டியவள் தானே. என் மனது இடந்தரவில்லை; என்றாலும் சாமிகட்குப் பொட்டுக் கட்டுவது நன்மையாய் இருக்கலாம் அன்றோ' என்று மொழிந்தாள்.

'ஆயின், இதோ! இதனை வைத்துக் கொள்ளுங்கள். இது எனது சுப தட்சிணையாகும். இதைவிட கடவுளுக்குப் புரியும் நற்கடன் வேறுளதோ?' என்று கூறி தாசி லட்சுமியின் அன்னை கையில் சில பொற்காசுகளை அளித்தாள்.

பிறகு லட்சுமி அழுதுகொண்டே ஆடியாடி அசைந்தசைந்து செல்லும் ஓர் மாட்டுவண்டியில் தேவதாசியின் மடிமீதே கண்ணயர்ந்துபோனாள்.

ஒரு கோயில்; ஆங்கு அழகிற் சிறந்த பல சிறுமிகள் சாமிகட்கு மணம் புரியும் பொருட்டு வளர்க்கப் பெற்று வந்தனர். இவர்கள் எல்லாம் அழகிலும் தோற்றத்திலும்

உயர்வாகவே பொறுக்கி எடுக்கப் பெற்றிருந்தனர். நாள் தவறாமல், இவர்களின் உடம்புகளின் மீது எண்ணெய் தடவித் தேய்த்து இவர்களின் உறுப்புக்களை வளையும் படிக்குச் செய்து, இவர்கட்கு நாட்டியமும், படிப்பும், பாடல்களும் பயிற்றி வந்தார்கள். ஆதலாற்றான், பழமை வாய்ந்த இந்தியாவில், இப்பொழுது ஏனைய வகுப்பார்களைப் பார்க்கிலும், தேவதாசிகளே அதிகப் பயிற்சி அடைந்திருக்கின்றார்கள். என்றாலும், சாமிகளின்மீது பாடப்பெற்ற பல பாடல்களில் லட்சுமி வெறுப்படைந்தாள்.

'நான் இனி பாடம் செய்யமாட்டேன்'

'மாட்டாயோ?'

உடனே தேவதாசி லட்சுமியைக் கசை கொண்டு அடித்தாள்.

ஏனைய குழந்தைகள் எப்படியாவது கற்று வந்தனர். தாரா—பத்து வயதுசென்றவள்; [illegible] பணக்காரத் தந்தையை உடையவள்; கடவு[illegible]குப் [illegible] கட்டிக் கொள்ளுமாறு சொடையளி[illegible] பெற்றவள். இ[illegible] நற்பயனாய் தன் தந்தைக்கு [illegible]மகன் ஏற்படும் என்பதாகக் கருதப் பெற்றவ[illegible] இவளும் பாடம் கற்று வந்தாள்.

67843

இவள் ஓர் நாள் லட்[illegible]ப் பார்த்து 'உனக்கு ஒன்றும் தெரியவில்லை. எனக்[illegible] எல்லாம் தெரியும் நான் உன்னைப் போல் ஒரு கோழை அ[illegible]னை அவர்கள் வற்புறுத்த முடியாது; வேண்டுமென்[illegible]' என்றாள்.

அன்றிரவு உள்ளறையிலிருந்து ஒரு குழந்தையின் வீறிட்ட ஓசைகேட்டது. முதலில் அக்குரல் கோபக் குர

ளாய் இருந்தது; பின்னர் அது துன்பம் பொறுக்க ஆற்றாது கத்துவதாகக் காணப்பெற்றது.

'அவள் தான் எசலி. இவ்வளவு இளமையில் அவளை அவன் தனக்குட்படுத்துவது மிகவும் அறிவற்ற செயல் வளர்ச்சியிலேயே அழிப்பதற்குரியவள் அல்லள் அவள்.' என்று லட்சுமியின் வளர்ப்புத்தாய் கூறினாள்.

ஆனால் தாரை, 'எசலி மிகவும் அழகியவள்; உன்னைவிட இளையவளாய் இருந்தால் என்ன? இளமை அவளைக் காப்பாற்ற வில்லை. குருக்கள் காத்திருக்க மறுக்கின்றார்; நான் முன்னம் கூறியதை நினைத்துக்கொள்; நான் எவ்விதம் என்னைக் காப்பாற்றிக் கொள்ளுகிறேன் என்றுபார்' என்று ஓசைபடாமல் லட்சுமியின் காதில் மொழிந்தாள்.

தாரை மறுநாள் அங்கு ஓர் கிணற்றில் விழுந்து பிணமாய்க் கிடந்தாள்.

லட்சுமிக்கு நாட்டியப் பயிற்சி அளிக்கப்பெற்று வந்தது. நாட்டியத்திற்குரிய அபிநயங்களின் பொருளை ஒருவாறு லட்சுமி மனதில் உணர்ந்து வெறுப்படைந்து வந்தாள். முதனாள் கோயிலில் அரங்கேற்றும்போது அந்த முழக்கத்தினிடை, முன்னர் வெள்ளை மருத்துவச்சியுடன் சென்று கண்ட காட்சி இவள் கண்முன் நின்றது.

'எமது இருளைப் போக்குங்கள்—கர்த்தாவே உம்மைப் பணிந்து முறையிடு புரிகின்றோம். தங்கள் ஒரே மகனை இயேசு கிறிஸ்துவின் ஆணை—எம்மைக் காப்பாற்றுங்கள்' என்று முணுமுணுத்தாள். இவள் தன் நினைவு அற்றிருப்பதை அறிந்த மற்றைய தேவதாசிகள் இவளை இரத்தம் பெருகக் கிள்ளினார்கள்.

இப்பொழுது இவளுக்கு எழு வயதாயிற்று. இதற்குள் பொட்டுக் கட்டியாயிற்று. எசலியின் கதியை இதுவரையில் அடையவில்லை என்றாலும் ஓர்நாள் அடைவது சத்தியம். இதனை நினைந்து இவள் நெஞ்சழிந்தாள்.

பின்னர், இந்தக் கோயிலிலேயே, கோயிலின் கர்ப்பக்கிரகத்தின் முன்னிலையிலேயே, இவள் மனதில் ஓர் தோற்றம் உதித்தது. ஓர் கூப்பாடு பிறந்தது.

எனவே, 'இவள் என்னைக் கூப்பிட்டுவிட்டாள் நான் போக வேண்டும். காலம் தாழ்த்துதல் கூடாது' என்று கோயிலை விட்டு வெளியே ஓடுவாளாயினாள்.

ஆனால் இவளைப் பல தேவதாசிகளும் பார்ப்பனப் பூசாரிகளும் பின் தொடர்ந்து சென்றனர். ஓடோடிப் பார்த்தாள். பார்ப்பனர்கள் நெருங்கி விட்டனர். இனி அவர்கள் கைகளிற் சிக்கி, தாசித் தொழிலிலேயே ஈடுபட வேண்டியதுதான். என் செய்வாள்!

இதுபோது, ஒரு வெள்ளை மாது இவள்முன் தோன்றி, இவளைக்கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

பார்ப்பனர்கள், இவள் எங்கள் கோயில் தாசி, இவளை விட்டு விடு என்றார்கள்.

'இவள் இயேசுவின் பேரால், எங்கள் உதவியைத் தேடிவிட்டாள். நான் இவளை உங்கள்பால் சேர்க்க மறுக்கின்றேன்' என்றாள் வெள்ளைமாது.

பின்னர், இவள் கிறிஸ்துவ மதத்தில் சேர்க்கப்பட்டு விட்டாள். கிறிஸ்துவக் கோயிலில் இவள் நடமாடவும், பாடவும், குருக்கட்கு காமப் பெண்டிராகவும் வேண்டிய கட்டுப்பாடு கிடையாது.

வெள்ளைமாது, நாளிதுவரையில், கோயில்களுக்கு அடிமைப்பட்ட திக்கற்றச் சிறுமிகளை மீட்கும் தொழிலிலேயே இருந்து வருகின்றாள்.

எட்டாம் அத்தியாயம்.

நாயினும் கடையார்.

உங்கள் இல்லங்களில் நீங்கள் பசுக்களை வளர்க்கலாம்; நாய்களை வளர்க்கலாம்; நீங்கள் பசுக்களின் சிறுநீர்பருகலாம்; அவற்றின் மலம் அருந்தி உங்கள் தீவினைகளைப் போக்கிக் கொள்ளலாம்; ஆனால்-, ஒரு ஆதிதிராவிடரின் (தீண்டப்படாதார்) அண்மையிற்கூட நீங்கள் செல்லுதல் கூடாது- ராவ்பகதூர் எம். சி. ராஜா. ஒடுக்கப்பெற்ற இந்துக்கள் அக்கிலி அக்சுக்கூடம், சென்னைப்பட்டினம். **1925.** பக்கம் **6.**

இத்தகைய பொறுப்புள்ள ஓர் உத்தியோகத்தை உமக்கு அளிக்குமுன்னர், நான் கூறும் சிற்சிலவற்றை மனதில் உறுதியாகப் பதித்துக்கொண்டு, அவைகட்கேற்ப நீர்நடந்துக்கொள்ளுதல் வேண்டும்.

'இந்தியாவில் உமது உத்தியோகத் தொடர்பில் ஏற்படக் கூடிய நிகழ்ச்சிகளின்கண் நீர், (அ) உமது உள்ளக் கிளர்ச்சிக்கு இடங் கொடுத்தல் கூடாது; (ஆ) ஒரு இந்தியர் மீது எக்காலத்தும் சினங் கொள்ளுதல் கூடாது. ஒரு மனிதன் உள்ளக் கிளர்ச்சிக்கு இடந்தருவானாயின், அவன்

இறுதியில் அதன் பொருட்டே சிதைவுற்று அலங்கோலப் படுகிறான். இது போலவே, ஒரு இந்தியர்மீது வெகுண்டெழுந்தவனும், தனது பெருமையை இழந்துக் கெடுகின்றான். இவ்விரண்டு பழக்கங்களும், ஒருவனின் பயனைக் குலைக்கின்றன. —மேலும்—மறந்துவிட்டேன்— நீர் இதனையும் மனதில் பதித்துக் கொள்ளுதல் வேண்டும்; ஒரு இந்துவினுடைய நன்முயற்சிக்கு முரணாயிருப்பவை பெரும்பாலும், இந்துமத தர்மங்களில் வேரூன்றி நிற்பவைகளாம். இத்தகைய இந்துமத தர்மங்களில் நாம் தலையிடாதவாறு கட்டளையிடப் பெற்றுள்ளோம்; நாமும் அவ்வாறே உறுதி கூறியுள்ளோம்.'

'வந்தனம். அங்ஙனமே ஆகட்டும். ஐயா!' என்றார் வயதிற் சிறிய ஹாப்கூட் என்பார். என்றாலும், இவர் மனது அமைதி கொள்ளவில்லை. எனவே, ஏளனமாய்; 'மகாராணியின் உறுதிவாக்கு இத்தகைய காப்பளித்தமை நன்மையாய் முடிந்தது. ஈரமற்ற கிழப்பிணமே! பகுத்தறிவும், பரவிய நோக்கமும், மிகுத்துணர் கருணையுமில்லா இரான்மீன்களா நாம்? எல்லாம் கடவுளின் செயல், என்று தம்மை உயர்வாகக் கருதும் இத்தகையார் தம் பழும் மனப்போக்குப் பற்றியன்றோ, கூறிய உணர்ச்சியை உடைய இந்தியர்கள் கையறுநிலை அடைகிறார்கள்.' என்று தனக்குள்ளாகவே மொழியலானார்.

இந்நிலைமையிலேயே இவர் (ஹாப்கூட்) ஒரு பெரும் நகர பரிபாலன சபையின் கீழுள்ள மருத்துவசாலையில் பன்னிரண்டு இந்து உதவி மருத்துவர்களின் தலைமை மருத்துவராக வேலை செய்யத் துவங்கினார்.

தன் கீழ் உள்ளவர்களுக்கு இவர் பயிற்றுவிக்கும் முன்னரேயே அவர்களிடம் முதன் முதலாக கீணாடு, மேனாட்டிற்குப் போதிக்கும் படிப்பினைகளும் பல உளவென்றறிவிக்கப்பெற்றார்.

'அவற்றில் பொறுமையே தலை சிறந்ததாய் இருக்க வேண்டும்' என்றும் ஓர் நாள் அமைதியை இழந்து விடையிறுத்தார்.

இவ்வாறிருக்க, 'ஓர் நாட்காலை கீழ்தர மருத்துவர்கள் தங்கள் கடமையைச் சீர்பெறச் செய்யாமல், இரண்டு நோயாளிகளை மரணத்திற்குள்ளாக்கினார்கள். 'எவ்வாற்றாலும், இவ்விருவரும் இறக்க வேண்டியவர் தாம். மேலும் அவர்கள் மிகவும் இழிந்த சாதியினர்' என்றார் எம். டி. பயிற்சியில் தேர்ச்சிபெற்ற மருத்துவசாலையின் பொறுப்பாளியான சாட்டர்ஜி என்னும் உயர்தர மருத்துவர்.

ஹாப்கூட் திகைத்துப் போய் 'நீர் இறுதியாகக் கூறியது இதற்குப்பொருந்துமா?' என்றார்.

எனவே, பார்ப்பனர், 'சாதிக்கொள்கைகள் எல்லாச் செயல்களுக்கும் பொருத்தந்தாம். சாதியே எமது ஆத்மீக ஜிப்ரால்டர். (ஜிப்ரால்டர் என்பது மேனாட்டையும் கீனாட்டையும் தொகுத்து வைக்கும் ஓர் சிறிய ஜலசந்தியாம்). மேனாடு இதைப்பற்றி அறியும் காலம் நேரிடலாம். எமது பண்டைக் காலத்துக் கீனாடு, மேனாட்டிற்குப் பயிற்ற வேண்டியவைகள் பல உள' என்றார்.

ஹாப்கூட் தனது மேசையின் மீதிருந்த மணியை அடித்து 'என் குதிரையைக் கொண்டுவா' என்று ஒரு பணியாளை ஏவினார்.

இவர் தலை நொந்தது; மனம் நொந்தது; அறிவும் மயங்கிற்று; புதிதாக ஒப்புக்கொண்ட வேலை இவரை ஒரு புதிய மிதியடி போல் கடித்தது; ஒன்றுமே பிடிக்கவில்லை. மேலும் கோடைக்கால வெப்ப மிகுதி. நாடி நரம்புகள் நிலை மாறிக் கிடந்தன. உடலிற் பதுங்கி இருந்த முறைச்சுரம் உடலின் சுறுசுறுப்பைக் குறைத்தது. எனவே, அமைதி குறைந்து, இவர் எளிதிற் கோபமடையும் நிலைமையில் இருந்தார்; மேலும் இவர் கூற்றுக்கு எதிர்க் கூற்றுக்களே தவிர இவரைப் போற்றுவார் யார்?

'வார்த்தையாடுவதில் பயனில்லை. நான் குதிரை சவாரி செய்வேன்—சவாரியில் நீண்ட சவாரியில், கடின சவாரியில், என் உடலில், வியர்ப்பாறு பெருகும் படிக்குச்செய்வேன். அப்பொழுது தான் என் கோபம் தணியும். ஒரு வேளை, இதன் பிறகு, இவர்கள் கூறும் மொழிகளை நான் சீர் தூக்கிப் பார்க்கும் நிலைமையை அடைதலும் கூடும்'.

மாலைக்குள், இவரது உள்ளக் கிடக்கை முற்றிலும் மாறுபட்டு விட்டது. சாதி பேதத்தின் தன்மைகளைப் பற்றி ஒரு விரிந்த கட்டுரையை எழுதலாமா என்று கூட நினைக்கலாயினார்.

'எந்தச் செய்தியையும், சட்டெனக் கேட்ட பொழுது, அச்செய்தி நம் பார்வையை மழுக்கி விடுகின்றது. மேலும், இப்பொழுதுள்ளவர்கள் சிலர், செய்திகளைத் திரித்துக் கூறி நம்மை மயக்கத்திலாழ்த்தி விடுகின்றனர். என்றாலும், பண்டைய காலத்தில், முன்னோர்கள் வகுத்த முறைகளின் அழகு என்றும் குன்றுவதில்லை—ஆராய்ச்சியிலன்றோ, இறும்பூது எய்துமாறு அவைகள் நம்மைக் கவர்ந்து ஈர்க்கின்றன! யார் தாம் இது உயர்வு, இது தாழ்வு என்று கற்

பிப்பதற்கு உரியார்? கிறிஸ்து கிருஷ்ணனைப்பார்க்கிலும் தெளிவாகக் கூறிப்போனார் என்று கூறுவதற்குச் சான்று தான் என்னை?' என்று நினைந்தார்.

எதிரே, இவர் சென்று கொண்டிருந்த சாலையின் ஊடே, குவிந்த தென்னை மரச்சோலையின் வழியாய் ஓர் சதுப்பு நிலம் தோன்றிற்று. இந்நிலத்திலிருந்து ஏர்க்கருவிகளைச் சுமந்து கொண்டு பல கருநிறமுள்ள மனிதர் எதிர் நோக்கி வந்து கொண்டிருந்தனர். இவர்கட்கு முன்பாக, செவ்வையாக உடுத்திய ஓர் இந்தியரும் சென்று கொண்டிருந்தார். இவ்[illegible]ற்பகல் வெய்யலில் உலாவிக் களைத்தவர் போன்று கா[illegible]பெற்றார். இவர் தன் முன்னே, காலடி ஓசை கேட்பதை அறிந்து, ஓர் வகையாக, மோட்டார் வண்டியில் உள்ள [illegible]பூதலைப் போன்று கூச்சலிட்டார்.

கூச்சலிட்டதுதான்; இயந்திரத் துப்பாக்கி ஒன்று தம்மீது செலுத்தப் பெற்றது போன்று, முன் வந்து கொண்டிருந்த அனைவரும், ஓடிப் பாதையை விட்டு அப்படிக்கப்படியே சதுப்பு நிலத்தில் குதித்து ஒரு வரிசையாக ஒதுங்கி நின்று விட்டனர்; பின்னர் இவர்களும் ஒவ்வொருவராக ஏதோ உரக்கக் கூவினார்கள்.

ஹாப்கூட் இந்தக் காட்சியை பார்த்ததும் தன் குதிரையை நிறுத்தி வியப்பெய்தி மரம்போல் அசையாமல் நின்று விட்டார்.

இந்தியரும் தனது பாட்டையில் இப்பொழுது ஒருவரும் இல்லாதமை கண்டு மெல்லத் தன் ஊர் நோக்கி நடந்து சென்றார்.

சேற்றில் அழுந்தி உடல் முழுதும் சேறு தோய்ந்த வண்ணமாய் கருநிற முள்ள இந்தியர்களும் மீண்டும் கரையேறி இந்தப் பொதுச்சாலையில் நடக்க லாயினர்.

எனவே, ஹாப்கூட் ஒருவரைப் பார்த்து 'இதன் கருத்து என்ன? அவனைக் கண்டதும் நீங்கள் ஏன் ஓடினீர்கள்? வாயில் உங்கள் கைகளைக் குவித்துக்கொண்டு கூச்சலிட்டீர்களே, அதன் பொருள் யாது?' என்று வினவினார்.

மிகவும் பணிவுடன், அக்கிழவன் கூறினான். 'துரைக்குத் தெரியவில்லையா? நாங்கள் எல்லோரும் தீண்டப்படாதார்கள் அல்லவோ? பார்ப்பனர்களைக்கண்[illegible]ம் ஓடிப்போகாவிட்டால், பார்ப்பனர்களின் சாமிகள் எம்மைச் சபித்து விடுவார்கள் அன்றோ?

'நாங்கள் கூச்சலிட்டது ''அசுத்தம்! அசுத்தம்!'' என்பதே. இவ்வாறுகவே நாங்கள் கூறும்படியாகப் பார்ப்பனர்கள் கட்டளை யிட்டிருக்கின்றனர். அப்பொழுதுதான், நாங்கள் இருக்கும் இடத்தை அவர்கள் அறிதல் கூடும். மேலும், வெறும் வாயால் கூச்சலிடுவதால், எங்கள் வாய்களினின்றும் அசுத்தம் பரவும்; ஆதலாற்றான், வாய்களைக் கைகளால் மூடிக்கொண்டு கத்துவது'

'நீங்கள் எங்கு செல்லுகின்றீர்கள்?'

'அதோ அந்தத்தோப்பில் நடுவிலுள்ள எங்கள் வீடுகளை நோக்கி'

'ஆயின் நானும் உடன் வருகின்றேன்' என்றார் ஹாப்கூட்.

அன்று மாலை நெடுநேரம் வரையில், அவர்கள் சேரியிலுள்ள சாலையிலிருந்துகொண்டு, ஹாப்கூட் அவர்கள் வாய்ப்

பிறப்பைக் கேட்டு வந்தார். இவரைச்சுற்றிலும் ஆடவர்களும் குழந்தைகளும் உட்கார்ந்து கொண்டனர். சாலையினூடிருந்த சிற்றுத் துளைகளின் வழியாய் பெண்கள் இதனைப் பார்த்து வந்தார்கள். மூட்டுப் பூச்சிகள் கடித்தன; கொசுக்கள் மொய்த்தன; கொசுக்களை அடித்தடித்து ஹாப்கூட் தன் வெள்ளைச் சட்டை முழுவதையும் இரத்தமாக்கிக் கொண்டார். சுற்றிலும் கெட்ட நாற்றம் வீசிற்று. ஆனால், ஹாப்கூட் இவைகளையெல்லாம் பொருட்படுத்தாமல், தீண்டப்படாதவர்களைக் கேள்விகள் மேற் கேள்விகள் கேட்ட வண்ணமாய் இருந்தார்.

ஹாப்கூ[illegible]ந்த நிலைமையை ஒருவாறு அறிந்திருந்தார்; என்றாலும் [illegible]முகமாக அறிந்து கொள்ளுவதில் ஒரு வகைச் சுவை உள்ளது அன்றோ?

'நீங்கள் அழு[illegible] தோய்ந்திருக்கிறீர்கள்—மிருகங்களைப் போல். நீங்கள் ஏன் குளிக்கப்படாது?'

'துரையே, குளிப்பதற்கு எங்கட்குக் கிணறு ஏது?'

'பக்கத்து ஊர்களில் உள்ள கிணறுகளில் இருந்து நீர் கொண்டுவருதல் கூடுமன்றோ?'

'அவைகள் எல்லாம் சாதி மக்களின் கிணறுகள். நாங்கள் அந்த கிணறுகளின் நீரைத் தொட்டாலும் தீட்டுப்படும். உடனே எங்கள் உடம்புகளும் புண்ணாகும். நாங்கள் முன் செய்த தீவினைகளின் பயனாய், என்றும் ஈடேறாத இழிதல மக்களாய் பிறந்துள்ளோமே.'

'ஆயின் நீங்கள் உங்கட்காகக் கிணறு தோண்டிக் கொள்ளுங்களேன்?'

'முடியாது; எங்கட்குரிமையான நிலம் ஏது; நிலம் இருந்தாலன்றோ கிணறு தோண்டிக் கொள்ள முடியும்.'

'பின்னர், எப்படித்தான் நீங்கள் குடி நீர் கொள்ளுகின்றீர்கள்?'

'குண்டு; குழி; எங்காயினும் ஒரு பள்ளத்தில் நீர் தேங்கியிருக்கக் கண்டால் அங்கு; சில வேலைகளில் அரை மைல் தூரத்திலுள்ள 'ரயில்வே ஸ்டேஷன்' சென்று ரயில்வண்டி வரும் வேளை வரைக் காத்திருந்து, எம் பெண்டிர்கள் 'இஞ்சின்' ஓட்டிகளின் கருணைபற்றி நீர் கொண்டு வருதலும் உண்டு. இஞ்சின் ஓட்டுபவர்கள், தங்கள் இஞ்சினுக்கு தண்ணீர் நிரப்பிக் கொள்ளும் பொழுது எங்கள் பெண்டிர்களும் தங்கடங்கள் குடங்களில் தண்ணீ[illegible]ள்ளவும் மனமிரங்குவார்கள்.'

'இவ்வளவு அழுக்குப் பிடித்த உங்கள் குழந்தைகள் பள்ளிக்கூடம் செல்லுவதெப்படி?'

'துரையே! தோய்த்துக் குளித்துத் தூய்மையாய் இருப்பினும், எமது குழந்தைகள் பள்ளிகட்கு செல்லுதல் கூடாது. அரசாங்கத்தார் பொதுப் பள்ளிக்கூடங்களை நிறுவி உள்ளார்களென்று நாமறிவோம். இருந்தாலும் அந்தப் பள்ளிக்கூடங்கள் உயர் சாதி மக்களின் மேற்பார்வையில் இருப்பதால், அவர்கள் எப்படியாவது அரசாங்கத்தார் கோரிக்கையை அழித்து, எமது மக்களை அக்கூடங்களின் அருகாமையிலும் செல்லவொட்டாது தடுத்துவிடுகின்றனர்.'

'உங்கள் அன்றாடக் கூலி என்ன?'

'இரண்டணா.'

'ஆனால் ரயில்வேக்காரர்கள் நாலணாத் தருகின்றார்களே; அவர்கட்குத் தொழிலாளர்கள் எப்போதும் வேண்டியிருக்கின்றதே.'

'ஓ! மனிதர்களே! நீங்கள் மனிதர்கள் அன்றோ? கொடிய சாதிபேத வழக்கத்தைக் கொண்ட ஒரு மதத்தில் மனிதத் தன்மையை இழந்த உங்களை நான் மனிதர்கள் என்றழைத்து, உங்கள் மனதில் மனிதத் தன்மையை மீண்டும் எழுப்புகின்றேன். உங்கள் ஆண்மை எங்கே? உங்கள் வீரம் எங்கே? நீங்கள் என்ன புழுக்களா? ஒரு கிறிஸ்துவப் பாதிரி இங்கு வந்ததாகக் கூறுகின்றீர்களே! நீங்கள் ஏன் அனைவரும் திரளாக அக்கிறிஸ்துவப் பாதிரியிடம் சென்று இந்த மிருகத் தன்மையான மதத்தை விட்டும் நீங்கிக் கொள்ளக் கூடாது? ஏன் கூடாது?'

ஆனால்; தீண்டப்படாதவர்கள் தங்கள் தலைகளை அசைத்தனர்.

'கூடும்; ஆனால் நாங்கள் அஞ்சுகின்றோம். ஏனெனில், கிறிஸ்துவப் பாதிரி வந்த நாளே, எங்கள் பார்ப்பார ஆண்டை, புதுக்கடவுளைத் தழுவிக்கொள்ளுபவர்கட்குப் பல்வகைகளில் துன்பம் நேரிடும் என்று சொல்லி அனுப்பித்திருக்கின்றார். எமக்கு வேலை கிடைக்காது. நோய்களும், பீடைகளும் பற்றும்;சாபம் எய்தும். எங்கள் ஆண்டை தன் வாக்கைக் காப்பாற்றுவது உறுதியே.'

சிறுவன், 'நீங்கள்தான் புதுக் கடவுளோ?' என்று ஹாப்கூட் என்பவரைப் பார்த்து வியப்புடன் வினவினான்.

'நான் டாக்டர் துரை. அந்தபுதியக்கடவுள்; என் கடவுள் ஓரேகடவுள்; அருட்கடவுள்; கருணைக் கடவுள்; கொடுமைக் கடவுளல்ல; இரக்கமற்ற கடவுள் அல்ல' என்றார் ஹாப்கூட். சிறுவன் 'தெரிந்தது தெரிந்தது; கண்டு கொண்டேன். நான் உணர்கின்றேன்' என்றான்.

மறுநாள் ஹாப்கூட், சாட்டர்ஜியை நோக்கி, இந்தியாவில் தீண்டப்படாதாரின் எண் என்ன? என்றார்.

'எண்ணிக்கை சரிவரத் தெரியவில்லை. என்றாலும் ஆறு கோடி மக்கட்குக் குறைவில்லை எங்கள் நெடுநாளைக் கொள்கையின் அடிப்படையான மக்களாம் இவர்கள்' என்றார் சாட்டர்ஜி.

பிறகு ஒரு மாதம் வரையிலும் ஹாப்கூட் தன் தொழிலில் இடை விடாது முயற்சித்து வந்தார். மாத இறுதிக்கண், அன்று பதினெட்டுமணி வேளைப் போழ்தும் வேலைசெய்து களைத்துக் கண்ணயர்ந்தார்.

மறுநாட்காலையில், ஓய்வற்ற குறைபினால் மனோநிலை தடுமாற்றமடைந்தவராய், ஹாப்கூட் வெளிப்புறத்தில் குழுமியிருந்த தன் கீழ்தா உத்தியோகஸ்தர்களைப் பார்க்கும் முன்னர் தன் அறையின் சாளரத்தின் முன்பாக தன் மனதை நிலைபெற அமைத்துக் கொள்ளுவான் வேண்டி சிறிது தயங்கி நின்றார்.

அது போழ்து, தனக்கும் அறுபது அடி தூரத்திற்கு அப்பால் வெறுந்தரையில் ஒரு உருவம் கிடந்தது.

'அது என்ன? ஒரு குழந்தையின் உருவம் போன்று தோன்றுகின்றதே!' என்று ஹாப்கூட் தன் கீழ்தா உத்தியோகஸ்தர்களை அழைத்துக் கூறினார்.

'ஆமாம்; ஒரு குழந்தைதான்' என்று ஒருவர் உற்சாகத்துடன் விடையிறுத்தார்.

'அது அங்ஙனமே கிடக்கின்றதை நீங்கள் எல்லோரும் அறிவீர்களன்றோ? நீங்கள் பரீட்சை செய்து பார்த்தீர்களா?'

'தெரியும் தெரியும்; பரீட்சை செய்தோம்; அதற்குக் காய்ச்சல் அடிக்கின்றது; கொடிய சுரம்.'

'அப்படியா! அவனை நீங்கள் சூரியனின் வெப்பத்தில் கிடந்து துடிக்கும்படி விட்டு விட்டீர் போலும். உங்களில் ஒருவரும் அவனுக்கு ஒருவித சிகிச்சையும் அளிக்க விரும்ப இல்லையா? அவனை பக்கத்தில் உள்ள அந்தக் கழிநீரிலேயே தள்ளி ஆழ்த்தி விடப்படாதா' என்றார் ஹாப்கூட்.

தன் கீழ்க[illegible] மருத்துவர்கள்மீது கோபித்துப்பார்த்தார்; ஆனால் அவர்கள் வாய்திறந்தவர்களன்று. பிறகு ஒரு ஆங்கில வைத்திய கல்லூரியில் பயின்ற மருத்துவர், ஹாப் கூட்டைப் பார்த்து,

'அவன், இவ்வூர்க்கருகாமையில் உள்ள, ஓர் சிற்றூரில் உள்ள கீழ்சாதிப் பையன். அவனுக்கு நமது சாலையில் இடமில்லை' என்றார்.

'இடமில்லை? ஆனால் அவன் உயர்சாதிக் குழந்தையாய் இருப்பின், அவனை நீங்கள் அங்ஙனமே விட்டுவிடுவீர்களா? அவன் ஒரு பார்ப்பனனாய் இருந்தால் இவ்வாறு செய்வீர்களா? மனமிருந்தால் எப்பொழுதும், எங்காயினும் இடமிருக்கும் என்று நீங்கள் என்றுதான் அறியப்போகின்றீர்கள்? நீங்கள்' என்று முடிக்கும் முன்பாகவே ஹாப்கூட் ஓடோடிச்சென்று அக்குழந்தையைப் பார்த்தார்.

அக்குழந்தை ஒரு சிறுவன்! பன்னிரண்டு வயதுடையவனாதல் வேண்டும்; இடுப்பில் ஆடையில்லை; கரிய நிறம்; சடைப்பிடித்த தலை. 'குழந்தாய்! குழந்தாய்! எழுந்திரு' என்று விளித்தார் ஹாப் கூட்.

சுரநோய்க் கொடுமையில் நலிந்த அக்குழந்தையின் விழிகள் அயர்ந்தன வாய்திறந்தது வன்று எனினும், மெல்ல, அக்குழந்தை கண் திறந்தது.

'என் துரையே! உம்மிடம் உங்கள் குருக்களைப் பார்த்த செய்தியைப் பற்றித் தெரிவிக்குமாறு நான் நெடுவழி கடந்து வந்தேன். இப்பொழுது நாங்கள் கிறிஸ்துவர்கள் ஆனோம். உங்கள் கடவுள்தான் எமது கடவுளும். இதுபற்றி எங்கள் சேரிப் பார்ப்பனர் எம்மைத் துறத்தி விட்டார். எங்கள் குடிசைகளை எரித்துச் சாம்பராக்கி விட்டார். நான் இனி ஒருநல்ல இடத்திற்குப்பயணமாகப் போகின்றேன். என் புறத்திலேயே இருங்கள். என் கண்கள் இருள்கின்றன' என்றான்.

குழந்தையின் தலையும் ஹாப்கூட் கரத்தில் சாய்ந்து விட்டது.

ஹாப்கூட், அக்குழந்தையை எடுத்துக்கொண்டு, மருத்துவ சாலை நோக்கிப் பித்தம் பிடித்தவர்போல் உளறிக் கொண்டே சென்றார்.

'கோழைகளே! பாழும் போக்கிலிகளே! நீங்கள் தான் "டாக்டர்" களோ? இன்னும் ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்கூட, நீங்கள் 'டாக்டர்கள்' ஆவது கிடையாது. டாக்டரின் தன்மைக்கும் உங்கட்கும் எத்தனை தூரம் உள்ளது? இந்தப்பையன் தீண்டப்படாதவன் என்றன்றோ மொழிகின்றீர்கள்! உங்களில் ஒருவரேனும் அவன் சிறிய ரோமத்தைத்தொடக் கூடிய தன்மையை அடைந்தவர்கூட இல்லை. என் முகத்தில் விழிக்காதீர்கள்! என்னை விட்டகலுங்கள்!' என்று ஹாப்கூட் தன் கீழ் வேலைபார்த்துவரும் பார்ப்பன மருத்துவர்களைப் பார்த்துச் சினந்தார்.

ஆனால் ஒருவருமே, இவரை அணுகவில்லை. நீண்டப்படாத பையனின் சுமையை யாரே நீக்குபவர்? இக்குழந்தையின், உடலை, ஹாப்கூட் ஒரு கட்டிலிற் படுக்க வைத்து, அதன் புறமே அயர்ந்து விட்டார்.

குழந்தைக்கு கொடிய முறைக் காய்ச்சல். மறு பதினைந்து நாட்கட்குள்ளாக, குழந்தையை ஹாப்கூட் நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டார். அன்று இவர் மேலதிகாரியான சர்ஜன் ஜெனரல் இவரை அழைத்தனுப்பினர்.

" ஹாப்கூட், உம்மைக் குற்றம் சுமத்தி, உம்மிடம் வேலை பார்க்கும் உத்தியோகத்தர்கள் எல்லாம் ஓர் மனு அனுப்பித்துள்ளனர். நீர் கண்டவாறு அவர்களை வசை கூறி, அவர்களைப் புண்படுத்தியிருக்கின்றீராம். அவர்களைக் கீழ்தர மக்கள் என்று விளித்தீராம்."

ஹாப்கூட் நடந்தவற்றை எடுத்துரைத்தார்.

"இது தானா?"

"ஆம்! இவ்வளவுதான்"

"என்றாலும் உமதுசெயல் கண்டிக்கத்தக்கது. நீர் சுர நோயின் கொடுமையில் பிதற்றிவிட்டீர் போலும்! இதுவே உமது சாக்காகும். இனி இவ்வாறு புரிதல் கூடாது; ஆயின் நீர் வேலையை விட்டு நீங்கும்படி நேரிடும். மேலும் உமக்கு இரண்டு செய்திகளைக் கூறுகின்றேன். எப்பொழுதும் நடைமுறையில் அவைகட்கேற்ப ஒழுகி, நீர் உமது வாணாளைக் கடத்திவிட வேண்டும்."

"அவைகளாவன; (அ) உத்தியோக முறையில் உம் உள்ளக் கிளர்ச்சிக்கு இடந்தருதல் கூடாது; (ஆ) இந்தியர்கள்மீது கோபம் கொள்ளுதல் கூடாது. இவ்விரண்டு பழக்கங்களும் உமது நற்பயனைக் குலைப்பனவாம்."

"மேலும்; ஹாப்கூட்! நமது அரசாங்கம் பரவிய கொள்கையுடன் அரசாட்சி புரிவதைப்பற்றி நீர் சிறிதும் உணரவில்லை போலும்!" என்றார் சர்ஜன் ஜனரல்.

ஹாப்கூட், தன் அதிகாரி கூறியவற்றில் ஏதேனும் புதை பொருள் உளதோ என்று சிந்தித்தார்!

ஒன்பதாம் அத்தியாயம்.

பார்ப்பார் அகம்.

இந்தியா ஓர் ஞான பூமியென்பதை நாம் அனைவரும் ஒரு சிறிது பூரிப்புடனும், அகமகிழ்ச்சியுடனும் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால், நம் நாட்டுப் பெண்களை நாம் நடத்தி வருகின்ற முறையில் இந்தியா ஓர் ஞானபூமி அல்ல என்றுதான் நான் கூறுவேன்; நம்பவும்-கிருஷ்ண மூர்த்தி, ஸ்ரீ தர்மம், ஜனவரி **1925**, பக்கம் **37**.

இந்துக்களின் இந்தியாவின் வாணாள் என்னும் நூலில் இது ஒரு ஏடு; நம் வாணாட்களில் ஓர் இரவுத் துயிலை ஒத்தது; என்றும் நடை பெறுவது.

சென்னை மாகாணத்தில் ஒரு செல்வம் மிகுந்த பார்ப்பனன் வீடு. அவ்வீட்டில் பெண்கள் கூடும் ஒரு பொது அறையில் இங்கு கூறப்படும் நிகழ்ச்சிகள் எல்லாம் நடைபெற்றன. இவ்வறை மேன்மாடத்திலிருந்தது. மூன்று

பக்கங்களிலும் சாளரம் இல்லை. நான்காவது பக்கம் உள்முற்றத்தின் இருட் பார்வையில் இருந்தது. ஆங்கு ஒரு மேசையும், இரண்டு நாற்காலிகளும், சில பாயல்களும் காணப்பெற்றன. இருள் செறிந்த, அழுக்குப்படிந்த, விரல்கள் புதைந்த இவ்வறையில் உற்சாகம் உதிப்பது எங்ஙனம்? வற்றல், வடகம், அழுகிய மூலிகை முதலியவைகளினின்றும் ஒருவகை நாற்றம் வீசிக்கொண்டிருந்தது. ஒரு பண்டைக்காலத்து நகரத்தின் ஒரு பண்டைக் காலத்துக் கோயிலைச்சுற்றி நாற்புறங்களிலும் இருந்த பார்ப்பனர்களின் வீடுகள் எல்லாம் இந்நிலைமையிற்றான் இருந்தன.

நாள் முழுதும் இவ்வறையில் ஆங்கிருந்த பெண்கள் எல்லாம் கூடிப் பேசும் வண்ணம் வருவதும் போவதுமாய் இருந்தனர்—பார்ப்பனனின் கிழத்தாய்; அவள் மூன்று பையன்களின் மூன்று மனைவிகள்; கணவனை யிழந்த அவளிரு சகோதரிகள்; சிறிய தந்தை; பெரிய தந்தையின் மருமகளிர்; இவர்களுடன் தன் சிறிய பெண்ணாகிய அலர்மேலு; மேலும் வரையறையின்றி நாலுபக்கங்களும் மேற்கூறிய பெண்களின் குழந்தைகள் எல்லாம் தவழ்ந்து கொண்டும் தள்ளாடி நடந்து கொண்டும், அழுது கொண்டும், ஆடிக்கொண்டும், தூங்கிக்கொண்டும், இருந்தன; மூன்று வயதுக் குழந்தைகளிற் பல, தங்கள் வாயில் பருப்பும் சோறும் இருந்தும் கூட பால் குடிக்கும் சிசுக்களை இழுத்தெறிந்து தாங்களும் முலையருந்த மல்லாடின.

கொழுநர்தம் கட்டளைகட்குக் கீழ்ப் படியும் நேரம் போக, மற்றைய வேலைகளில் பெண்கட்கு வேறென்ன வேலை இருக்கின்றது? குடும்பத்தில் உள்ள சிலைகட்குப் பூசனை புரிவதும்; உண்டி சமைப்பதும்; சமைத்த உண்டி

யைக் கீழ்நோக்கிய வண்ணமே கொழுநருக்கு வட்டிப்பதும், தூங்குவதும், சிற்றுண்டி புசிப்பதும், வெற்றிலைப் பாக்கு மெல்லுவதும், மென்று தின்று உமிழ்நீரை சுவர்களில் புளிச்சென்று உமிழ்வதும்; அணிகலன்களைப்பற்றியும், ஆடைகளைப்பற்றியும், பிள்ளைப் பெறுதலைப் பற்றியும், நோய்களைப்பற்றியும், கணவர்களைப்பற்றியும், அவர்கள் அன்பைக் கவரும் முறைகளைப்பற்றியும், பகைவர்களை நசிப்பதைப்பற்றியும் மற்றும் மந்திர தந்திரங்களைப்பற்றியும் தவிர வேறென் பேசுவார்கள்? வம்பு பேசி, சண்டையிட்டு, ஊர் அலர் கூறி, இறுதியில் பாகவதம் படிப்பதுமுண்டு.

இவர்களில் ஒருவருக்காயினும் எழுதப் படிக்கத் தெரியாது. கிழவி கல்விப் பயிற்சியையே பேய்ச் செயல் என்று கருதிவந்தாள். ஆதலால் புக்ககத்திற்கு வந்த ஒரு பெண் சிறிது எழுதப் படிக்க அறிந்திருந்தாளாயினும் அவள் படிப்புச் சில நாட்களில் வெறுமையாய்விடுமென்பதற் கையமில்லை. ஒருவராயினும் உலகப் போக்கு இன்னதென்று அறிந்தனரன்று.

சில பெண்கள் இருமிக்கொண்டிருந்தனர். ஒரு பெண் இரத்தம் கக்கி இறந்தும் போனாள்.

‘சூரிய ஒளியும், தூய்மையான காற்றும் இல்லை. மேலும் உடற்பயிற்சியும் அறவே கிடையாது. இதனாற்றான் அவள் இறந்துபோனாள்’ என்று ஒரு ஆங்கிலம் பயின்ற மருத்துவச்சி கூறினாள்.

‘சூரிய வெப்பமும், வெறுவெளியும் உடற்பயிற்சியும் கீழ்ச்சாதி மக்களுக்கன்றோ? எமக்கேன்?’ என்றாள் கிழவி. அன்றுமுதல் ஆங்கிலம் பயின்ற ஒரு மருத்துவச்சியும் அந்த வீட்டிற்குள் நுழைய ஒப்புக்கொள்ளப்படவில்லை.

ஆனால் சிறுகச் சிறுக இருமிக்கொண்டிருந்தவர்கள் எல்லாம் அதிகமாகக் குரைக்கத் துவங்கிவிட்டார்கள்; இரவில் சுரநோய் கொண்டு தவிக்கலாயினர்; நோயின் கொடுமை ஆற்றாது, தங்கள் குழந்தைகளை வாரி எடுத்து அவைகளுடன் விளையாடித் தமது துன்பத்தைச் சற்று தணிக்க முயன்றனர்.

என்றாலும், காச நோயால் மற்றைப் பெண்களும் மாண்டார்கள்; என்றால் என்ன? புதிய மனைவிகள்; புதிய குழந்தைகள்.

ஆனால், மாற்றில்லாமல் இருள் செறிந்திருந்த அந்தக் கூடம் மட்டும் எப்பொழுதும் உள்ள நிலைமையிலேயே இருந்துவந்தது.

அந்தக் குடும்பத்தை நாம் ஒரு கொடிய குடும்பம் என்று கூறுவதற்கில்லை. குடும்பத்திலிருந்த ஆண்கள் தங்கள் மனைவிகளை அடிப்பது கிடையாது. தம்மால் இயன்றவரையில், அன்புடனேயே நடாத்திவந்தனர். பெண்கள் தங்கள் கொழுநரை மிகவும் உயர்வாய்ப் பாராட்டி வந்தனர்; அன்பு பூண்டும் ஒழுகினர்; தங்கள் குழந்தைகளின் தொகையை நினைந்து பூரித்தனர்; மலடிகளாய் இல்லாமல் பிள்ளைகளை ஈன்றெடுக்கும் தமது பெருமையை நினைந்து அகமகிழ்ந்தனர். இறந்துபோன பெண்களைக் கண்டு மிக்க வருந்தவும் இல்லை; ஏனெனில், அமங்கலிகளாய் வாழாமல் சுமங்கலிகளாய் இறப்பது பெரும்பேறு அன்றோ? குடும்பத்திலிருந்த கைம்பெண்டிர் தமது சகோதரனின் அன்பையும் ஆதரவையும் பாராட்டி அகங்களித்திருந்தனர்.

இறந்துபோன தங்கள் கொழுநரின் நற்பதவிக்காகத் தவம் புரிந்தும் வந்தனர். ஆனால், அக்குடும்பத்தின் ஆசி

யாகிய கிழத்தாய், தன் மகன் தன் மனைவி மீதில் அன்பாய் இருக்கின்றதைக்கண்டு மனம் வருந்தினாள். என்றாலும், பேரப் பிள்ளைகளைத்தூக்கி எடுத்துக் கொஞ்சியும் வருவாள். குழந்தைகளும் தங்கள் எண்ணங்கள் எல்லாம் ஈடேறப் பெற்று, வேண்டிய புசித்து, இறுதியில் சொறி, முதலிய நோய்களால் துன்புற்றிருந்தன. எனவே குடும்பத்தில் உள்ள அனைவரும் தங்கடங்கள் நிலைமையில் களிப்புற்றே இருந்தனர்; வேறு மாறுதல் வேண்டினவர்களும் அன்று.

ஆனால்—, அலர்மேலு மட்டும் அமைதி அற்றிருந்தாள். அலர்மேலு பிறிது பேச ஆரம்பித்தது முதற்கொண்டே ராமனைப்போல் ஒரு கணவன் வேண்டுமென்றும், தான் சீதையைப்போல இருக்கவேண்டுமென்றும் கவன்றுவந்தாள். இதுபற்றித் தொழுதும் வந்தாள். இதற்குரிய மந்திரத்தையும் கிழவி அலர்மேலுக்குக் கற்றுக்கொடுத்து அம்மந்திரத்தை அலர்மேலு சரிவர உச்சரித்து வருகின்றதையும் மேற்பார்த்து வந்தாள்.

ஒரு நாள் தவறாது, அலர்மேலு செவிகளில், ஆண், பெண் தொடர்பைப்பற்றிய செய்திகள் விழுந்துவந்தன. அதனால், அலர்மேலு பெண்களின் நோக்கமெல்லாம் ஆடவர்களைக் கூடி வாழ்வது ஒன்றே என்று கருதலாயினாள். மேலும் மணம் புரிந்துகொள்ளாமல் இருப்பது முக்காலும், நரகத்தில் ஆழ்த்தும் என்றும் நம்பினாள். இருந்தாலும் தனது பருவ காலம் நெருங்க நெருங்க அலர்மேலு பின்னர் என்ன நிகழுமோ என்று பெரிதும் அச்சம் கொண்டாள்.

தனது முதிய சகோதரி ராஜம்மாள் சென்ற ஆண்டிற்றான் தனது கணவன் வீடு சென்றனள். எல்லா வகைகளி

லும் ராஜம்மாள் மணம் சிறப்புற்றிருந்தது. உயர்ந்த கோத்திரம்; உயர்ந்த செல்வம். ஆனால் சாந்திமுகூர்த்தமாய், ஆறு மாத காலத்திற்குள் அழகிய ராஜம்மாள் ஒரு உடைந்து போன பாண்டம்போல தன் தாயகம் வந்து சேர்ந்தாள். தன் கணவன் வீட்டில் நிகழ்ந்த செய்திகளை ராஜம்மாள் கூறக் கேட்டு ராஜம்மாள் மிக்கத் துன்பத்தையும் இழிவையும்தான் அடைந்திருக்க வேண்டும் என்று எண்ணவேண்டியிருந்தது. “அவர்கள் குடும்பத்து ஆண்களே மனைவிகளைக் கொல்லுபவர்களாம். இரக்கமற்ற கொடியர்கள்” என்றாள் ராஜம்மாள். அதனை அலர்மேலு ராஜம்மாளின் சிலிர்த்த விரல்களைப் பற்றிக்கொண்டே கேட்டுவந்தாள்.

ராஜம்மாள் மீண்டும் தன் புக்ககம் சென்றுவிட்ட உடன், அலர்மேலு தன் சகோதரி கூறியவற்றை நினைந்து வருந்தினாள். தன் சகோதரி அடைந்த துன்பங்களை எண்ணி எண்ணி அவள் கூறிய கட்டுரையின் சொற்களை எல்லாம் ஒன்று விடாமல் நினைந்து நினைந்து, அலர்மேலு மனங் கவன்றாள். அவைகளால் இவள் கண்முன் பலகோரமான செயல்கள் எல்லாம் படக்காட்சியில் பார்ப்பதைப்போல் பார்த்து மனம் திகைத்தாள். பகல் முழுதும் ராஜம்மாள் அநுபவித்த துன்பங்களை நினைந்தனள்; இரவில் அவைகளைப்பற்றிக் கனவு கண்டனள்.

அலர்மேலு தன் பத்தாம் ஆண்டைக் கடந்தனள்; ஆனால் இவள் மனதில் ஒரு பெரும் துயரம் குடிகொண்டிருந்தது.

“அலர்மேலு நன்றாய்த்தான் இருக்கின்றாள்; ஆனால் வளரமாட்டேன் என்கின்றாளே! வயது ஒன்பதிற்கு மேலாகின்றது. ஏழு வயதுக் குழந்தைபோன்று இருக்கின்றாளே!

திருக்குத் திருக்கென்று விழிக்கின்றாளே, இந்தப் பயங்காளியைக்கண்டு அவள் புருஷன் எப்படித்தான் இச்சிப்பான்?” என்றார்கள் குடும்பத்துப் பெண்டிர்.

“உலகம் பலவிதம். நாம் எப்படிச் சொல்லுவது” என்று சிலர் சமாதானமும் கூறிக்கொண்டார்கள்.

இம்மொழிகளைச் செவியேற்ற அலர்மேலு தன் தாயின் மடியில் தன் முகத்தை மூடிக்கொண்டாள். ஆனால் தன் மனதில் ஏற்பட்ட துன்பத்தைப்பற்றி அவள் யாரிடத்தும் கூறினாளன்று.

தாயும் என் செய்வதென்று அறிந்தாளன்று. இவளுக்குக் குழந்தைகளைப் பெறுவதைத் தவிர அந்த வீட்டில் வேறு செல்வாக்கு என்ன உள்ளது?

இவ்வகையாக ஒரு ஆண்டு கழிந்தது. ஒருநாளைப் போலவே மறுநாளும். ஆனால் ராஜம்மாள் மீண்டும் தன் தாயகம் திரும்பிவந்தாள். நன்றாகப் படுதாக்களால் மூடப் பெற்ற ஒரு ‘‘ரோல்ஸ் ராயிஸ்’’ மோட்டார் ரதத்தில் வந்து சேர்ந்தாள். இன்றாவது தன் தமக்கையின் முகத்தை மனமாறப் பார்க்கலாம்; இன்றாவது அவள் உடம்பைத் தொடலாம்; அவள் தேன் மொழிகளைப் பருகலாம் என்று அலர்மேலு எதிர்பார்த்தாள்.

மோட்டார் ரதம் தெருவாயிலில் வந்து நின்றது. ராஜம்மாளை ஒரு மூட்டையைப் போல் வாரிப் பெண்கள் சுமந்து சென்றனர். எல்லோரும் அவளைச் சுற்றி நின்று கொண்டு அழத் தொடங்கி விட்டனர்.

‘நான்தான் சொன்னேனே, அவர்கள் வீட்டு ஆண்கள் எல்லாம் மனைவிகளைக் கொல்லுபவர்கள் என்று!

கொடிய பாபிகள்! இரக்கமற்றவர்கள்! பெண் ஜென்ம மாய்ப் பிறந்தோமே!!' என்றனர்.

அலர்மேலு, தன் தமக்கையின் பக்கத்திலிருந்து, அவள் கூறும் ஒவ்வொரு கொடிய வார்த்தையினையும் செவி யேற்று வந்தாள். அலர்மேலு, ஒரு சிறுமி, அங்கிருக்கின் றாளே என்று கூட ஒருவரும் எண்ணவில்லை. அவள் இருந் தால் என்ன! அவள் வேறெங்குதான் இருப்பது?

ராஜம்மாளின் வாய்ப்பிறப்பைச் செவியேற்ற அலர் மேலு இனி தன் தமக்கையின் நலத்திற்காக ஈடுபடுவதே சிறந்ததெனத் துணிவாளாயினள்.

ராஜம்மாளை மீண்டும் அவள் புக்ககத்திற்கு அனுப்ப ஏற்பாடு செய்தார்கள். அதுபோது,

'பாட்டீ! ராஜத்தின் கொடுமைகளை எல்லாம் நீங்கள் கேட்டிருந்தும், அவளை அவள் கொழுநன்வீட்டிற்கு அனுப் பத் துணிந்தீர்களே! இரக்கம் என்பது எள்ளத் துணையும் இல்லையா?' என்றாள்.

'குழந்தாய்! நீ ஒன்றும் அறியாய்! உனக்கும் அந்த நிலைமைதான். நீ உன் மனதில் இத்தகைய கெட்ட எண் ணங்களைக் கொள்ளுதல் கூடாது. நன்றாகக் கேள்; உல கத்தில் பெண்கட்குக் கொழுநரே தெய்வம். ஒரு பெண் தன் கொழுநனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதிலும் வேறு சிறந்த செய்கை இவ்வுலகத்தில் இல்லை. கொழுநன் கொடி யவனாயினும் சரி, அவன் எப்படி இருந்தபோதிலும் சரி, அவனைப் போற்றுதல் வேண்டும். கொழுநன் தன் மனை வியை வசை கூறினால், மனைவி அவன் கைகளை எடுத்து முத்தமிடுதல் வேண்டும். அவள் தன் செயலாலும் மொழி

களாலும் தன் கணவனைத் தெய்வமெனப் போற்றுகின் றாள் என்று பிறர் அறிதல் வேண்டும்.

'நாம் பார்ப்பனச் சாதியாயிற்றே! நாம் நம் குல தர் மங்களைக் காப்பாற்றாமல் வேறு யார் காப்பாற்றுவது? ஆக லின் உன் தமக்கை தன் கொழுநன் கட்டளைக்குக் கீழ் படிந்து தன் புக்ககம் செல்லுகின்றாள்' என்றாள் கிழவி.

அலர்மேலு தன்னினைவற்றுக் கீழ் வீழ்ந்தாள். இவளை இவளன்னை தேற்றி எடுத்து,

'நீ இதனை எல்லாம் பொருள் படுத்தாதே! இது தமக் கையின் தலைவிதி. அதனை அவள் கழித்துத் தானே ஆக வேண்டும். நாம் இதற்கு இடையூறு விளைத்தல் கூடாது. சாமிகட்கு ஊறிழைத்தவர்கள் ஆவோம்.

'உனக்கும் நன்னாள் கிட்டி விட்டது. நீயும் உன் கொழுநன் வீட்டிற்கு அடுத்த மாதம் போகவேண்டும். உன் கணவன் உன் அப்பாவைப் பார்க்கிலும் நன்றாகத் தடித்து இருப்பார்; அழகியவர்; அவரிடம் மிகுந்த பொரு ளும் உண்டு. உனக்கு வேண்டிய அணிகலன்களெல்லாம் அளிப்பார்' என்றாள்.

'ஆனால் அவர் யார்? அவர்—, அவர்—,' என்றாள் அலர்மேலு.

'அவரா? அவரா? ஏன்—? ஏன்—? என் குழந்தாய்! என் தங்கமே! உண்மைதான்.

'நீ அவருக்கு நான்காம் தாரம். அவரும் உன் தமக் கையின் அகமுடையானின் அண்ணாதான்' என்று கூறி ஆற்றாளாய்த் தன் மகளைக் கட்டிப்பிடித்துக்கொண்டு விம்மி யழுதாள்—அலர்மேலுவின் தாய்.

பத்தாம் அத்தியாயம்.

முள் வேலி.

கைம்பெண்களை எரித்துவிடாதீர்கள்; பெண் குழந்தைகளைக் கொன்றுவிடாதீர்கள்; குட்டநோயுள்ளவர்களை உயிருடன் புதைத்துவிடாதீர்கள்-ஜான் லாரன்சு பாஞ்சால நாட்டிற்கு அளித்த அரசாங்கத்தின் மூன்று கட்டளைகள்; ஆர். பி. சிமித்; லாரன்சு பிரபுவின் சரித்திரம்; லண்டன், **1883**; முதற்புத்தகம், பக்கம் **196**.

வயதில் மிகுந்த சமீன்தாரர் செல்வத்திலும் மிகுந்திருந்தார்; இது சாமிகளின் அருளாற் கிடைக்கப்பெற்ற ஒரு பெரும்பேறு. மேலும் பூர்வ புண்ணியங்களின் நற்பலனன்றோ? வினைகள் சகடைபோற் சுழல்வன.

சமீன்தாரர் தன் இளம் வயதில் ஒரு பெரும் நாடோடியாய் இருந்தார். ஆனால் பிரிடிஷார் பாஞ்சால நாட்டில் நீர் வளத்தை கால்வாய்கள் முதலியன வெட்டி மிகுத்தமை பற்றி, புன்செய்கள் எல்லாம் நன்செய்களாக இச்சமீன்தாரரும் செல்வத்தில் உயர்ந்தார்.

கால்வாய்களை வெட்டி, பாலைவனங்களை விளைநிலங்களாகச் சீர்திருத்தி, அரசாங்கத்தார் பாஞ்சாலநாட்டுக் குடி

யானவர்களை இப்புதிய நிலங்களில் சாகுபடி செய்ய அழைத்தபோது, குடியானவர்கள் தங்கள் வறண்டுபோன பழைய நிலங்களை விடுத்து முன்வரப் பெரிதும் தயங்கினர். மேலும் தங்கள் சுவாமிகள் இதற்காகத் துன்புறுத்தினால் என் செய்வது என்றும் அஞ்சினார்கள்.

எனவே நிலங்களைத் திருத்திய அரசாங்கத்தார் பயிர் செய்பவர்களை இப்புதிய நிலங்கட்கு அழைக்கும்படி விளம்பரங்கள் செய்தார்கள்.

'புதிய கணக்குகளைக் கையாடுங்கள்; இதற்கெனப் புதிய நிலங்களின் பயனை அடையுங்கள்; பண்டையப் பாழ் நிலங்களின் வெறும் கணக்குகளைக் கைவிடுங்கள்.'

இத்தகைய ஓர் விளம்பரத்தைக் கண்ணுற்ற நாடுமாறி சமீன்தார் தன் சிறுவயதில், ஐம்பது ஏக்கர் நிலங்களைப் பெற்றார். இவ்வைம்பது ஏக்கர் நிலங்களும் நீர் வளத்தாலும் விளைவளத்தாலும் போக்குவரவு வளத்தாலும் இருநூற்று ஐம்பது ஏக்கர்களாகப் பெருகின. எனவே, சமீன்தாரருக்கு வயது முதிர முதிர, செல்வம் முதிர்ந்தது. செல்வம் முதிர தற்பெருமையும் முதிர்ந்தது.

இத்துணை செல்வம் வாய்க்கப்பெற்ற சமீன்தாரர் தன் மகனைக் குடியானத்தொழிலில் ஈடுபடுத்த எப்படித் தான் இணங்குவார்? அவன் இரண்டு எழுத்துக்களை அவன்றன் பெயருக்குப்பின் ஒட்டவைத்துக் கொண்டு, உத்தியோகமன்றோ புரியவேண்டும்.

எனவே, கிழச் சமீன்தாரர் தன் மகனை சட்டப் பயிற்சியில் பயிற்றுவித்தார். இதற்கிடையில் இப்பையனுக்கு மிக்க ஆரவாரத்துடனும் அதிகச் செலவுடனும் மணமுடி

புரிவித்தார். மகன் தனபதிராய் ஒரு நல்ல பையன்; பெற்றோர்க்குக் கீழ்படிந்து நடப்பவன்; அறிவும் அதற்கேற்ற நுட்பமும் வாய்க்கப் பெற்றவன். 'இனிது முடிந்தது. உன் சாதகம் நன்றாய் இருக்கிறது, இனி நீ நீதி மன்றங்கள் உள்ள ஒரு ஊருக்கருகாமையில் குடி இருக்க வேண்டும். அங்கே வேற்றுமைகளை அதிகப்படுத்தி, அதன் பயனாய் ஏற்படும் வழக்குகளை வகித்து வாதித்து, சட்ட விற்பனராய் புகழ் பெற வேண்டும். உன்னால் எனக்கும் நற்பெயர் கிடைத்தல் வேண்டும்.

'ஆனால் நீ புறப்படு முன்னர் நான் ஒன்று கூறுவேன்; கேள்; உன் வாணாளில் திருமணங்களில் அதிகச் செலவிட்டு கடனைச் சுமத்திக் கொள்ளாதே. எத்துணையோ செல்வத்தில் மிகுந்த நானும் உன் மணத்தில் நிகழ்ந்த கடனை இற்றைவரை அடைத்துக்கொண்டு வருகின்றேன். என் தந்தை அதிக ஆடம்பரத்துடன் எனக்கு மணம் நிகழ்த்தினார்; அதற்கேற்ப நானும் உனக்குச் செலவிட்டேன்; நீயும் வழி வழியாய் உன் மக்களுக்கும் அவ்வாறே செய்தல் வேண்டும்.

'இப்பொழுது உன் மனைவி வயிறு வாய்த்திருக்கின்றாள். குழந்தைப் பெறும் நாள்; அன்று பெண்குழந்தைப் பிறக்காமல் பார்த்துக்கொள். பெண் பிறவாமல் சாமிகள் தாம் கருணை புரியவேண்டும். ஏனெனில், நம் நிலைமைக்குத் தக்கபடி நீ உன் பெண்கட்கு மணம் நிகழ்த்தினால் நீ கடன்காரனாதல் வேண்டும்.

'ஆதலின், அந்த நாளையில் மருத்துவச்சி அவள் கடமையைச் சரிவரச் செய்கின்றாளா என்று நன்றாகப் பார்த்துக்கொள்' என்றார் சமீன்தார்.

இதன் பிறகு தனபதிராய் தன் மனைவி ரோஜாத்தழையுடன், தந்தை குறிப்பிட்ட சிற்றூரிற் குடிபுகுந்தார்.

மருத்துவச்சி தன் கடமையை சரிவரச் செய்தனள்.

திங்கள், பல கழிந்தன; தனபதிராயும் தானிருந்த சிற்றூரின் கண், குடிகளிடை வேற்றுமையை விளைத்து, அதனால் ஏற்பட்ட வழக்குகளில் நீதிமன்றத்தில் வாதித்து கடிதில் பொருள் திரட்டி வந்தார்.

ரோஜாத் தழை தன் அறையில் நாடோறும் சாமிகட்கு வணக்கமும் விரதமும் புரிந்து வந்தாள். ஏனெனில், மீண்டும் அவள் சூல் தரித்திருந்தாள். இதுபோதும் பெண் குழந்தையினையே பெறுவதாயின் இவள் ஓர் பாவியாதல் வேண்டுமன்றோ? மேலும் ஒரு மனைவி தொடர்ச்சியாகப் பெண் குழந்தைகளையே ஈன்று வருவாளாயின் அவளை விலக்கி விடும்படி ஏற்படலாம்; மறுமணம் நிகழ்தலும் கூடும்.

எனவே, ரோஜாத்தழை பிள்ளைப்பெறும் காலத்தை மிகவும் அச்சத்துடன் எதிர்பார்த்து வந்தாள். இதற்கென்று ஒரு பாழடைந்த இருட்டறையில் ஒரு அழுக்குப் பிடித்த கந்தைகளை யணிந்த மருத்துவச்சியின் பார்வையில் ரோஜாத்தழை இருந்து வந்தாள்.

'குழந்தை பெண்ணாய் இருப்பின், அறிவுடன் நடந்து கொள்' என்று மருத்துவச்சிக்கு தனபதிராய் அறிவுறுத்தினார். மருத்துவச்சி இயற்கையாக அறிவிற் குறைந்தவளாய் இருப்பினும் தனபதிராய் கூறியதின் நுட்பத்தை அறிந்து கொண்டனள்.

இன்று அவ்வூர் உப கமிஷனர் மேற்பார்வையிடும் நாள். அவர் எப்பொழுது தான் வருவார் என்று ஒருவருக்கும் தெரியாது. ஆதலின், உப கமிஷனர் உதவியால் பட்டங்களை விழைந்த தனபதிராய் விடியற்காலத்திலேயே தன் வீட்டை விட்டு நகரசபை அங்கத்தினர்களைச் சார்ந்து உப கமிஷனரை எதிர்நோக்கிய வண்ணம் இருந்தார்.

உப கமிஷனர் (ஒரு வெள்ளையர்) வந்ததும், அவர் முகத்தில் ஒளி குன்றி யிருந்ததாகக் காணப் பெற்றது.

எனவே, ஒவ்வொருவரும் 'என்மீதிற்றான் உபகமிஷனரிடம் யாரேனும் கோள் கூறியிருக்க வேண்டும்' என்று நினைத்துத் துன்புற்றிருந்தனர்.

இதுபோது ஒரு பாஞ்சாலப் போர்வீரன் கூறுவான்.

'சகோதரர்களே! நீங்கள் வெள்ளையர்களின் உள்ளக் கிடக்கையை நன்கு அறியமாட்டீர்கள். அவர்கள் நம்மைப் போல நினைப்பது இல்லை. நான் அவர் பணியாட்களிடமிருந்து உண்மையைத் தெரிந்து கொண்டேன். கேட்பீர்களாக:—! நமது ஜில்லா மிகப் பெரியதாகும். இது ஒரு பெரும் சமஸ்தானம் போன்றது. நமது ஜனத்தொகை ஐந்நூறு ஆயிரத்துக்கு மேற்பட்டது. உப கமிஷனர் மூன்று திங்களாய் ஓயாமல் சுற்றுப் பிரயாணம் புரிந்து வந்திருக்கின்றார். அவரது பல திறப்பட்ட வேலையினால் காலை முதல் இரவுவரை உழைத்துக் களைத்திருக்கின்றார்.

'என்றாலும், அவர் முகத்திற் காணப்படும் துன்பக் குறி களைப்பினால் ஏற்பட்டதன்று. இவர் ஒரு சிற்றூரில் கணக்கைச் சோதித்து வந்தார். கணக்கு ஏடுகளைத் திருப்பிக்கொண்டே வந்தபோது, ஓரிடத்தில் இவர் முகம் சுருங்

கிற்று. உடனே ஆங்குள்ள ஊர்த் தலைவரைப் பார்த்து "இந்தப் புத்தகத்தில் ஐம்பத்திரண்டு குழந்தைகள் பிறந்தனவென்று காணப்படுகின்றது. அவற்றுள் ஆண் குழந்தைகளின் தொகை நாற்பத்தியொன்றாகவும், பெண்குழந்தைகளின் தொகைமட்டும் பதினொன்றாகவும் இருப்பது எங்ஙனம்?" என்றார்.

'எனினும் அவ்வூர்க் குடிகள் திகைத்தனர். ஆனால் ஒரு சோதிடன், "எல்லாம் சாமிகட்குத்தான் தெரியும். நாங்களறிவது எவ்வாற்றால்?" என்றான்.

'உப கமிஷனர் கூறுவார்: "புத்தகங்கள் இருந்த நிலைமையில் இருக்கட்டும். நான் உங்கள் ஊரைச் சுற்றிப் பார்ப்பேன்"

'எனவே உப கமிஷனர் ஊர் சுற்றி வந்தார்; குடிகளும் பின் தொடர்ந்தனர். ஓரிடத்தில் கொடிய நாற்றம் வீச, அங்கு நின்று விட்டார். நாற்றம் எதுபற்றி உண்டாயது என்று உபகமிஷனருக்குத் தெரியவில்லை. அங்கு ஓர் முள் வேலியினின்றுமே அவ்வாடை எழுந்ததென்று கருதி, உப கமிஷனர் அவ்வேலியை வெட்டி எறிந்துவிடும்படிக்குக் கூறினார். குடிகளும் மறுநாள் அவ்வண்ணமே புரிவதாக விடையளித்தனர். உப கமிஷனர் ஒப்பவில்லை. அன்றையநாளே, அப்போதே, அதனை வெட்டிவிடுமாறு ஆணையிட்டார்.

'வேலி வெட்டி எறியப்பெற்றது. முட் செறிவுகள் நீங்க நீங்க, அக் கொடிய நாற்றமும் சகிக்கொணாமல் வீசிற்று. உப கமிஷனர் உற்று நோக்கினார். முகம் சிவந்தது; கண்கள் நெருப்பு கக்கின; சீறிக்கூறுவார்'.

'அன்று பிறந்த குழந்தைகளின் எலும்புகள் மென்மையாய்க் காணும். மேலும் அக்குழந்தைகளின் தசைப் பற்றும் குறைவு. எனவே, அவைகளின் பிணங்கள் பல நாட்கள் வரை பூமியில் காண்பதரிது. மேலும் நாய் நரிகள் பூச்சி புழுக்கள் பிணங்களை அரித்துத் தின்றுவிடுகின்றன. இந்தக் குழந்தையைப்போல் எத்தனைப் பெண்குழந்தைகளை நீங்கள் கொன்று புதைத்திருக்கின்றீர்கள்? இத்தகைய ஈரமற்ற செயலினின்றும் உம்மை ஈடேற்றுவது எங்ஙனம்? உங்களிலும் காட்டில் வாழும் விலங்கினங்களும் காருண்ய முடைத்தன வன்றோ! உம்போன்ற வெட்கமற்ற இரக்கமற்ற மக்களும் உளரோ?'

'இதுவே இவர் முகத்தில் தோன்றும் மலர்ச்சியின்மைக்குச் சான்றாகும். இவருக்கும் ஒரு பெண் குழந்தை உண்டு. ஆதலினால்தான், பெண் குழந்தைகளைக் கொன்று புதைத்துவிடும் நமது செயலை மிகவும் அருவருக்கின்றார்.'

பாஞ்சாலப் போர் வீரன் இங்ஙனம் கூறியது கேட்டு, தனபதிராய் அசைவற்று நின்று விட்டார்.

பிறகு, தன்னினைவு எய்தவும், தன் வீடு நோக்கி ஓடோடிச் சென்றார்.

வீடு நுழைந்ததும்,

'குழந்தை பிறந்ததா?' என்றார்.

'ஆம்'

'அது எங்கே?'

'தங்கள் ஆணைப்படி செய்து விட்டோம்'

'அடி பேயே! என் செய்தாய்?'

'கவலை வேண்டாம். தங்கள் ஆணையைச் சிறிதும் மீறவில்லை. அந்தக் குழந்தையை நான் ஒரு கந்தைத் துணியில் மூட்டைபோலச் சுற்றி, ஒரு முட்புதரில் துறுத்திவிட்டேன். நமது வீட்டிற்கு அணித்தாய் இருக்கும் முள் வேலியிற்றான்; தாங்கள் வேண்டுமென்றால் இப்பொழுது கூட சென்று பார்க்கலாம்.'

'முள்வேலியில்! — அதுவும் என் வீட்டிற் கணித்து!! நீ நாசமாய்ப்போக! ஓடு! உடனே அந்த மூட்டையை எடுத்துக்கொண்டு வா; உயிர் இருக்கின்றதா எனப் பார்ப்போம்' என்றார் தனபதிராய் திகைத்துப்போய். மருத்துவக் கிழவியையும் கழுத்தைப் பிடித்து கெட்டினார்.

மருத்துவச்சி ஓடோடிச் சென்று அம்மூட்டையை முட்புதரிலிருந்து எடுத்து வந்தாள். தனபதிராய் மூட்டையை அவிழ்த்துப் பார்த்தார். குழந்தைக்குச் சிறிது மூச்சு இருந்தது. தனபதிராய்க்கும் சிறிது நல்லுணர்வு பிறந்தது.

'இக்குழந்தையை வீட்டுக்குள் எடுத்துச்செல். அதனைக் காப்பாற்றி வா!' என்று கூறி, பரபரப்பால் வன்மையிழந்தவராய் மீண்டும் ஊர்ச் சபை நண்ணிப் போந்தார் தனபதிராய்.

சின்னாட்கள் கழிந்தன; உப கமிஷனரும் ஊரைவிட்டகன்றனர். ரோஜாத் தழை தன் குழந்தைக்குப் பாலருத்திக்கொண்டிருந்தாள்.

கணவனைக் கண்டதும் தன் குழந்தையைக் காப்பாற்றிய பெருங் கருணையின் பொருட்டு தனபதிராயின் அடி பணிந்தாள். ஆனால் தனபதிராய் சினந்து அவளைத் தலை மீது உதைத்துக் கூறுவார்:

'என் குலத்தைக் கெடுக்க வந்த பேதாய்! நான் சட்டங்களை வாதித்து நீதி மன்றத்தில் சிறப்பு எய்தினாற்றான் என்? என் ஆங்கிலப் பயிற்சியும், சொற்பெருக்கின் அருமையும் புகழப் பெற்றாற்றான் என்? உன்னால் என்னை என் நண்பர்கள் எல்லாம் 'இவன் பெண் குழந்தைகளைப் பெறும் ஒரு பாவி' என்றன்றோ இழித்துக் கூறுவார்கள்! என் தந்தையும் எனை இகழ்ந்து, தன் சொத்தை எனக்குதவார். நான் என்ன தீவினை செய்தேனோ?' என்றார்.

குழந்தைக்கு உயிர் அளிப்பதும் துன்பம்; அதனை அழிப்பதும் துன்பம். வேறு ஒரு சட்ட விற்பனர் பொறாமை பற்றி இதனை வெளிப்படுத்தவும் கூடுமன்றோ? என் செய்வார் தனபதிராய்.

இதற்கிடையில் தனபதிராய்க்குச் செல்வமும் ஓங்கிற்று. சமீன்தாரக் கிழவனிடம் ஒரு குழந்தை பிறந்தது என்று தனபதிராய் தெரிவித்தாரே தவிர, அக்குழந்தை பெண் என்று கூறவில்லை. கிழவன் உண்மையை அறியும் முன்னர் இறந்து போதலும் கூடும்!.

மேலும் ரோஜாத் தழைக்காயினும், வேறு ஒரு மனைவிக்காயினும் ஒரு ஆண் மகவைப் பெறுதலும் கூடும்.

குழந்தை வளர்ந்து ரோஜாத்தழையின் அன்பிற் கிலக்காயது. சில பிள்ளைச் செயல்களைக் கண்ணுற்ற தனபதிராய் மனதிலும் ஒரு சிறு கிளர்ச்சி உண்டாயிற்று; என்றாலும் தனபதிராய் இப் பெண்குழந்தை முகத்தைப் பார்க்காமல் மறுபுறம் திரும்பிக்கொண்டு சென்று விடுவார்.

இரண்டாண்டுகள் சென்றன. ஓர்நாள் கிழச் சமீன்தாரர் தன் மகனைக் குழந்தையுடன் பார்க்கவேண்டுமென்று

ஆணையிட்டனுப்பினார். 'நான் இறப்பதற்குமுன் என் பேரனின் முகத்தைப் பார்க்கவேண்டும்' என்று கிழவர் கூறினார்.

குழந்தையை ஒரு பொம்மையைப்போல், ஆடை அணிகலன்களால் அழகு செய்தாள் ரோஜாத்தழை.

'ஒருவேளை என் பெண்ணின் அழகைப்பார்த்துக் கிழவன் மனம் இரங்குதலும் கூடும். மேலும் உப கமிஷனரின் செய்தியைப்பற்றி நான் கிழவனிடம் தெரிவிப்பேன்' என்று தனபதிராய்த் தன்னைத் தேற்றிக் கொண்டார்.

ஆனால் சமீன்தாரர் இதற்கசையவில்லை. உப கமிஷனரைப்பற்றி என்னிடமா கூறத் துணிந்தாய்? வெள்ளையர்கள் இனி அறவே நம் நாட்டைவிட்டுத் தொலைந்து விடுகின்றார்கள் என்று நான் கேள்விப் படுகின்றேன். யார்வந்தால் என்ன? யார் போனால் என்ன? நமது நிலம் இருக்கின்றது; கடனும் இருக்கின்றது; நீ ஆண் குழந்தையை அடைதல் வேண்டும்; இந்தப் பெண் பூச்சியால் நீ கடன்காரனாதல் கூடாது. உன்னிலும்கீழ்படியாத ஒருமகனுண்டோ? இந்தப் பெண்ணைப் பெற்றதற்கு நீயே பொறுப்பாளியாவாய். நீயே இந்த நிலைமையை மாற்றிக்கொள்ளுதலும்வேண்டும். இதோ ஒருமண்வெட்டி இருக்கின்றது; அரிவாளும்உள்ளது; நமது கோதுமை வயலுக்கு இதனை அழைத்துக்கொண்டு போய் உன் வேலையை முடித்துவா என்று கிழவர் சீற்றம் கொண்டுரைத்தார்.

தந்தை சொன் மிக்க மந்திரமில்லை யென்று தனபதிராய் தன் சின்னஞ் சிறிய பெண்மகவை கத்தி, மண்வெட்டியுடன் கோதுமை வயலுக்கு அழைத்துச் சென்றார். சிறு

குழந்தை நடக்கத் தள்ளாடியது; என் செய்யும்? அதனை தனது தோளில் சுமந்து தனபதிராய் வயல் நோக்கிக் கடுகி நடந்தார்.

தோளில் உள்ள குழந்தையின் ஆடையிலிருந்து நறுமணம் கமழ்ந்தது. அதன் சிறிய விரல்கள் இவர் தோளிலும் முகத்திலும் பற்றின. தனபதிராய் மனதில் ஒருவகை துன்பம் கிளர்ந்தது. இதனை மாற்றிக்கொண்டு தனபதிராய் விரைந்து சென்று வயலை அணுகினார்.

கொலை புரிதல் சிலருக்கு எளிது. தனபதிராய் இச் செய்கையில் பழகியவரன்று.

என்றாலும், முதன்முதலில் குழி வெட்டத் துவங்கினார். குழி தோண்டிக்கொண்டிருக்கும்பொழுதே மனதில் அருவருப்புண்டாயது. குழந்தையின் ஆடைகளிலிருந்து போந்த நறுமணம் மீண்டும் தனபதிராயை உறுத்தியது. அதன் மெல்லிய விரல்கள்—ஆ! அருமை விரல்கள்! என் செய்வது? தந்தையின் கட்டளை. தனபதிராய் குழந்தைகளின் ஆடைகளை அகற்றுவாராயினார்.

அண்மையில் கோதுமைப் பயிர் சலசலவென்று அசைந்தது. தனபதிராய் நடுநடுங்கினார். எவரும் ஒளிந்திருந்து கண்டுகொண்டாரோ!

ஓசை எழுந்த இடம், தனபதிராய் திரும்பிப் பார்த்தார். தந்தையின்பால் அளவிடா அன்புடன் அக்குழந்தை தள்ளாடித் தள்ளாடி சிறுநடை கொண்டு நடந்து வந்தது. வரும்போது, தன் உடம்பில் சிறிது ஒட்டிய களிமண்ணை அகற்றிற்று.

தனபதிராய் தன் குழந்தையை உற்று நோக்கினார். இவர் மனதில் ஏதோ ஒரு நரம்பு இற்றதுபோன்றிருந்தது; மனம் பரவிற்று.

உடனே, அம்மகவை வாரியெடுத்துத் தனபதிராய், அதன் விழிகளை அன்றுதான் முதன்முதலாய்ப் பார்ப்பவர் போன்று உற்று உற்று நோக்கினார்.

"நிலம் பாழடைந்து போகட்டும். என் கண்ணே! இந்த நன்செய் நிலப் பரப்பிலும் நீயே எனக்கு வேண்டும். நான் பொருளீட்டுவதில்லையா? அதைக் கொண்டு உன்னை நான் ஒரு அரச குமாரியைப்போல் மணம் புரிந்தளிப்பேன்; நிலம் பாழடைக" என்று விம்மி விம்மி அழுதார்.

பதினொன்றாம் அத்தியாயம்.

கிழப் பசு.

மனித உயிர்கள் ஒன்றே என்று கருதுவதுடன் கூட, எல்லாச்சீவன்களின் உயிர்களும் ஒருமைத்தே என்று கருதும் பான்மைத்து இந்துமதம். இம்மதக் கோட்பாட்டின்படி, பசுவை வணங்குவதால், மக்களிடை சீவகாருண்யத் தன்மை மிகவும் பரவி நிற்கின்றது - மகாத்மா காந்தி; யுவ இந்தியா,

---

ஒரு கிழப் பசு—சண்டெலி நிறத்தை ஒத்தது—சிறிது மங்கல், குறுகி நீண்டு கடையில் வளைந்து அழகு செய்யும் இரு விழிகள்; எந்நேரமும் எண்ணங்களில் ஆழ்வன போன்றிருப்பவை; அவை கல்லில்

செதுக்கப் பெற்ற ஓர் எகிப்திய இளவரசியின் கண்களை ஒத்திருந்தன.

இப்பசுவின் கழுத்தில் வான நீல வண்ணமுடைய பளிங்கு மணிகளாற் செய்யப்பெற்ற ஓர் ஆரம் திகழ்ந்தது. இதன் உயிர் மிக்க உயர்வு பெற்றது.

உயிர் கவர்பவர்களை மீளா நரகத்தில் ஆழ்த்தும் அத்துணை உயர்வுடையது; இதற்கு ஈடு பார்ப்பனர்கட்குப் பெரும் பொருள் நல்குவதும், தவம் புரிவதுமே.

ஆனால், இப்பசுவின் எலும்புகள், தோலைக் கிழித்து மேலெழுவன போன்றிருந்தன. ஒவ்வொரு எலும்பு மேட்டருகாமையிலும் குழிவிழுந்து, குழியிடை நிழல்கள் காணப்பெற்றன. இப்பசு கறவைக் காலத்தில்இரண்டாழாக்குப் பால் தரும். ஏனெனில் இது நாட்டுப்பசு. மறுத்துப்போய் பல ஆண்டுகளாய் விட்டன.

என்றாலும், இதற்குரியார், ஒரு செல்வமிக்க வேளாளர். இதற்கு அடிக்கடி இரண்டொருபிடி வைக்கோல் கூளத்தையும் தவிட்டையும் பருத்திக் கொட்டையினையும் அளித்து வருவார். இதனை ஏனைய பசுக்களைப் போலவே தெய்வம்போற் பாராட்டுவார்; கறவைப்பசுக்களுடன் மேய விடுவதும் உண்டு. மேய்ச்சல் நிலத்திற்குக் காடென்று பெயர். ஆனால் இது ஒரு காடன்று; இதில் மரங்களைக் காண்பதரிது; செடிகளே காண முடியாதென்றால் மரங்கட்குக் கேட்பானேன்! ஒரு வெட்ட வெளி. சூரிய வெப்பத்தில் கருகித் தீய்ந்துபோன நிலம். அங்குமிங்கும், சில மேட்டுப் புறங்களில் இரண்டொரு புதர்கள் தலை தூக்கி

நிற்கக் காணலாம். சிறிய பாறைகளால் நிறைந்த உயிர்ச் செடிகளற்ற இறந்து போனதோர் பாலை வனம்.

ஒரு சதுர மைல் மேய்ச்சல் நிலத்தில் ஒரு சிறு கற்றைப் புல்கூட காண்பது அரிது. இந்த நிலத்திற்றான் அவ்வூர் ஆடு மாடுகள் எல்லாம் மேய்ந்து திரும்பவேண்டும்.

ஆனால் கிழட்டுப் பசு என் செய்யும்? பாறைக் கற்களின் மேலேறி புற்பூண்டுகளைக் கடித்துத் தின்பதற்கு இதற்கு ஆற்றல் ஏது!

சிற்சில வேளைகளில் தெருவில் உள்ள குப்பைக் கூளங்களையும் மேயும். சிற்றூர்களின் குப்பை கூளங்கட்கும் அவைகளால் ஏற்படும் நோய்கட்கும் நோய்களால் இறக்கும் மனிதர்கட்கும் அளவுளதோ?

இது கொழுத்த கோடைக்காலம்; கிழப் பசு பல நாள்களாய் மேய்ச்சலற்றிருந்தது. மேலும் இதன் கண்களும் மழுங்கி இருந்தனவாற்றால் மற்றைய கூறிய ஒளியுள்ள கண்களைப்படைத்த பசுக்கள் தம்முன்தோன்றிய புற்பூண்டுகளைக் கிழப்பசுக்கு முன்னதாகவே புசித்துவிட்டன. ஆற்றலும் இல்லை; இதன் வயிறு நிறைவது எங்ஙனம்?

எனவே, இன்று காலை இது காட்டுக்குப் புல் மேய அவிழ்த்துவிட்டபோது புல்லில்லா அக்காட்டுக்குப் பழக்கத்தின்பேரில் தள்ளாடித் தள்ளாடிச் சென்றது. மந்தையிற் சேர்த்து ஓட்டிச் செல்லப்பெற்ற இப்பசு, தன்னைவிட ஆற்றலுள்ள மாடுகளால் ஒதுக்கப் பெற்றுப் பட்டினியாகவே வீடு திரும்பிற்று. இதைவிட மனமிரங்கத் தக்க ஒரு காட்சியும் உண்டோ?

ஆனால் இது தன் வீடு சேர்வதற்கு முன்னரேயே நடக்கத் தளர்வெய்தி, சோர்வுற்றுக் கீழ் வீழ்ந்துவிட்டது.

எனவே அங்கிருந்த எண்ணிறந்த உடல்நலிந்த, நோய்கள் மிகுந்த, எலும்புக் கூடுகள் போன்ற நாய்கள் இப்பசுவைத் தாக்கின. இதன் தசையை உயிருடன் பிடுங்கி உண்ணத் துவங்கின. அதுபோது சில்லா அதிகாரியான டெனிஸ் சலிவன் என்பவர் அங்கு செல்ல நேர்ந்தது. இவரை ஒரு குதிரைமீது கண்ட நாய்கள் எல்லாம் கோபத்துடனும் அச்சத்துடனும் தங்கள் பற்களைக் காட்டிக் கொண்டு கிழப்பசுவை விட்டகன்றன.

ஆனால் ஒரு கிழட்டுப் பெண்ணாய் மட்டும், சலிவனைக் கண்டும் அஞ்சாது பசுவின் தொண்டையிற் பாய்ந்து கடித்தது நீலவண்ணப் பளிங்கு மணிகளும் தரையில் சிதறின.

அன்று டெனிஸ் சலிவன் தன் படுக்கையிற் படுத்துத் துயிலவில்லை. மற்றெல்லா நலங்களும் இருந்தன. பகலில் உழைத்தவராதலிற் துயில் கொள்ளலாம். ஆனால் எதுபற்றியோ இவர் கண்கள் அயர்ந்தனவன்று.

இவர் கண்முன் தான் அந்தியிற் கண்ட காட்சியே தோன்றிற்று. கிழக் கபிலையின் தொண்டையிற் பாய்ந்த பெண்ணாயின் கொடுமையும், அப்பசுவின் கையறு நிலையும் இவர் மனதை உருக்கிக் கொண்டிருந்தது. இதைப் பற்றியே நெடுநேரம் சிந்தித்தார்.

பிரிட்டிஷ் இந்தியாவில் ஒரு கோடி நாற்பத்தியேழு லட்சம் மாடுகள் இருக்கின்றன. அவற்றுள் பகுதி வறண்டு

போனவை. பரந்த மேய்ச்சல் நிலங்கட்கு அளவில்லை. இவற்றில் மேய்ச்சலுக் குரிய புல் பூண்டுகள் பயிரிடப் பெறுவதும் இல்லை. கோடிக் கணக்கான பிள்ளைகள் பாலின்றி ஏங்கி நிற்கின்றன. கோடிக் கணக்கான பசுக்கள் உணவின்றிப் பாலற்றிருக்கின்றன; என்றாலும், பசுக்களும் குழந்தைகளும் நாள் தவறாமல் பெருகி வந்தன— பெருகி வந்தன—பெருகி வந்தன.

குழந்தைகளைக் கொன்றாலும் கொல்லுவார்கள்; இந்துக்கள் உலகத்திற்குப் பயன்படாத ஒரு பசுவைக் கொலை புரியார்கள்; ஆனால் அது உணவின்றி நாளுக்குநாள் மெலிந்து இறப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அதன் துன்பத்தைக் கண்டு அதன் தலைவிதி என்பார்கள்.

இத்தகையவர்களைக் கண்டு தங்களது பசுக்கட்காகப் புல் விளைக்கக் கூறுவது வீண் முயற்சியாகும். வீண் முயற்சி—எற்றுக்கு? ஏன்? என்ன பயன்?—என்பார்கள்.

அன்றிரவு நரிகள் ஊளையிட்டன. சலிவன் இதனைச் செவியேற்றுப் புரண்டு படுத்துக்கொண்டார். காலையில் எழுந்தவுடன் கூட, முந்திய நாளன்று கண்ட காட்சி சலிவன் மனதை உறுத்திக் கொண்டிருந்தது. எனவே, கபிலைப் பசு மரணமடைந்த காட்சியைப்பற்றி சலிவன் அன்று காலை ஊர்த்தலைவர்களிடம் முறையிட்டார்.

'அதன் தலைவிதி; பண்டுசெய்த தீவினைகளின் பயன்' என்றார்கள்.

'நாய்கள்; நீங்கள் கல்லால் எறிந்து வெருட்டும் உணவற்று, உடல் மெலிவுற்ற நாய்கள்; அவைகள்?'

'தெருநாய்கட்குச் சோறளிப்பது பாவம்?' என்றார்கள்.

'ஆயின், அவைகளின் துன்பத்தை ஒரே நாளிற்போக்கி விடலாமன்றோ? அவைகளைப் பெருகவிடாமல் தடை புரியலாமன்றோ?'

'எந்தச் சீவனின் வளர்ச்சியையும் நாம் குறைத்தல் பாவம். என்றாலும் தெரு நாய்களால் கேடு மிகுதியாகின்றது. சில வெறி நரிகள் தெரு நாய்களைக் கடித்து விடுகின்றன. நாய்கட்கும் அதனால் வெறியேற்பட்டு அவைகள் மனிதர்களைக் கடிக்க மனிதர்களும் வெறி கொண்டு இறக்கின்றனர். இம்மாதத்தில் சென்ற முழுமதியிலிருந்து இற்றைக்குள் ஒன்பதுபேர்கள் மாண்டனர்?' என்றார்கள்.

'எனக்குப் பாவம்கிடையாது. நான் இந்தத் தெருநாய்களைக் கொன்று விடுகின்றேன். யாது மொழிகின்றீர்கள்?' எனவும், ஊரார் சற்றுத் தியங்கினர். பின்னர் "துரை எய்தும் நல்வினை தீவினைகட்கு அவரே பொறுப்புள்ளவர் ஆதல் வேண்டும். எங்களுக்கு ஒன்றும் இல்லை" என்று அங்கிருந்தவர்களில் வயதில் சிறியார் ஒருவர் வாயிலாகத் தெரிவித்தனர்.

சலிவன் மீண்டும் அவர்களை நோக்கினார். 'இவர்களிடம் வீணில் உரையாடுவதிற் பயனில்லை. என் வினைகள் என்னையே பற்றுக' என்று தனக்குள் மொழியலாயினர்.

ஒருமணி நேரத்திற் குள்ளாக அவ்வூர் ஆங்கில மருத்துவ சாலைக்குச் சொல்லி அனுப்பி,

"தீண்டப்படாதவர்களைக்" கொண்டு ஊர் நாய்கட்கு உணவிற் கலந்து நஞ்சளிக்கும்படிக்கு ஆணை யிட்டார்.

பின்னர், இவர் அவ்வூரை விட்டகலு முன்பாக, நாய்கட்கு நஞ்சிட்டவர்களைக் கண்டு, 'நாய்களின் நிலைமை என்ன?' என்றார்.

'நாய்கள் எப்பொழுதும்போல் இருக்கின்றன'.

உணவிற் கலந்து நாய்கட்கு நஞ்சிட வில்லையா? நாய்கள் நஞ்சு கலந்த உணவை அருந்த மறுத்துவிட்டனவா?'

'இல்லை; துரையே! நாங்கள் தங்கள் ஆணைப்படி நஞ்சிட்டோம். நாய்களும் தின்றன. ஆனால் எங்கட்குப் பின்னாலேயே, வேறு சிலர் வந்து வேறு மாற்று மருந்துகளைக் கலந்த உணவை நாய்கட்கு அளித்தனர். இதனால், அவை முன்னர் அருந்திய நஞ்சுணவைக் கக்கி விட்டன. ஆகலின் நாய்கள் என்றும்போல் உள்ளன.'

எனவே, சலிவன் ஆற்றாராய் ஊர்த்தலைவரை அழைத்து,

'உங்கள் கருத்துதான் என்ன? நஞ்சிடும் பாவத்தை நானே ஏற்றுக் கொள்கின்றேன் என்றேன்; நீங்களும் ஒப்புக் கொண்டீர்கள்; பிறகேன், நாய்கட்கு மாற்று மருந்து இட்டீர்கள்!' என்றார்.

'ஒப்புக் கொண்டது உண்மையே. பின்னர் நாங்கள் இ[illegible]ப்பற்றிக் கூடிப் பேசினோம் எங்கள் மனதில் இரண்டு வகையான தடைகள் உதித்தன. முதலாவது நாய்கள் இறந்துபோனால் நாங்கள் பொறுப்பாளி யல்லாவிடினுங்கூட ஊர்ப் பார்ப்பனர் எம்மீதே பழியைச் சுமத்துவர்; பிறகு எம்மீது பெரும் அபாரதமும் விதிப்பர்; இம்மட்டுடனில்லாது அவர்கட்கு ஒரு பெரு விருந்தளிக்கவும் வற்புறுத்துவர்; பெருஞ் செலவில் காசிக்குச் சென்று கங்கையில்

தோய்ந்து பழி நீக்கிக் கொள்ளவும் சாத்திரம் ஓதுவர்; மேலும், துரை விஷமூட்டியபொழுது, அவைகட்கு நாங்கள் மாற்று மருந்து இடாது இருந்தோமாயின் பார்ப்பனர்கள் எம்மை மீளா நரகத்திற்கும் சபிப்பார்கள். விதி யிருந்தால் நாய்கள் இறந்திருக்கலாம். நாங்கள் என் செய்வோம்.?'

சலிவனும் என் செய்வார்? வாய் பேசாது சலிவனும் சென்றுவிட்டார். போம் வழியில் கபிலையின் எலும்புக்கூடு இருந்தது. அணித்தே சில நீல மணிகளும் எலும்புத் துண்டுகளுடன்விரவிச் சிதறிக் கிடந்தன.

குறிப்புகள்.

மாச்சரியம் என்று கூறுங்கள்; மதத்தின் உயர்ந்த நோக்கம் என்று கூறுங்கள்; எவ்விதமாகக் கூறினும், பசுவின் தெய்வீகத் தன்மை இந்துக்களின் மனதில் ஆணி போற் பதிந்திருக்கின்றது. திவான் பஹதூர் பண்டித ஜே. எல். பார்க்கவர், சட்டசபை வாதங்கள், 1921. புத்தகம் 1; பக்கம் 530.

பசுக்கள் தம் கன்றுகட்கும், குடும்பங்கட்கும் பாலளித்துக் கொண்டு வரும் வரையில், வேளாண்மைத் தொழிலாளர் அவைகட்குச் சிறிது தவிடும், புண்ணாக்கும், பருத்திக் கொட்டையும்; உளுத்தப்பொட்டும் அளிப்பர்; ஆனால் அவைகள் பால் மறுத்தனவாயின், அவைகளை அவர்கள் 'மேய்ச்சலுக்கு' வெருட்டி விட்டுவிடுவார்கள்—அரசாங்க விவசாயக் கமிஷன் அறிக்கை, 1928. பக்கம் 196.

நாய்களை நாம் உதைத்து அடித்து வெருட்டுகின்றோம். அவைகளின் எலும்புகள் தோல்களைக் கிழித்துக் கொண்டு மேல் எழுகின்றன. என்றாலும் ஒரு தெரு நாயை நாம்

கொன்று விட்டோமாயின் உடனே ஊரெங்கும் ஓரே கூக்குரல் உதிக்கின்றது:—மகாத்மா காந்தி; யுவ இந்தியா, நவம்பர் 4, 1926. பக்கம் 384.

பனிரண்டாம் அத்தியாயம்.

தனிமை.

.........எளிதில் மனக் கிளர்ச்சி அடையாதவர்களும், இந்தியாவில் உள்ள ஆண் மக்களால் பெண் மக்கள் வகித்து நிற்கும் நிலைமையைக் கண்டு இரக்கமடைவார்கள்-கேக்வார் மகாராணி சிமானுசாகேப். அகில இந்தியாப் பெண்கள் கல்விச் சீர்திருத்த மகாநாடு; புனு; ஜனவரி **5-8, 1927.** பக்கம் **22.**

உன் நிருபங்களின் உயர்வைப்பற்றி மறவாதே; அவைகளில் நீ சில சிறிய செய்திகளைப்பற்றி வரைந்திருந்தாலும், அவைகள் என் கண்களில் படுந்தோறும், பட்டினி கிடந்தான் ஒருவனுக்கு உணவு அளித்தமை போன்றிருக்கின்றன; நீர் வேட்கை மிகுந்து இறக்குந்தருவாயிலிருக்கும் ஒருவனுக்குத் தண்ணீர் அளித்தமைபோன்றிருக்கின்றன. ஏனெனில் தனிமையான வாழ்வு இவ்வாழ்க்கையில் இணையற்றதோர் தீமை என நீ அறிதல் வேண்டும். இங்கு கடினமான

உழைப்பில்லை; இடையூறுகள் இல்லை; முயற்சி கைவரப் பெறாமல் மனச்சோர்வும் இல்லை; பொருட்குறைவும் இல்லை. என்றாலும் தனிமை இருக்கின்றது—தனிப்பட்ட தனிமை; நாம் எவர்கள் நலத்திற்காக உழைத்துவருகின்றோமோ, அவர்கள் நம் நன்னோக்கத்தையும், உழைப்பின் தன்மையினையும் உணரக் கூடியவர்களன்று.

என்று எழுதி முடிக்காது, கான்சிடான்சுகார் என்பவள், தனது மருத்துவசாலை எல்லைச் சுவற்புறத்திற்கப்பால் சற்று தனது பார்வையைச் செலுத்தினாள். சூரியனின் எழுச்சி; அதன் நேரான கதிர்கள் தெள்ளிய நிழல்களை விளைத்தன; ஆங்கு கனவிற்கண்டதுபோன்று, சில பெண் உருவங்கள், உருவம் தடித்ததும் தடிக்காததுமாய் மெல்லத் தோன்றி அகன்றன. அருணோதய ஒளி இந்தியாவில் மாயத் தோற்றங்களை விளைக்கும்.

என்றாலும், எல்லைச் சுவர்க்கப்பால் உள்ள, ஓடுகளால் மூடப்பெற்ற மூன்று தாழ்ந்த "பங்களா"க்களிலும் குழுமி இருந்த ஜனக்கூட்டம் மாயத்தோற்றம் அல்ல என்று உறுதியாய்க் கூறலாம். நெடுங்காலமாகத் துன்பத்திற்குட்படுத்தப்பட்ட சிறுமிகளும் வயது முதிர்ந்த பெண்களும் நிறைந்திருந்தனர். "வாராந்தா" க்களில் இடமின்றிக் கட்டில்கள் காணப்பெற்றன. கான்சிடான்சுகார் என்னும் ஆங்கிலேய மருத்துவத் தலைவி, இந்துப் பெண்களைப்பற்றித் தான் கொண்டிருந்த நல்லெண்ணங்கள் வீண் கனவென்று எண்ணத் தொடங்கிவிட்டாள்,

பிறந்த நாட்டிற்கு, இந்தியாவில் தான் கண்டவைகளைப் பற்றி எழுதுவதையும் நிறுத்திவிட்டனள். தூய வாழ்க்கை இன்மையாலும்,உயரியநோக்கங்கள் இன்மையாலும்,கொடு

மைகளாலும் தன்னிடம் நோய் தீர்த்துக்கொள்ளுமாறு வரும் பெண்களைப்பற்றி வீணே எத்தனை முறைகள்தாம் மீண்டும் மீண்டும் எழுதிக்கொண்டிருப்பது?

என்றாலும் எத்தனை நாட்கள்தாம் தன் மனதில் எழும் கிளர்ச்சியை அடக்கி வைத்துக்கொண்டிருப்பது?

எனவே, இன்று, கான்சிடான்சுகார், 'என் மாதக்கூலி என்ன என்பதை நீ அறியாய். மாதம் 162 ரூபாய்கள். இவற்றுள் பதினைந்து ரூபாய்கள் நான் பிற்காலத்தில் வாங்கப்போகும் 'பென்ஷன்' சம்பளத்திற்காகப் பிடிக்கப்படும். ஆனால் நான் தனியாக இருந்து மருத்துவம் புரிந்தால் எவ்வளவு சம்பாதிக்கலாம் தெரியுமா? ஆயிரக்கணக்கான ரூபாய்கள். ஆயின், நான் எதற்காக இந்த மருத்துவச் சாலையில் இந்த சொற்பக் கூலிக்கு உழைத்தல் வேண்டும் என்று நீ நினைப்பாய். இங்குள்ள இந்துப் பெண்களும் என் கூற்றை நம்பமாட்டார்கள். காந்தி கூட இந்திய மருத்துவர்களைப் போல் எங்களையும் ஒக்கக் கருதுகின்றார். நேற்றுத்தான் சரத்சந்திர பானர்ஜியின் மனைவி அளித்த ஒரு விருந்தில், அவர்கள் தாய்ப் பாஷையில் என்னைப்பற்றிப் பேசினார்கள்.

"பல ஆண்டுகளாக மருத்துவச்சாலையில் உள்ள மருத்துவப் பொருள்களைக் கையாடுவதனால், இவள் நன்றாகக் கொள்ளை அடித்திருக்கலாம்" என்று பேசிக்கொண்டார்கள். 'என்றாலும், சரத்சந்திர பானர்ஜியின் மனைவியார் கற்றறிந்தவர். அவரை ஒரு நண்பராகப் பாராட்டி, மனதைப் புண்படுத்தாமல் உற்றது விளம்பவுங்கூடும். அவர் என்னைப் பற்றி இவ்வாறு கருதமாட்டார்.

"நிற்க, எனது துன்பங்கள் மொழிதற்பாலன அன்று. வேற்றுமையின்றி நாடோறும் நிகழ்வன. நான் இதுகாறும் இத்தகைய துன்பங்களைக் கடந்து அவைகளைப் பொருட்படுத்தாமல் இருப்பதற்கு எனக்கு ஆற்றல் இல்லையென்று கருதுதலும் கூடும்.

'குரங்குகளை எடுத்துக்கொள்; நேற்று நான் வேலை செய்துகொண்டிருக்கும்போது ஒரு பெரும் கூச்சல் எழுந்தது. அக்கூச்சலில் ஒரு பெண் குழந்தையின் வீறிட்ட ஓசையே யேலிட்டிருந்தது. உடனே திடுக்கிட்டுப்போய் வெளிச்சென்று பார்த்தேன். ஆங்கு ஒரு பெரும் குரங்கு ஒரு சிறு பெண் குழந்தையைக் கடித்துக்கொண்டிருந்தது. அக் குழந்தையின் காலொடிந்து போக, இரண்டு நாட்கட்கு முன்னர்தான், அதன் காலை நான் பொருந்த வைத்திருந்தேன். குழந்தை ஒரு மாம்பழம் தின்றுகொண்டிருந்தது. இதனை இக்குரங்கு ஒரு மரத்திலிருந்து பார்த்துக்கொண்டேயிருந்து, உடனே கீழே குதித்து வந்து மாம்பழத்தைப் பிடுங்கப் பார்த்தது. பெண் குழந்தை அதனை ஒளித்துவைக்க முயற்சித்தாள். எனவே, குரங்கு அவளைப் பத்துப் பன்னிரண்டு இடங்களில் நன்றாகக் கடித்துவிட்டது. நான் ஓடிச்சென்று வெருட்டவும் அது பல்லைக் காட்டிக்கொண்டு, வசை கூறிக்கொண்டே ஓடிப்போய், மேற்கூறையில் மற்றுமுள்ள பல குரங்குகளுடன் சேர்ந்துகொண்டு, கூறையிலிருந்த ஓடுகளைப்பிடுங்கி எறியத்தொடங்கிற்று.

ஓடுகள் என் ரண சிகிச்சை அறையைப் பாழ்படுத்தின. சில நாட்சட்கு முன்பாகத்தான் நான், சிக்கனம் பிடித்து இவ்வறையைச் சீர்ப்படுத்தியிருந்தேன்.

'அந்தக் குரங்குகளை ஏன் சுட்டுவிடக்கூடாது என்று என்னைக் கேட்பாய்; கூடாது. குரங்குகள் இந்துக்களின் சாமிகளாம். ஆகவே, நான் துணிந்து இவைகளைச் சுட்டுக் கொன்றேனாயின், என் மருத்துவச் சாலைக்கு இந்துக்கள் வரமாட்டார்கள். இப்பொழுதும்கூட மருத்துவச் சாலைகட்கு வருபவர்கள் தாழ்ந்த வகுப்பார்களும், பயிற்சியை அடைந்த சிற்சிலருமே. எனவே, பிற்காலத்தில், மருத்துவச் சாலையில் பயன் ஏற்படவேண்டுமென்ற நோக்கத்தைப் படைத்த நான் குரங்குகளைச் சுடலாகாது.

'மற்றொன்று கூறுவேன்; எமது மாகாண அரசாங்க உத்தியோகத்தர் ஒரு தனிமையான அறை வேண்டுமெனக் கூறியிருந்தார். நோயாளிகட்கு எம்மிடம் தனி அறைகள் உண்டு. இவைகள் நோயாளிகள் குடும்பத்துடன் இருந்து பல நலன்களையும் அடைவதற்கு சமையல் அறைகளுடன் உள்ளவைகளாம். இதற்கு நாளொன்றுக்கு ஒரு ரூபாய் குடிக்கூலி.

'எனவே, திரு. தாசு தன் மனைவியை இவ்வறைக்கு அனுப்பி வைத்தார். அவளுக்குப் பதினைந்து வயதிருக்கலாம் இதுவரையில் வயிறு வாய்த்தவள் அன்று. நான் பரிசோதனை செய்து பார்த்ததில் அவளுக்குக் குழந்தை உதிக்காத காரணம் புலனாயிற்று. என்னவென்று கூறுவேன்—சுத்தப் படுத்தித் தைத்து அவளைப் படுக்கையில் கிடத்தினேன். அதுபோது அவள் மாமி வசை கூறிக்கொண்டிருந்தாள்.

"ஒரு நாளுக்கு ஒரு முழு ரூபாயா? மேற்கொண்டும் மருத்துவச்சிக்கும் கூலி தர வேண்டுமே! இந்தச் சிறுமிக்கு நோவும் ஒரு கேடா? எப்பொழுது பார்த்தாலும் நோய்

எப்பொழுது பார்த்தாலும் கோளாறுகள்--குழந்தைப் பெறுவதும் இல்லை, இவள் பொருட்டும் என் மகன் காசை வாரி இறைக்கின்றானே! என்ன பொறுமை! எத்துணைப் பெருந் தன்மை! இவள் அவனுக்கு ஈடு மருந்திட்டாள் போலும்! வீடு வரட்டும் பார்த்துக் கொள்ளுகின்றேன்.''

நான் அந்தக் கிழவியைப் பார்த்துச் செம்மையாகக் கண்டித்துரைத்தேன். அதனால் சிறிது தன் மருமகளை என் மருத்துவச் சாலையில் உள்ள வரையிலாயினும் பார்த்துக்கொள்ளுவதாக மனமிரங்கினாள்.

'இங்கிலாந்தில் உங்களுள் சிலர் இந்துக்களின் உயர்ந்த தத்துவங்களைப் பற்றிக் கூறுபவர்களும் இருக்கின்றனர். இவர்கள் இந்தியாவிற்கு வந்து ஒரு நாள் தங்கி இருந்தாலும் போதியது. "உயர்ந்த'' தத்துவங்களின் தன்மையை நன்கறிதல் கூடும்!

'நேற்றைக்கு முந்திய நாள் தான் இச்சிறுமி என்னை நோக்கி எனக்குக் குழந்தை பிறக்குமா என்று வினவினாள், உண்மையை விளக்கி "முடியாது'' என்று எவ்வண்ணம் நான் கூறுவேன்? முடியும் என்று பொய் கூறுவதும் எங்ஙனம்? நான் சிறிது தயங்கவும் அக்குழந்தை உண்மையை அறிந்து கொண்டது.

"என்னை இனி என் கொழுநன் வீட்டிற்கனுப்பவேண்டாம். நான் இனி தாளவல்லேன். நான் இறப்பதற்குத் துணை புரியுங்கள்'' என்றது.

'இந்து மத தர்மப்படி, மநு வகுத்த முறைப்படி, ஒரு மனைவி ஒரு கணவனின் பொருள்—விலையுயர்ந்த மாடுகள், ஆடுகள், குதிரைகள் முதலியவற்றை ஒத்தவள்.

'எனவே, கொழுநன் தன் மனைவியை யாது வேண்டினும் புரியலாம். மருத்துவ சாலையினின்றும் படுக்கையில் கிடந்தாற்கூட, அதனைப் பொருட்படுத்தாது அகற்றிச்செல்லலாம்.

'ஆதலால் நான் அவளுக்குத் தக்கவிடை அளிக்காமல் ஒரு மயக்க மருந்தை ஊட்டிக், துயிலும்படிக்குக் கிடத்திச் சென்று விட்டேன். இத்தகைய கொடுமைகளை எல்லாம் நினைந்து நினைந்து என்மனம் புண்படுகின்றது. இது மிகவும் பரவியதாயுமிருக்கின்றது. சிந்திக்காமலும் இருக்க முடியவில்லை.

'காலைத் தேத்தண்ணீர் வந்துள்ளது. நான் இதனை அருந்திவிட்டு உடனே என் வேலைக்குப் போகவேண்டும். இக்கடிதத்தை வைத்துக்கொண்டு நீ அமைதி அடையவேண்டும்; என்னிடமிருந்து நீ ஓர்நீண்ட நிருபத்தை எதிர்பார்ப்பது கூடாது'. என்று கான்சிடான்சு கார் எழுதினாள்.

பின்னர் க[illegible]தாஸர் மனைவியைப் பார்க்கும் வண்ணம் கடுகிச் சென்றாள். அக்குழந்தையின் முகத்தில் ஒரு மாறுதல் கண்டு கார் சற்று வேகமாய்ப் படுக்கையின் அருகே ஓடிக் குழந்தையைப் பார்த்தாள்.

குழந்தையின் மாமி, வெற்றிலைபாக்கை மென்று உமிழ்நீரை அங்குள்ள சுவரில் உமிழ்ந்துகொண்டு யாது மறியாதவள்போல் உட்கார்ந்துகொண்டிருந்தாள்.

'இங்கே வா'

எனலும், சற்றுத் தயங்கி மாமி காரை அணுகினாள்.

'இக்குழந்தைக்கு இரவு என்ன நடந்ததென்று ஒளியாமல் கூறுவாயாக.'

'நடந்தது என்ன? அவள் தூங்கிக் கொண்டிருந்தாள்'

'நீ அவளை இங்குச் சிதைந்துபோன நிலைமையிற் கொண்டு வந்தாய். நான் கிழிந்துபோன இடத்தைப் பொருந்தத் தைத்திருந்தேன். இன்று அவள் மீண்டும் மிகவும் சீர்கேடாய் இருக்கின்றாள். இங்குப் படுத்திருந்தவள் நீயே; அவள் இந்த நிலைமையில் அலங்கோலமாய் இருப்பது ஒரு மனிதனாற்றான் ஆகவேண்டும். இங்கு வந்தவன்யார்?'

மாமியின் விழிகளில் தீப்பொறிகள் சிந்தின.

'வேறு யார் இங்கு வரக்கூடும்? எங்கள் குடும்பம் அத்துணை இழிதகையானதா? என் மகன்தான் வந்திருப்பான். இவளுக்குரிய கொழுநன்; இவள் நாதன். அவன் இவளை விரும்பினான். எனவே, நான் இங்குள்ள காவலர்கட்குப் பொருள் தந்து, அவனை உள் நுழைத்து இவளிடம் இன்பம் பெற விடுத்தேன். இரவு வந்தான்; விடியற்காலத்திலேயே திரும்பி விட்டானே! என்னைத் துன்புறுத்தாதே. நான் தூங்கவேண்டும்'—என்றாள் மாமி.

கான்சிடான்சுகார் என் செய்வாள்! வாய் பேசாது தன் அறைக்குட் சென்று ஆழ்ந்து சிந்தித்தாள். உடனே ஒரு எண்ணம் உதித்தது. அதன்பயனாய் சரத் சந்திர பானர்ஜியின் மனைவிக்கு ஓர் கடிதம் எழுதி விடுத்து, வெளிப் போந்தாள்.

'நான் தங்களிடம் இதனை வீண் பேச்சிற்காகக் கூற முன் வரவில்லை. இன்றுதான் தங்களைப்பற்றி நான் என்னாட்டிற்கு ஒரு கடிதத்தில் குறிப்பிட நேர்ந்தது. தாங்கள் எனக்குத் துணை புரிதல் வேண்டும்' என்று சரத் சந்திர பானர்ஜியின் மனைவியின்பால் நிகழ்ந்தவற்றை கான்சிடன்சுகார் விரிவாக எடுத்துரைத்தாள்.

சரத்சந்திர பானர்ஜியின் வீடு மேனாட்டு நாகரிகத்தை ஒட்டி அழகுபடுத்தப் பெற்றிருந்தது. பானர்ஜியின் மனைவியும் அழகிய உயர்தர ஆடைகளை அணிந்துகொண்டிருந்தாள். காரை அன்பாய் வரவேற்று கார் கூறியவற்றைச் செவி சாய்த்துக் கேட்டு, இறுதியில் 'நீ அறியமாட்டாய். ஆனால் மேனாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்த நான் உன் மனப்பாங்கை அறிவேன். எமது பண்டைய நாகரிகமும் மதச்சிறப்பும், உயரிய கொள்கைகளும், பக்தியும், கவித்திறமையும், மேனாட்டார்கள் மனதில் பதியத்தக்கனவன்றி அவர்களால் எமது நாகரிகத்தை அறிய முடியவே முடியாது.

'நன்றாகக்கேள்; ஒரு இந்துப் பெண் மனமிரங்கத்தக்க நிலைமையில் இல்லை. அவள் இன்பந்தரும் நிலைமையில் உள்ளாள். ஆதலாற்றான், இவள் கணவன் வேறு பெண்களை விடுத்து, தன் மனைவியையே விழைந்தான். மனைவி நோயுற்றிருந்தாலும், அவள்மீதிருந்த அன்பால் பிறரைக் கருதினவன் அன்று. இவளும் ஒரு நல்ல மனைவி. ஆதலாற்றான், தன் கொழுநனின் கருத்திற்கிசைந்து அவனுக்கு இன்பம் அளித்தாள்' என்றாள்.

கான்சிடன்சுகார் திகைத்துப் போய் தன் மருத்துவச் சாலைக்குத் திரும்பினாள். 'நான் துவக்கியபடி முடிக்கின்றேன். தனிமையை ஆற்றவல்லேன்; அவர்களுக்கு எட்டுணையும் உணர்ச்சியில்லை; இல்லை; இல்லை' என்று கடிதத்தை முடித்தாள்.

இந்துப் பெண்கட்கு

நமது எண்ணங்கள் ஈடேற வேண்டுமாயின், நாம் பலன் உண்டாகத் தக்க வழியில் உழைத்தல் வேண்டும். இந்தியாவில் நடைபெறும் சிறு கூட்டங்களும் பெருங்கூட்டங்களும் உயரிய நோக்கங்களை வெளிப்படுத்துவதுடனேயே முடிவடைகின்றன. அங்கே, அழகிய சில சொற்போர்களும், அழகிய சில தீர்மானங்களுமே காணப்படுகின்றன. இதனாற்றான் ஐம்பதுஆண்டுகளாக முயற்சி செய்தும்கூட, இற்றைக்கும் பெண் கல்வி துவக்கநிலைமையிலேயே இருக்கின்றது.-போபால் பேகம் சாகிபு. அகிலஇந்தியா பெண்கள் பெருங்கூட்டத்தின் முன்னுரை; டில்லி பிப்ருவரி, **1928.**

என் முதல் நூலுக்கு நான் வழங்கிய பெயரைக் கண்டு உங்களிற் சிலர் வருந்தியிருக்கலாம். இந்தியத் தாய் உங்களுக்கு ஓர் தெய்விகமான நாடு என்று கூறுவீர்கள்; உங்களின் உயர்வான நாகரிகம், மக்கள் தொகுதி முதலியவற்றின் முதிர்ந்த விளைவென்றும் கூறுவீர்கள்; இந்தப் பெயரை நான் உங்கள் நாகரிகத்தால் ஏற்பட்ட பலன்களை உண்மையாக விளக்கிக் கூறும் என் நூலுக்குத் தலைப்பெயராகக் கொண்டுள்ளேன்.

இந்தப் பெயரை நான் ஒரு நோக்கத்துடனேயே வழங்கினேன். மேடைகளில் ஏறி வெறும் வீரம் கூறும் சொற்பெருக்குகளின் தன்மையினையும் ஒரு சமூகத்திற்குத்தாயான பெண்களுக்கு அளிக்கப்பட்டுள்ள நிலைமை

யினையும் சீர் தூக்கிக் காண்பித்து, உங்கள் ஆண் மக்களின் அறிவுடைய தேச அன்பையும், அறிவுணர்ச்சியையும் கிளர்ச்சி புரிய வேண்டுமென்பதே என் கருத்து.

இந்தக் காலத்தில், ஒரு தேசம் தன் பெண்மக்களை எந்த நிலைமையில் வைத்திருக்கின்றதோ, அந்த நிலைமைக்கு மேலாக அத்தேசம் ஏனைய நாட்டினர்களால் போற்றப்படமாட்டாது. இப்பொழுதுள்ள தேசங்களில், எந்தத்தேசமாயிருப்பினும், அது தனது உழைப்பைக் காண்பியாது தான் கோரியிருக்கும் உயர்ந்த நோக்கங்களைப்பற்றி மட்டும் கூறி தன் பெருமையை நிலைநிறுத்திக்கொள்ள முடியாது.

உங்களின் பண்டைய சாத்திரங்கள் கூறுவன எத்தன்மைத்தாய் இருப்பினும் என்ன? அவைகள் சாத்திரங்களாய் இருப்பதுபற்றியும், அவைகள் அழகாகப் புனைந்துவரையப் பெற்றமை பற்றியும் உங்கள் சாத்திரங்களை ஒருவரும் புகழமாட்டார்கள்; ஆனால் அவைகளால் நீங்கள் அடைந்த நிலைமை என்ன? நலன்கள் யாவை? என்றே ஆராய்ந்து உங்கள் சாத்திர உயர்வைப்பற்றி பெருமையாகவோ சிறுமையாகவோ பேசுவார்கள்.

உமது நாகரிகம் எமது மேனாட்டு நாகரிகத்தை ஒட்டி ஒழுகி, எம்மை மகிழ்விக்க வேண்டும் என்பதில்லை. நாங்கள் உங்களை எமது நாகரிகத்தோடு ஒப்பிட்டு நோக்கியும் பார்க்கப்போவதுமில்லை. ஆனால், பொதுவாக மனித சமூகம் என்று ஒன்றிருக்கிறது; இச்சமூகத்தில் அடிப்படையான சில நலன்கள் எல்லாத்தேசங்கட்கும் பொதுவாகவே இருக்கின்றன. இந்தப் பொது நலன்கள் உங்கள் நாகரிகத்தில் உள்ளதா என்றே நாம் சீர்தூக்கிப் பார்ப்போம். ஆனால், இப்பொழுது இருக்கும் உண்மை நிலைமையை நீங்கள் மாற்றிக்கொண்டாலன்றி உங்களைப்பற்றிக் கொண்டுள்ள எங்களது முடிவான கருத்து வேறுபடுவதற்கில்லை.

எமது மேனாட்டு நாகரிகத்தை நீங்கள் அப்படியே பின்பற்றி நடக்கவேண்டுமென்று ஒருவரும் கூறவில்லை. உங்

கட்கு எவ்வளவு சுயேச்சை இல்லையோ அவ்வளவு சுயேச்சை எமது அமெரிக்கப் பெண்கட்கு உண்டு. இச்சுயேச்சையை எமது பெண் மக்கள் பெரும்பான்மையோர் தங்களது குடும்ப நலனுக்கு ஈடுபடுத்திக்கொண்ட போதிலும், சிறுபான்மையோர் இச்சுயேச்சையை தீயவழிகளில் ஈடுபடுத்துகின்றனர் என்பதை நான் மறுக்கவில்லை. இவர்களைப் பற்றித்தான் நீங்கள் அடிக்கடி கேள்விப்படுகின்றீர்கள்.

பல நூற்றாண்டுகளாக, நீங்கள் அடிமைப்பட்டு வாழ்ந்தமையின் பயனாய், நீங்கள் ஒரு பெரும் பரிசு பெற்றிருக்கின்றீர்கள். நீங்கள் அடங்கி நடப்பதைக் கற்றுக்கொண்டீர்கள். அடங்கி நடப்பதனால் மனதிற்கும், நன்னடக்கைக்கும் உறுதி ஏற்படுகின்றது. இவ்வுறுதி உங்கள் ஆண் மக்களைப் பார்க்கிலும் உங்களிடத்தில் சிறந்து விளங்குகின்றது. இவ்வுறுதியைத்தான் நீங்கள் இப்பொழுது உங்கள் ஆண்மக்களின் சார்பாய்ச் செலுத்துதல் வேண்டும்.

எப்படியாவது கட்டை அறுத்துக் கொண்டு வெளியேறும் மனோவன்மையைக் கொள்ளுதல் வேண்டும். நீங்கள் உங்கட்காகப் புதிய சட்டங்கள் ஏற்படுத்திக்கொண்டு புது ஒளியைப் பெறுதல் வேண்டும். 'இந்திய ஆண்மக்களின் இளம் பருவத்தினராய ஆண் குழந்தைகளின் இளம் முதற் பருவம் முற்றிலும் உங்கள் பாதுகாப்பிற்றான் இருக்கின்றது. நீங்கள் தான் இக்குழந்தைகட்கு முதன்முதலாக அவர்கள் மனத்தில் தூய்மையைப்பற்றியும் நீதியைப் பற்றியும், பெண்கள் மீது உண்மையான காவலன்பைப்பற்றியும் விளக்கிப் பதியவைத்தல் வேண்டும்.

நூற்றுக்குத் தொண்ணூறு பேர்கள் சிற்றார் வாழ்பவர்களாய் இருக்கும் ஒரு சமூகத்தில்; ஆண்கள் எவ்வளவு அழகாய்ப் பேசியபோதிலும்கூட பெண்கள் ஒரு பள்ளிக்கூட ஆசிரியராகவோ, மருத்துவ சாலைப் பணிப்பெண்ணாகவோ வெளிச்செல்ல அஞ்சக்கூடிய நிலைமையில் ஆண்கள் நடந்து கொள்ளும் ஒரு சமூகத்தில்; நீங்கள் உங்கள் தேசத்

திற்கு நலனிழைக்க வேண்டுமானால் நீங்கள் பெரும் புரட்சி புரிய வேண்டியவர்களாய் இருக்கின்றீர்கள்,

உமது நாட்டில் பிறநாட்டார் சில நலன்களை இழைப்பார்கள் என்று நீங்கள் வெகு காலமாய் எதிர்பார்த்து விட்டீர்கள்; உங்களில் உள்ள சில பிரம்ம சமாஜிகளை எதிர்பார்த்து இருந்து விட்டீர்கள்; நீங்கள் நெஞ்சிரக்கமின்றி வெறுக்கும் திண்டப்படாதார்களின் வகுப்பிலிருந்து கிறிஸ்துவர்களாய் மாறியவர்களை எதிர்பார்த்து இருந்துவிட்டீர்கள்; எத்துணை காலம் எதிர் பார்ப்பது?

உங்கள் நாட்டில் உள்ள எண்ணிறந்த பாஷைகளில் உங்களில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் நூற்றுக்கு இருவர் தாம்—இதற்கும் உங்கள் பண்டையமத தர்மங்களே காரணமாகும்.

எழுதப் படிக்கத் பெரியாதவர்களின் தொகை உங்களில் மிகுந்திருக்கின்றது; பரவியுமிருக்கின்றது; ஆகலின் உங்கள் துணையின்றி அவர்களுக்குப் பயிற்சி அளிப்பது வீண் முயற்சியாகும் கற்றறிந்த நூற்றுக்கு இருவரான உங்கள்மீதுதான் பிறருக்குக் கல்வி பயிற்றும் கடன் சுமத்தப் பெற்றுள்ளது.

ஒரு காலத்தில், உங்கள் பழக்க வழக்கங்களை உதறி எறிந்து விட்டு, தன் பெருந்தன்மையின் பயனாய் இந்தியப் பெண்களின் நலத்திற்கே பாடுபட்ட ஒருவரிருந்தார். இவர் ஓர் பார்ப்பனக் கைம்பெண்; பண்டிதை ராமாபாய் எனப்படுவார்; இவர் தன் சாதித் தற்பெருமையை கைவிடுத்து அமரிக்காவிற்குச் சென்று, தன் தேசம் மறுத்த உதவியை நாடினார்.

அமரிக்காவில் இவர்:

'என் நாட்டில் உள்ளவர்கள் பெண் கல்விக்கு எதிரிடையாய் இருப்பதால், அவர்களின் துணையை பேச்சுவகையிலாயினும் பொருள் வகையிலாயினும் கொள்ளுதல் அரி

தாய் இருக்கின்றது. இதைப்பற்றி இப்பொழுது நான் உயர்தர இந்துக்களிடம் பேசுவதிற் பயனில்லை. அவர்கள் என்னை ஏளனம் புரிகின்றார்கள். அல்லது வாளாவிருந்து விடுகின்றனர். தாய்களே! தந்தைகளே! உங்களின் அருமைக் குழந்தைகளின் நிலைமையினையும் அவர்கள் பருவத்தில் உள்ள இந்தியக் குழந்தைக் கோடிகளின் நிலைமையினையும் ஒப்பிட்டுப் பாருங்கள். இந்தியர் குழந்தைகள் பண்டைய பழக்க வழக்கங்களாம் கொலை மேடைகளுக்கு இலக்காய் இருக்கின்றனர். ஆகலின், நீங்கள் அங்குள்ள எண்ணிறந்த கைம்பெண் குழந்தைகளை அவர்களைக் கொடுமைப் படுத்துபவர்களினின்றும் ஈடேற்ற வேண்டாமா என்று சிந்தியுங்கள். இந்தியப் பெண்கள் விடுதிகளிலிருந்து நெஞ்சத்தைப் பிளக்கத்தக்க அழுகுரல் எழுகின்றது. ஆயிரக்கணக்கான குழந்தைக் கைம்பெண்கள் தங்கள் நிலைமைக்கு ஒரு விடுதலையுமின்றி இறக்கின்றார்கள். ஆயிரக்கணக்கான குழந்தைக் கைம்பெண்கள் நெறிதப்பி நடந்து அதனால் ஏற்படும் இழிவின் கொடுமையில் நசுக்குண்டு கிடக்கின்றனர். அமெரிக்கர்களாகிய நீங்கள் ஒரு பொதுநலம் பற்றி ஊக்கம் கொண்டு, அவர்களின் அடிமைத்தன்மையினையும் கொடுமைகளையும் விலக்கக் கூடாதா? மனித சமூகத்தில் அன்பு கொண்ட உங்கள் செவியில் இந்தியப் பெண்களின் அழுகுரல் மெல்லென வொலிப்பினும் அது உங்கள் மனதில் கிளர்ச்சியை விளைக்கும் என்று நான் தாழ்ந்து தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.' என்று இந்த வீரமுள்ள பெண்மணி கடல்கடந்து அமெரிக்கர்களிடம் முறையிட்டுப் பின்னர் இந்தியாதிரும்பி பெண்களின் விடுதலைக்காக உழைத்து வந்தார். இது நிகழ்ந்து நாற்பது ஆண்டுகள் ஆகின்றன. இவர் ஆறு ஆண்டுகட்கு முன்னர்தான் இறந்தார். இவர் இறக்கும் காலத்தில் கூறிய உரைகள் இன்றைக்கும் உங்கட்கு செவிடன் செவியில் ஊதிய சங்கென இருக்கின்றது. இன்றைக்கும் உங்கள் பெண் மக்களின் விடுதலைக்காக நீங்கள் மேனாடு சென்று பொருள் தேடுகின்றீர்கள்.

பண்டிதை ராமாபாய் அரை நூற்றாண்டுக்கு முன்னர் உழைப்பில் ஈடுபட்டு 1922ல்தான் மரணமடைந்தார். இந்தியப்பெண்கட்காக ஒரு இந்தியப் பெண் இவ்வாறு உழைத்துவருவதைக் கண்ட மகாத்மா காந்தி இரண்டாண்டு கட்கு முன்னர்தான்;

"இந்தியப் பெண்கள் தங்கட்கு நேரிடும் தீமைகளை எதிர்க்க வன்மையற்றுள்ளார்கள். இதற்கு ஆண்மக்களே காரணம் என்பதில் ஐயப்பாடில்லை. ஆனால், பெண்கள் ஆண்கள் மீதுமட்டும் தமது குறைகளைச் சுமத்திப் பேசி விட்டு வாளாவிருத்தல் கூடுமா? தாங்கள் தாய்களாக விளங்கும் ஆண்கட்கும், பெண்கட்கும் இவர்கள் சீர்திருத்த உழைப்பில் இரங்கி ஈடுபடுவது கடனாகும். இப்பொழுது படித்துள்ள படிப்பெல்லாம், மணமாயதும் மணமகன் இன்பத்திற்குரிய கருவிகளாய் இருப்பதற்கா? அல்லது நலிந்துபோன சிறு குழந்தைகளைப் பெறுவதற்கா? பெண்கட்கு 'வோட்' உரிமை வேண்டுமென்றால் அவர்கள் இதற்காக வாதாடலாம். இதனால் களியாட்டத்துடன் சிறிது காலமும் போக்கலாம். இதற்கு நேரமும் அல்லற்பாடும் வேண்டுவதில்லை. ஆனால், குழந்தை மனைவிகளிடத்தும், குழந்தைக் கைம்பெண்களிடத்தும் வேலை செய்து வரும் வீரப் பெண்கள் எங்கே? குழந்தை மணம் அற்றுப் போம் வரைக்கும் பருவம் அடைந்த பின்னர் தங்கள் மணம் விழைந்த மணமகனையே மணம் புரிந்து கொள்ளுவோமென்று வற்புறுத்தும் மனோ வலிமை ஏற்படும் வரைக்கும் பெண் மக்களிடை உழைத்துவரக்கூடிய வீரப்பெண்கள் எங்கே?"

மகாத்மா காந்தி கூறும் கண்டனத்தில் இந்துப்பெண்களைக் கண்டிப்பதற்கு நீதியும் நேர்மையும் சிறிதுமில்லை. பன்னூற்றாண்டுகளாக அடிமைப்பட்டவர்களை குறைகூற முடியாது. ஆனால், அவர்களினின்றும் வேறுபட்ட கல்விப் பயிற்சி பெற்ற நீங்கள்—சிலராகிய நீங்கள்—எந்தக் காலத்

தில் உங்கள் ஆடவர்கள் உங்கட்கு விடுதலையளித்து புதிய ஒளியை அளிக்க மறுக்கின்றார்கள் என்று நன்கறிந்து கொண்டீர்களோ, அந்தக் காலத்திலேயே உங்கள் போரில் பகுதி வெற்றி பெற்றதாக அறிந்து கொள்ளுங்கள்.

ஏன்?

பல நூற்றாண்டுகளாக உங்களின் அறிவைப்பற்றியும், கற்பைப் பற்றியும், புகழ்ந்துரைக்கப் பெற்றுள்ளது. உங்கள் வீரச்செயல்கள் உலகத்தையே வியக்கச் செய்திருக்கின்றன. உங்கள் தாய்கள் தங்கள் கொழுநருக்காக உடன்கட்டை ஏறியிருக்கின்றனர். ஆகலின், உங்கள் குழந்தைகளுக்காக, முன்னையிலும் பன்மடங்கு இடுக்கண்களை அடைந்து உழைக்க நீங்கள் பின் வாங்கமாட்டீர்கள். என்றாலும் எச்சரிக்கை!

உங்களை ஈடேற்றும் உங்கள் ஊக்கத்தை வீண் பேச்சில் செலவிட்டு இழந்து விடாதீர்கள். அழகிய சொற்பெருக்குகளிலும், காதிற்கு இன்பகரமான தீர்மானங்களிலும், வீண் சட்ட திட்டங்களிலும் உங்களுக்கு வெற்றி புகட்டக்கூடிய மனோவன்மையை இழந்துவிடாதீர்கள்.

உங்கள் தேசத்தின் தட்பவெப்ப நிலைமையின்மீது பழி சுமத்தி வீண்காலம் போக்காதீர்கள். உங்கள் தேசத்தின் தட்பவெப்ப நிலைமையை நீங்கள் மாற்றிக்கொள்ள முடியாது. ராமாபாய் இதற்குக் களைக்கவில்லை; நீங்கள் களைக்கப்போகின்றீர்களா?

தேசிய அடிமை வாழ்வு மீதும் தேசிய வறுமைமீதும் பழி சுமத்தி சீர்திருத்த வேலையை நெகிழ விடாதீர்கள்.

உங்கள் ஆண் குழந்தைகட்கு அறிவிலும், தேக வன்மையிலும், பயிற்சியிலும் முதிர்ந்த தாய்கள் ஏற்படும் காலம் வரைக்கும் உங்கள் நாட்டில் ஒரு நோக்கம்பற்றிச் செல்லும் ஆண்களைப் பெறுதல் அரிது; இந்தியா தலை நிமிர்ந்து சுயேச்சை அடைதலும் அரிது.

உங்கள் நாட்டிலிருந்து நீங்கள் அடையும் கொடுமைகளை மறுத்துரைத்து உங்கள் தத்துவ சாத்திரங்களின் உயர்வைப் பற்றியும், ஞான மார்க்கத்தின் பெருமையைப் பற்றியும், இதிகாசங்களின் அழகைப்பற்றியும் எடுத்துரைக்கும் தூதர்கள் இங்கு வருகின்றார்கள். இவர்களைக் கண்டு இங்கு சிலர் ஏமாற்றமடைகின்றனர். அவர்களால் எங்கள் மனம் அன்பு வழியில் செல்லுவது தான் தடைபடுகின்றது; எங்கள் உதவியையும் நீங்கள் பெறுவது தாமதப்படுகின்றது.

உங்கள் ஆண்மக்கள் செய்துள்ள சீர்திருத்த வேலைகளைப் புகழும்படிக்கு எம்மிடம் கூறுவார்களும் உண்டு. உங்கள் நாட்டின் பரப்பையும் அங்குள்ள சனத்தொகையின் விரிவையும், உங்கட்குள்ள குறைகளையும், அக்குறைகளைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அங்குள்ள நிலைமையினையும் சீர்தூக்கிப் பார்க்கின்ற காலத்தில், உங்கள் நாட்டில் நடைபெறும் சீர்திருத்த வேலை எட்டுணையும் பாராட்டத் தக்கதன்று; இதற்கென உங்கள் ஆண்மக்களைப் போற்றுவது தூற்றுவதையே ஒக்கும். நான் எழுதியுள்ள பன்னிரண்டு கட்டுரைகளும் உண்மை நிகழ்ச்சிகள். உங்களிற் சிலர் இத்தகைய நிகழ்ச்சிகளை அறியாதவர்களாயும் இருக்கலாம்.

ஏனெனில், நீங்கள் உங்கள் நாட்டின் முழுப் பரப்பையும் அறிந்தவர்களன்று. ஆகலின் நான் எழுதியுள்ள கட்டுரைகள் அந்தந்தப் பகுதிகளின் உண்மையில் நிகழ்ந்தவை என்பதில் ஐயமில்லை.

ஆகலின் என் கட்டுரைகளைக் கண்டு சினங் கொள்வதிற் பயனில்லை. இன்றும் சிலகாலம் வரைக்கும் நீங்கள் உள்ள நிலைமையில் உங்கட்கு மேனாட்டாரிடமிருந்தே உதவி வேண்டியதாயிருக்கின்றது. எனவே, உங்கள் குறைகளும் இவைதாம் என்று மேனாட்டார் நன்கறிதல் வேண்டும். என் கட்டுரைகள் உங்கள்மீது தூற்றுதலாக வரையப் பெற்றுள்ளன என்று கூறுபவர்கள் மேனாட்டாராய் இருப்

பினும் கீணாட்டாராய் இருப்பினும் உங்கள் நண்பர்கள் அல்ல. உங்கள் புண்களை ரோஜா மலர்கொண்டு அழகாக ஒளித்து வைப்பவர்கள் உங்கள் நண்பர்களாதல் எங்ஙனம்?

சில திங்கள்களாக, உங்கள் நாட்டில் உள்ள பெண்கள் சீர் திருத்த வேலைகளில் இறங்கி உழைத்து வருவதாய் அறிந்து இங்குள்ள அமெரிக்கர் உங்களைப் பாராட்டுகின்றார்கள். கொடுமைகளைப் பொறுத்துக்கொண்டே இருப்பதைப் பார்க்கிலும், ஒரு வலிமையில் மிக்க, நேர்மையான, வீரமான சமூகத்தை உங்கள் உழைப்பின் பயனைப் அடைதல் சிறப்பில் மிக்கதாம்.

மேனாட்டார்களாகிய நாங்கள் உங்களுடன் மறைப்பின்றி, ஏமாற்றமின்றி நண்பர்களாய் இருத்தல்நலம். சூரிய ஒளியால் நன்மை குன்றுவதில்லை என்றும், தீமையே அகற்றப்படுகின்றதென்றும் நாங்கள் கருதுகின்றோம்.

பொய்யுரை கூறி பிறர் பாராட்டுதலை அடைவது விழலாகும். நாம் ஒருவர்க்கொருவர் உண்மையை அறிதல் வேண்டும். இதனால் விளையும் புண்கள் ஒழுங்கான முறையில் விளைவன. இதனால் நாம் பெருமையையே அடைவோம். நம்மிருவர்க்கும் குறைகள் உண்டு; குணங்கள் உண்டு; ஆனால் இவைகளை அறிந்து ஒருவர்க்கொருவர் துணையாய் நிற்றல் வேண்டும்.

61843

முற்றும்

மான் பிரஸ், காஞ்சீபுரம்.

ஞானசூரியன்

(இரண்டாம் பதிப்பு)

இப்புத்தகத்தின் முதற்பதிப்பு-அவை அச்சிட்ட சில தினங்களுக்குள் செலவாய்விட்டமையே தமிழ் மக்களுக்கு இப்புத்தகத்தின் மீதுள்ள ஆவல் நன்கு விளங்கிற்று. ஆகையால் இரண்டாம் பதிப்பு அச்சிட்டு முன்விலைக்கு பாதி விலையாகிய அணா எட்டுக்கு ஏராளமாய் கொடுத்து வருகிறோம். சொற்ப பிரதிகளே கைவசமுள்ளன. புத்தகத்திற்கு முந்துங்கள்.

இப் புத்தகத்தைப் பற்றி ஞானசாகரம் பத்திராதிபர் சுவாமி **வேதாசலம்** அவர்கள் பின்வருமாறு எழுதுகிறார்.

* * * வடமொழிப் பழைய நூல்களை நன்கு பயின்றறியமாட்டாமல், ஆரியப் பார்ப்பனர் அவற்றை உயர்த்துரைக்கும் மயக்குரைகளில் வீழ்ந்து, அவற்றைக் குருட்டுத்தனமாய்ப் பாராட்டிக் கொண்டிருக்கும் நம் தமிழ் மக்களின் அம்மயக்க இருளை ஓட்டி, வடநூல்களின் ஊழலும், அவற்றின்கண் தமிழ் மக்களைப் பாழாக்குதற்குப் பார்ப்பனர் எழுதி வைத்திருக்கும் பொய் மாயப் புரட்டுகளும் நன்கு விளங்கக் காட்டுந் திறத்தது, இஞ் ஞானசூரியன் என்னும் நூல் என்பதில் ஓர் எட்டுணையும் ஐயமில்லை. வடநூல்களிலிருந்து இதன்கண் எடுத்துக் காட்டியிருக்கும் மேற்கோள்களும், அவற்றிற் கெழுதியிருக்கும் தமிழுரைகளும் முற்றிலும் உண்மை யென்பதில் ஐயமில்லை. இந்நூல் உயர்ந்த உண்மைப் பொருள் வாய்ந்தது.

7—10—1927.

பிரதி 1-க்கு 0—8—0 தபால் செலவு வேறு.

திராவிடன் பதிப்பகம்,

நெ. 14, மவுண்ட்ரோட், சென்னை.

திராவிடன் பதிப்பகத்தில்

கிடைக்கும் புத்தகங்கள்.

1.	சாமிகளின் அடிமைகள்	1	8	0
2.	ஞானசூரியன்	0	8	0
3.	இதிகாச ஆராய்ச்சி அல்லது இராமாயணத்தின் ஆபாசம் (பாலகாண்டம்)	0	4	[illegible]
4.	இராமலிங்கசுவாமிகள் பாடல்திரட்டு	0	2	[illegible]
5.	சுயமரியாதைத் தாலாட்டு	0	2	0
6.	சோதிடக்கும்மி	0	2	0
7.	சுயமரியாதைப் பாடல்கள்	0	2	0
8.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை ஒரு சிறந்த நாடகம் (அச்சில்)			

மானேஜர்,

திராவிடன் பதிப்பகம்,

மவுண்ட் ரோட், சென்னை.

குமரன் பிரஸ், காஞ்சீபுரம்